Sep. 1954
Vol. 1
No. 10

904

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

விஜய ௵ ஆவணி—புரட்டாசி

இந்த இதழில்

★ போதும், போதும் பட்டணவாஸம்! (சிறு தொடர்கதை—முதற்பாகம்)

★ தீப்பெட்டியில்லாத தேசம்

★ மனிதன் ஆயுளை நீடிக்கும் பிராணிகள்

★ அழகாய்ப் பிறந்தால் ஆபத்து

★ இறப்பிலும் கிறுக்கு

★ அவசரப் பிறவிகள்

இன்னும் பல அரசியல், சமூக, விஞ்ஞான சுகாதாரக் கட்டுரைகள், கதைகள், பிரபஞ்ச விநோதங்கள்.

128 பக்கங்கள்

8 அணா

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ் மானுபாக்சரிங் கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.



அவ்வை ப்ரொடக்ஷன்ஸ்

ரத்தபாசம்

இப்பொழுது

சித்ரா, காமதேனு, பாரத்

லக்ஷ்மி (பெரம்பூர்)

மற்றும் தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்

("எஸ்-100" ஸால்வென்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK : : CALCUTTA - 32

Branches : **Delhi - Bombay - Madras**

மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

SREE AMBIKA EMPORIUM

DASARPURAM THIRUNINDAYUR P. O.
(TINNANUR R. S.) S. R,



Manufacturers of :—

B & C Ready-made Garments & Fancy Bags

Sole Proprietor :
M. K. RANGANATHAN

திரட்டு பொருளடக்கம்

செப்டம்பர் 1954

மதத் தலைவர் ஆகாகான்	...	5
விழிப்பு	...	7
அப்பு ஸ்தலம்	...	17
மணமக்கள் சந்திக்க நூதன வழி	...	19
மாணவர் நகர்	...	20
வாழ்வளிக்கும் பிராணிகள்	...	22
தொண்டருக்குத் தடங்கல் இல்லை	...	25
கொடுமையால் அழிந்த கொடுங்கோலன்	...	26
அழகாய்ப் பிறத்தால் ஆபத்து	...	30
மாமனுருக்கும் மாமியாருக்கும் மட்டும்	...	33
தனயனைத் திருத்திய தந்தை	...	34
இஞ்சினீயர் பசு	...	36
அதிகாரிகள் மனைவிகளுக்கு	...	37
பேனு மன்னன் மக்களின் நண்பன்	...	38
பிரார்த்தனைப் பலித்தது	...	40
ஹாஸ்ய எச்சரிக்கை	...	42
பட்டுப் பாய்	...	43
இறப்பிலும் கிறுக்கு	...	48
தீப்பெட்டி யில்லாத தேசம்	...	50
அவசரப் பிறவிகள்	...	52
உயிரளிக்கும் உணவு	...	54
உத்தம யோகிகள்	...	57
ரேடியோவிலும் தொடர்கதைகள்	...	58
ரயில் வண்டியும் மாட்டுவண்டியும்	...	60
அடிமைத்தனத்திற்கு அஸ்திவாரமிட்டவர்	...	61
பழமொழிகள்	...	65
பாரதத்துப் பெண்	...	66

ஆலய ஆபரணங்கள் ... 68
வேண்டாம் வெறுப்பு ... 69
வீட்டுக்கொரு முருங்கை ... 70
அமிருதம் அளிக்கும் பூச்சி ... 73
உப்பே உயிர்நாடி ... 74
சமூக சீர்திருத்தமும் மக்கள் உதவியும் ... 76
விஞ்ஞானியின் விரதம் ... 79
இருபத்தைந்து பூகம்பங்கள் ஏற்படும் ... 81
உங்களுக்குத் தெரியுமா ? ... 82
கடவுள் துணை வேண்டும் ... 84
மந்திரமில்லாத ரக்ஷைகள் ... 85
பாரதியின் பாரதம் ... 87
மாணவர் மனக்கொதிப்பு மறைய ... 91
" சக்தி பிறக்குது மூச்சினிலே " ... 94
போதும், போதும் பட்டணவாசம் ! ... 97
பலிக்குப் பலி ... 110
பொல்லாத ஸ்திரீ மரம் ... 113
மனிதன் இரத்தத்தை உறிஞ்சும் வௌவால் ... 114
விசித்திர விஷமங்கள் ... 115
ஆளைக் கடத்தும் கொள்ளைக்காரர்கள் ... 116
பாரிஸின் பெருமை ... 118
ஜீவன வித்யை ... 119
ஏட்டிக்குப் போட்டி ... 125
வாசஸ்தலத்திலே நீதிஸ்தலம் ... 126

198751

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 10

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

செப்டம்பர் ○ 1954

மதத்தலைவர் ஆகாகான்

●

மதத் தலைவர்களென்றால் உலகப் பற்றற்று மனித சமூகத்திலிருந்து வெளியேறி, யோகத்திற்கு உரிய இடங்களுக்குச் சென்று சதா தியானத்தோடு மோக்ஷ மார்க்கங்களைச் சிந்தித்துக்கொண்டிருப்பவர்கள் என்பது தான் பொதுவாகப் பரவியுள்ள அபிப்பிராயம். இதற்கெல்லாம் மாறுபாடாக உள்ள ஒரு மதத் தலைவரும் உண்டு, இஸ்லாம் மதத்தில் கோஜாக்கள் (இஸ்மேலிகள்) என்பவர்கள் ஒரு வகுப்பார்கள். இந்தியா, பாகிஸ்தான், ஈரான், சிரியா, இராக், பர்மா, எகிப்து, கிழக்கு ஆப்பிரிக்கா முதலிய தேசங்களிலெல்லாம் சேர்ந்து இவர்களின் ஜனத்தொகை ஒரு கோடியாகும். இந்த இனத்தாரின் மதத் தலைவர் தான் கனம் ஆகாகான் என்பவர். இவரைக் குருவாக வணங்குவோர்களிடையே இவர் வசிப்பதே கிடையாது. இவர் வாசம் ஸ்திரமாக பிரான்சு தேசத்திலே தான். கோஜா வகுப்பார்களெல்லோரும் செல்வந்தர்களான வியாபாரிகள். விவாகம் போன்ற விசேஷ வைபவங்களின் போது இவர்கள் ஏராளமான பொருள்களை மதத்

தலைவருக்குச் சன்மானம் அளிப்பார்கள். மதத் தலைவரான ஆகாகான் குதிரைப் பந்தய உலகத்தில் மிகப் பிரபலமானவர். உலகத்திலுள்ள பந்தயக் குதிரைகளிலேயே சிறந்த குதிரைகளின் சொந்தக்காரர் இவர். குதிரைப் பந்தயத்தில் இவருக்குக் கிடைத்திருக்கும் வருமானம் உலகத்தில் மற்றெவருக்குமே கிடைத்திருக்காதென்று சொல்லலாம்.

இங்கிலாந்தில் இவர் பந்தயக் குதிரைகளுக்காகத் தனி லாயங்களை ஏற்படுத்தி அவற்றைக் கவனிப்பதற்கு பிரத்தியேக நிபுணர்களை அமர்த்தி உலகத்திலுள்ள பந்தயங்களிலெல்லாவற்றிலும் ஓடுவதற்காகக் குதிரைகளை மிகச் சிறந்த வழியில் வளர்த்து வருகிறார். இந்தத் துறையில் இவ்வளவு பணத்தைச் செலவு செய்த மற்றொரு மனிதர் உலகத்தில் உண்டோ என்பது சந்தேகம் தான்.

மதத் தலைவராயிருப்பவர் பிரமசர்யம் அனுஷ்டிக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இஸ்லாம் மதத்தில் கிடையாது. ஆகாகான் முதன் முதலில் ஒரு முஸ்லீம் மாதைத் தான் மணஞ் செய்திருந்தார்; பிறகு ஒரு இத்தாலிய ஸ்திரீயை மணஞ் செய்துகொண்டார். அவள் காலமான பிறகு ஒரு பிரெஞ்சு மாதை மணந்துகொண்டார். இவளை விவாக ரத்து செய்துவிட்டு இப்போது மற்றொரு பிரெஞ்சு மாதை மணம்புரிந்து கொண்டுள்ளார். இவர் மகன் அலிகான் இளவரசர் இவருக்குப் பின் கோஜா வகுப்புக்கு மதத் தலைவராவார்.

ஆகாகான் எப்போதுமே அரசியல் வேலைகளில் தான் ஈடுபட்டு வந்திருக்கிறார். இவர் முகமது நபியின் சந்ததியைச் சேர்ந்தவர். கராச்சியில் பிறந்தவரானாலும் இவர் ஈரானியப் பிரஜையும், பிரிட்டிஷ் பிரஜையுமாவார்.

பிரிட்டிஷ் சர்க்கார் இவருக்கு அநேக பட்டங்களை வழங்கியிருக்கிறார்கள். ஐ. நா. விற்கு முந்தியிருந்த சர்வதேச சங்கத்திற்கு இவர் தலைவராயிருந்தார். இந்தியாவி

லுள்ள அலிகார் சர்வகலர்சாலை அமைப்பதற்கு இவரது பெரும் உதவி கிடைத்திருக்கிறது.

ஆகாகானின் சிஷ்ய கோடிகள் அநேக தேசங்களைச் சேர்ந்த பிரஜைகளாதலால் அந்தந்த தேசத்து அரசியலில் இவர் ஈடுபடுவதில்லை. சமூக சீர்திருத்த விஷயங்களில் வேண்டிய உபதேசங்கள் செய்கிறுர். இஸ்லாமிய ஸ்திரீகளிடையேயுள்ள பர்தா அனுஷ்டானத்தை ஒழிக்க முயற்சித்துள்ளார்.

இவர் மதத் தலைவர் பதவியேற்ற அறுபதாவது வருஷத்தில் தராசில் ஒரு பக்கம் இவரை வைத்து மற்றொரு பக்கம் இவர் எடைக்குச் சமானமான வைரங்களை வைத்து வைர விழா இந்தியாவிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் இவர் சிஷ்யகோடிகளால் கொண்டாடப்பட்டது. இம் மாதிரியே தான் நாலைந்து வருஷங்களுக்குப் பின்னர் பிளாட்டின விழாவும் கொண்டர்டப்பட்டது. இவரை வைத்து நிறுத்த வைரங்களையும் பிளாட்டின உலோகத்தையும் விற்று கோஜா இனத்தாரின் சமூக வேலைகளுக்குப் பயன்படுவதற்காகவே இவர் திரும்ப அளித்துவிட்டார்.

இவர் மகன் அலிகான் இளவரசர் சிலவருஷங்களுக்கு முன் ஒரு ஹாலிவுட் நக்ஷத்திரத்தை மணந்துகொண்டார். அவருடன் நாலைந்து வருஷங்கள் வாழ்க்கை நடத்தினுர். அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்ற பின்பு அவளே விவாகரத்து செய்து கொண்டாள்.

லட்சாதிபதி எழுத்தாளர்கள்

மேல் நாடுகளில் எழுத்துத் தொழில் மூலம் லட்சாதிபதிகளாவோர் பலர். இன்றைய நாடகாசிரியர்களில் மிகப் பிரபலமான ஒருவருக்கு ஒரே நாடகம் மூலம் மூன்று லக்ஷம் ரூபாய் சம்பாத்தியம் கிடைத்திருக்கிறது. பத்துவருஷ காலமாக இந்த நாடகாசிரியருக்கு இவர் எழுதியுள்ள நாடகங்கள் மூலம் நாற்பது லக்ஷம் ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. இதுபோலவேதான் நாவலாசிரியர்களுக்கும் அமோக வருமானம் கிடைக்கிறது.

விழிப்பு

அழாதே மாலதி, நீ தான் இனிமேல் அவருக்கு...என்று கனவு கண்டு பிதற்றிய லூர்து மேரி அரைகுறைப் பேச்சிலேயே கண்ணை விழித்துக்கொண்டபொழுது அறையில் அந்தகாரமாக இருந்தது.

பக்கத்தில் படுத்திருந்த கணவனைத் தட்டி எழுப்பி, "சுவிட்ச்சைப் போடுங்கள்" என்றாள்.

அடுத்த விநாடி அறையில் வெளிச்சம் பரவியது ஜான் சின்னையா மனைவியின் முகத்தை உற்றுப்பார்த்தான். அவள் கண்கள் ஈரமாக இருந்ததைக் கண்டு "ஏன் லூர்து, கனவு கண்டாயா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றாள் லூர்து. அவள் குரலில் கலக்கமும் கலவரமும் கூட இருந்தது.

எப்பொழுதும் சிரிப்பும் கலகலப்புமாக இருக்கும் மனைவி கலக்கமுற்றதைக் கண்ட சின்னையா ஆச்சர்யத்துடன் "என்ன கனவு கண்டாய்? உன் முகமும் பேச்சும் நன்றாக இல்லையே?" என்று வினவினான்.

அவள் பதில் சொல்லவில்லை. எழுந்து உட்கார்ந்து முழங்கால்களைக்கட்டிக்கொண்டு முகத்தை முழங்காலில் தாங்கியபடி சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள். கேள்விக்கு பதில் சொல்லாமலே யோசனையிலாழ்ந்துவிட்ட அவள் முகத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான் சின்னையா.

விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கொஞ்ச நேரம் வரையில் இருவரும் பேசவில்லை. மனைவியின் மௌனம் கணவனுக்குச் சகிக்காமல் "இவ்வளவு கிலேசப் படும்படியாக என்ன கனவு அது? சொல்லக்கூடாதா அதை என்னிடம்."

லூர்து மெதுவாகத் தன் முகத்தை கணவன் பக்கம் திருப்பினாள். "மாலதியை நாம் தள்ளி வைத்து எவ்வளவு வருஷங்களாயின?" என்று சர்வசாதாரணமாகக் கேட்டாள்.

லூர்துவின் இந்தக் கேள்வியால் கன்னத்திலறையப்பட்டவன் போன்ற உணர்ச்சியில் அவன் முகம் மாறியது. பார்வை தாழ்ந்தது.

லூர்து விழித்த கண் இமைக்காமல் சின்னையாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவன் தனது நினைவின்றும் மீண்டும் " எதற்காகக் கேட்கிருய், லூர்து ?"

" சொல்லுகிறேன், எவ்வளவு வருஷங்களாயின ?"

" ஏழெட்டு வருஷங்களிருக்கும், ஏன் ?"

"நாம் செய்தது பாபச் செயல், போய் அவளை அழைத்து வாருங்கள் " என்ருள் லூர்து.

சின்னையா உலுக்கி விழுந்தான். மனைவியிடமிருந்து இவ்விதமான பதிலை அவன் எதிர்பார்க்கவேயில்லை! அவன் ஆச்சர்யத்துடன் தன்னைப் பார்ப்பதைக் கண்ட லூர்து ஒரு சிறு நகையுடன் " ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள் ? உண்மையாகத்தான் சொல்லுகிறேன் என்னை முன்னதாக மணந்துகொண்டீர்கள், இவ்வளவுகாலம் நான் உங்களுடன் வாழ்க்கை நடத்தியாகிவிட்டது அவளைப் பின்னல் மணந்துகொண்டீர்கள். இனி உங்கள் வாழ்க்கையில் அவள் இருக்கவேண்டியதே முறை. இதில் வியப்பு ஒன்றுமில்லை......"

" அவள் இருக்கவேண்டியதே என்ருல்—அப்பொழுது நீ இருக்கமாட்டாயா ?"

" மாட்டேன் "

" ஏன் "

" ஏன் என்று நான் சொல்லாமலே பிறகு தெரியும். அதைப் பற்றி இப்பொழுது தர்க்கிக்க வேண்டியதில்லை. நான் சொல்வதை உடனே செய்யுங்கள்."

" நீ ?"

" நானு, நான் வேளாங்கன்னிக்கோ ஆலந்தழைக்கோ போகிறேன் " என்று அவள் கூறியதும் " லூர்து என்ன சொன்னுய் ? என்னை விட்டுவிட்டு."

" எனக்குப் பதிலாக மாலதியை வைத்துவிட்டுப் போகிறேனே !"

" நீயும் இருக்கவேண்டும்..."

"மனைவி என்று வீட்டில் ஒருத்தி இருக்கவேண்டும், அவளானால் என்ன, நானானால் என்ன?" என்று கூறி லூர்து அவனைப் பார்த்த சமயம் புன்னகை பூத்த அவள் முகத்தைக் கண்டு மனம் கலங்கி, லூர்து உன்னை விட்டுவிடுவதைவிட இந்த உயிரை விட்டுவிடுவது......"

அவன் வாயைப் பொத்தினாள் லூர்து.

"அசட்டுப் பிசட்டென்று உளராதீர்கள்......இவ்வளவு காலம் நாம் சந்தோஷமாக இருந்தோம்......அதுபோல அவளும் இருக்கவேண்டாமா?"

"இருக்கவேண்டும். ஆனால் நீயும்தான் இருக்கவேண்டும்..."

"இருக்கக் கூடாது..."

"நீ இருப்பதை ஆட்சேபிக்க அவளுக்கு அதிகாரம் கிடையாது? தெரியுமா?"

"அதிகாரத்தைப் பற்றி இங்கு பிரச்னையே இல்லை. ஏனெனில் நான் இருக்கும்போது அவள் இருப்பதை நான் எப்படி விரும்பவில்லையோ அதேபோலத் தான் அவளும்..."

"இந்தத் தத்துவமெல்லாம் எனக்குத் தெரியாது! நான் உன்னை விடமுடியாது..."

"பேஷாக முடியும்—மூடியவேண்டும்! இனிமேல் அவள் தான் உங்களுடன் இருக்கவேண்டியவள்."

"நீயும் இருக்கவேண்டியவள்தான், லூர்து!"

"அது கவைக்கு உதவாத பேச்சு. நான்...வேண்டிய அளவு...மேலே பேச இயலாமல் லூர்துவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

அவள் கண்களிலிருந்து தடதடவென்று நீர் பெருகிற்று. உணர்ச்சிப் பெருக்கில் உரை தடுமாற "துரையே, கண்ட கனவில் மனச்சாட்சி விழித்துக்கொண்டுவிட்டது. கொஞ்ச நாட்களாகவே இனம்புரியாத வேதனை என் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது. பாவியான என்மீது ஆண்டவன் கருணை புரிந்து என்னை ரட்சித்தார்....யௌவனச் செருக்கில்—அதன் மயக்கில் என்ன செய்கிறோமென்று தெரியாமல் உங்களை என் இஷ்டத்திற்கு ஆட்டி வைத்தேன். தெய்வபக்தியும், ஆசாரமும் உள்ள பெற்றோர்களுக்குப் பிறந்த பிள்ளையாகிய உங்களை—இந்த காணாத தொலைவில் என் மணாளனாக்கிக் கொண்டேன். இது தெரிய

காரணமின்றி பெற்றோர்கள் உங்களுக்கு நிச்சயித்த பெண்ணை மறுக்க இயலாத வகையில் மணந்து அழைத்து வந்தீர்கள்...” இந்த இடத்தில் வார்த்தையை நிறுத்திவிட்டு லூர்து தன்னை உதறிக் கொடுத்துக்கொண்டு மீண்டும் “ஆமாம் இளமைச் செருக்கில் கொஞ்சங்கூட இரக்கமின்றி அவளைத் தள்ளி வைத்துவிட்டோம். அன்று, அந்தச் சிறுமி நம் வாழ்வுக்கு இடையூருக வந்து தோன்றியதுபோல அவளை விரட்டி விட்டோம். ஆமாம் அன்று அவள் சிறுமி, இன்று? குமரி இல்லையா? அவள் வயிறு எப்படிக் கொதிக்கும். எவ்வளவு கண்ணீர் சிந்தி இருப்பாள்! பிறந்த குழந்தைகள் நாலும் போய்விட்டதே என்று அழுதோமே—வீண் போகாது?”

“அதற்குப் பொறுப்பாளி நான்...” என்ற சின்னையாவின் வார்த்தைகளை அவள் காதில் வாங்கிக்கொள்ளாமல் ஆண்டவனே உம் கருணையால் தெளிவு பிறந்துவிட்டது. ஞானம் பெற்றுவிட்டேன். என்மடமையும் சௌந்தர்யச் செருக்கும் மடிந்து சாக கனவில் அந்த பெண்ணைக் கண்ணும் கண்ணீருமாக என் முன்பு நிறுத்தி—நீ செய்த அநியாயத்தைப் பார்! என்றீர்கள். பிதாவே பார்த்துவிட்டேன்! போதும் உமது அருளை நாடித்தொழுவதே இனி என் பொழுதுபோக்கு...” என்று மண்டியிட்டு கண்ணீர் வடிய பிரார்த்தித்தாள் லூர்து. பிறகு ஒருவாறு மனக்கொந்தளிப்பு அடங்கியதும் கண்களைத் துடைத்துக் கொண்டு சின்னையாவின் பக்கம் திரும்பினுள்.

அவன் நினைவை எங்கோ சுழல விட்டுவிட்டு தன் வசமற்றவனுக உட்கார்ந்திருந்ததைக் கண்டு, “சென்றதைப் பற்றி சிந்தித்து பயனில்லை. இனி ஆகவேண்டியதைப் பார்ப்பதே சிறந்தது. ஆண்டவன் என் உள்ளத்தில்-புகுந்து இந்த யோசனையை பிறப்பித்திருக்கிருர். இனி கணமும் தாமதிக்காமல் புறப்பட்டுப்போய்—உங்கள் மதாசாரப்படி என்ன செய்யவேண்டுமோ செய்து மாலதியை அழைத்து வாருங்கள். இதுவரையில் உங்கள் உடமைகளைக் காப்பது என் பொறுப்பு. அவள் வந்ததும் அவளிடம் ஒப்புவித்துவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு......புறப்படுவேன்...” என்ருள்.

வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகப் பேசி முடித்த லூர்துவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினுன் சின்னையா.

அவள் அக நினைவைப் பறை சாற்றியது முகம்!" அவள் கண்களிலோ பழைய குறுகுறுப்பு இல்லை, ஆசையில்லை, ஆவல் இல்லை...ஒன்றுமேயில்லை. அவை வெற்று விழிகளாக இருந்தன. முகமோ இருளடித்துப்போய் பொலிவை யிழந்து மங்கி இருந்தது. சட்டென்று அவள் திரும்பி "பொழுது விடிய இன்னும் நாழிகை நிரம்ப இருக்கிறது என்று தனக்குள் கூறிக்கொண்டு வெளிப் படையாக "நான் சொன்னதையெல்லாம் புரிந்துகொண்டுவிட்டீர் களல்லவா? வருத்தப்படாதீர்கள். நீங்கள் சொல்லாவிடினும் உங்கள் மனத்திலிருப்பது எனக்குத் தெரியும். ஆனால் அது நடக் காது. அவளை அழைத்துவர நீங்கள் உங்களை அடியோடி மாற்றிக் கொண்டாகவேண்டும்! அதன் பிறகு என்னால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை...எனக்கே அதில் இஷ்டமில்லை. காலகதியின் வேகத்தில் நாம் சிதறிவிடப் போகிறோம்...'நம் இச்சையில் ஒன்றும் இல்லை' என்று பெரியவர்கள் சொல்லுவதைக் கேட்டு சிரிப்பேன், அப்பொழுது. இப்பொழுது அதன்பொருளைக் கண்டுகொண்டேன். இனி என் மனத்தில்—நான் செய்த பாப காரியத்தின் பயனாக— ஆசைகளனைத்தும் தீய்ந்துவிட்டன! கடந்துபோன நம் வாழ்க் கையை நான் மறந்துவிடுவேன். நீங்களும் மறந்துவிட வேண்டும்..."

"எல்லாம் சரி லூர்து, உன்னைத் துறந்து உயிர்..."

"வெறும் பிரமை! எல்லாம் பழக்கமாகிவிட்டால் சகஜமே! பொழுதுவிடிய நிரம்பப் போதிருக்கிறது. சற்று படுத்துத் தூங்கு வோம். காலை எட்டு மணிக்குத்தானே உங்களுக்கு வண்டி" என்று விளக்கை அவித்தாள் லூர்து மேரி.

இருவரும் பேசவில்லை. ஒருமித்திருந்த இருவரும் வாழ்க்கைப் பாதையில் என்றென்றும் பிரிந்துவிட்ட ஏக்கத்தில் தத்தம் வழிகளைப் பற்றிச் சிந்திக்கலானார்கள்.

2

சரியாக அதற்கு எட்டாம் நாளிரவு. வாசலில் டாக்ஸி நின்ற சத்தம் கேட்டு உள்ளே இருந்த லூர்து ஓடி வந்து பார்த்தாள். சின்னையாவும், அவனைத் தொடர்ந்து மாலதியும் காம்பவுண்டுக் குள் நுழைவதைக் கண்டாள்.

கருநீல பட்டுப் புடவையும் ரோஜா நிற 'சோளி'யும் அணிந்து காதிலும், மூக்கிலுமிருந்த வைர அணிகள் விளக்கு வெளிச்சத்தில் வர்ணங்களைப் பூத்துச் சொரிய தலையில் கட்டு மல்லிகைப் பூவும் தானுமாக நடந்துவரும் மாலதியைக் கண்டதும் லூர்துவுக்கு என்னவோ செய்தது.

அன்று எலிக்குஞ்சு மாதிரி துளியூண்டாக இருந்த மாலதியா இவள்? எட்டு வருஷங்களுக்கு முன்பு விவரமறியாத பதினான்கு வருஷச் சிறுமியாக வந்த மாலதி இன்று பூர்ண வளர்ச்சி பெற்ற பெண், குதிரை போன்ற கம்பீர நடை நடந்து வருவதைக் கண்ட லூர்து, மெய்மறந்து நின்றாள்!

சின்னையா மாலதியுடன் உள்ளே நுழைந்தான். ஹாலில் நடுவிலிருந்த மேஜை மீது பூங்கொத்துகள் நிறைந்த ஜாடியும், ஒரு கட்டு ஊதுவத்திகளும் இருந்தன.

புகையும் ஊதுவத்திகளின் மணம் வியாபித்துக் கொண்டிருந்த ஹாலில் எதிரே வந்தாள் லூர்து.

சிரித்த முகத்துடன் "சௌக்கியமா" என்று கேட்டபடி லூர்துவின் அருகில் வந்தாள் மாலதி.

நீண்ட நாளாக அயல் தேசத்திற்குச் சென்று திரும்பி வந்த மகள் மீது தாய்க்கு உதிக்கும் பாசத்துடன், வாய் திறந்து ஒன்றும் பேசாமல் மாலதியின் முகவாயை பற்றிக்கொண்டு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்!

லூர்துவின் கண்கள் கலங்கி நீர்முத்துக்களைச் சிந்தின!

தன் புடவைத் தலைப்பால் லூர்துவின் முகத்தைத் துடைத்து விட்டு "இது என்ன காரியம்? அத்தானிடம் நீங்கள் என்னென்னமோ உளறினீர்களாமே... அதற்கெல்லாம் என்ன அர்த்தம்?" என்று அன்புடன் கடிந்துகொண்டாள் மாலதி.

லூர்துவின் வரண்ட உதடுகளில் சற்றே புன்னகை அரும்பிற்று. சின்னையா உடைகளை மாற்றிக்கொண்டு சேரில் அமர்ந்து "குடிப்பதற்கு ஜலம் வேண்டும்" என்றான்.

"அதோ இருக்கிறது பார் மாலதி கூஜா. அதிலிருக்கிறது எடுத்துக் கொடு..."

"கொடுக்கிறேன். பிளாஸ்க்கில் காபி இருக்கிறது. எல்லாருக்கும் சற்று பகிர்ந்து கொடுங்கள் அதை" என்று கூறினாள்.

"ஆகட்டும் ஸ்நான அறையில் வெந்நீர் இருக்கும். குளிக்க வேண்டுமென்றால் குளி. அங்கேயே சோப்பு, டவல், எல்லாம் இருக்கும்..." என்றாள் லூர்து.

மாலதி சின்னையாவுக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து விட்டு ஸ்நானம் "செய்துவிட்டு வருகிறேனே" என்றாள், சின்னையாவிடம்.

"வேண்டாம். கை கால் முகம் அலம்பிக் கொள். இரவுநேரம், புதுத் தண்ணீர்" என்றான் சின்னையா.

"சரி" என்று கூறிவிட்டு அங்கிருந்து ஸ்நான அறைக்குச் சென்றாள் மாலதி.

"லூர்து, நீ இட்ட கட்டளையை நான் நிறைவேற்றி விட்டேன். நீ...எங்களிருவர்களுடைய கட்டளைக்குப் பணிய வேண்டியதே!"

"வேண்டியது, தங்கள் கட்டளைகளை நான் நிறைவேற்றி விட்டேனே! இனி நிறைவேற்றவேண்டியவள் மாலதி தான்" என்று கூறியபடி பிளாஸ்க்கைத் திறந்து காபியை 'கப்'களில் வார்த்துக்கொண்டே, 'வீட்டில் பாலும், காபியும் ரெடியாக இருக்கும்போது ஹோட்டலில் வாங்கி வருவானேன்?"

"என்னவோ வாங்கினேன்..."

"இன்று போகட்டும். நினைத்ததையெல்லாம் செய்கிறது என்ற வழக்கத்தை இனி நீங்கள் விட்டுவிடவேண்டும்..."

"அர்த்தமாகிறது..."

"நீங்கள் அர்த்தம் செய்துகொள்ளும் பொருளைப் பற்றி நான் கூறவரவில்லை. எனக்கும் கொஞ்சம் தெரியும்? செலவுகளில் இனி சிக்கனத்தைக் கையாளவேண்டும். இப்போது தான் வந்திருக்கிறாள். இனிமேல் இருக்கிறது செலவெல்லாம். அவள் சிறு பெண், அனுபவமில்லாதவள். எது தேவையோ அதை செய்துகொண்டு புத்திசாலித்தனமாகக் குடும்பத்தை நடத்துங்கள்."

"நீ நடத்தப்போவதில்லை ஆனல்..."

"அதற்குத்தான் மாலதியை நியமித்திருக்கிறேன்" அவளுக்கு வேண்டிய துணிமணிகள், சாமான்கள் அவள் விருப்பப்படி வாங்குங்கள்.

"பொழுது போகவில்லையா உங்களுக்கு, இன்னும் கொஞ்ச நாளைக்கு அக்காவுடன் நீங்கள் பேசவே கூடாது, ஆமாம்..."

"ஆமாம் மாலதி, எதற்கு இவ்வளவு காபி வாங்கச் சொன்னாய், வீடு என்று இருக்கும் போது...ஆயாசத்திற்கு ஒரு கப் காபி சாப்பிட்டுவிட்டு வந்தால் போதாதோ...இங்கே எல்லாம் இருக்கிறதே..."

"சொன்னேன் அக்கா! என் பேச்சைக் கேட்கவில்லை" என்று சிரித்தாள் மாலதி.

"பெட்டி சாவியை அவரிடம் கொடுக்காதே. சமர்த்தாக இருந்து குடித்தனம் பண்ணு...அவர் வெறும்...ஊதாரி மனிதர்..."

"இனிமேல் நீங்கள் தான் எல்லாம் கற்றுக்கொடுக்க வேண்டும்..."

ஊர்து மனம் பச்சாதாபத்தால் துடித்தது.

"மாலதி, இத்தனை நாள் நான் உனக்கு இழைத்த துன்பம் போதாது என்று இன்னமும் 'இரு' என்கிறாய் ?"

"என்ன, என்ன சொன்னீர்கள் ?"

"ஒன்றுமில்லை. நாளைக் காலை வண்டிக்கு நான் ஆலந்தழை போவதாக நிச்சயித்து விட்டேன்..."

"நானும் வருகிறேன்" என்றாள் மாலதி சட்டென்று.

ஊர்து அதைக் காதில் வாங்காதவள் போல "தர்வானைக் கூப்பிடுங்கள், சாப்பாடு கொண்டுவரச் சொல்லுவோம்" என்றாள்.

கூறிவிட்டு டிபன் ஸெட்டையும் கொண்டுவந்து வைத்தாள். தர்வான் போஜனம் எடுத்துவரச் சென்றான்.

மாலதி வீட்டை ஒரு முறை சுற்றி வந்தாள். அதது அந்தந்த இடத்தில் கச்சிதமாக வைக்கப்பட்டிருந்தன. கரி அடுப்பின் மீது பெரிய கெட்டிலில் பால் காய்ந்துகொண்டிருந்தது. அங்கே வந்த ஊர்துவிடம் "நீங்கள் ஊருக்குப் போவதாயிருந்தால் நானும்தான் வருவேன் அக்கா" என்றாள் மறுபடியும் மாலதி.

"போதும் நிறுத்து, அசடு வழிகிறது! அடுத்த வருஷம் இதே நாள் நான் வருவேன்—குழந்தையைப் பார்க்க..."

" விஷயம் விளங்காமல் விழித்தாள் மாலதி.

"என்ன விழிக்கிறாய் அப்படி? அடுத்த வருஷத்திற்குள் உனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையைப்பார்க்க வருகிறாளாம்" என்று விளக்கினான் சின்னையா.

மாலதி கண் கலங்க," நான் என்ன பிசகு செய்தேன் அக்கா, என்னை விட்டுவிட்டுப் போகிறேன் என்கிறீர்களே?"

"மாலதி என் கண்மணி, எனக்கு நீ ஒரு பிசகும் செய்ததே இல்லை! நான் உனக்கு நிறைய பாதகம் செய்துவிட்டேன்—என் அறியாமையால்... அந்த ஆண்டவனுடைய கருணை என்னை விழிப் புறச் செய்தது! விழித்தெழுந்தேன் என்—நான் செய்த தீமை எனக்கே புலனாகியது. பாவங்கள் தீர, என் ஆத்மா தூயதாக... இனி ஆண்டவன் அடிதொழுது வாழ்வதே என்பணி. அதினின்றும் என்னை எந்த சக்தியும் தடுக்க முடியாது."

"பிதாவே, என்னை ரட்சியும், நான் செய்த பாவங்களை மன்னித்து இந்தப் பாவியின் மீது இரக்கம் காட்டும்..." என்று உணர்ச்சி மேலீட்டால் நின்ற விடத்திலேயே மண்டியிட்டு ஆண்டவனைத் தொழுதாள் லூர்துமேரி.

ஒரே இரவில்—ஒரு கனவின் விளைவாக அவள் தன்னை—மனத்தை வென்றுவிட்ட அதிசயத்தைக் கண்ட சின்னையாவும், மாலதியும் அசைவற்ற நிலையில் அவளையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்!

"சபரி"

இளவரசிக்குப் போட்டியில் பரிசு

எலிசபெத் ராணியின் தங்கையான மார்க்கரெட் இள வரசிக்கு ஒரு பத்திரிகை நடத்தும் பகுத்தறிவுப் போட்டியில் பரிசு கிடைத்திருக்கிறது. போட்டி நடத்தும் பத்திரிகை ஆபீஸ் குமாஸ்தா போட்டி விடைகள் கொண்ட உறைகளை உடைக்க ஆரம்பித்தார். முதன்முதலாக உடைத்துப் பார்த்த விடையில் அதை அனுப்பியவரின் பெயரைப் பார்த் துத் தன் கண்களையே நம்பமுடியாமல் திகைத்தார். யாராவது குறும்புக்காரர்கள் இளவரசியின் பெயரை உபயோகித்து அந்த விடையை அனுப்பி வைத்திருக்கலாமோ வென்று கூட சந்தேகப்பட்டார். பிறகு பக்கிங்ஹாம் அரண்மனைக்கு டெலிபோன் செய்து கேட்டபோதுதான் மார்க்கரெட் இள வரசி உண்மையாகவே விடையனுப்பியதாகத் தெரிந்தது.



அப்பு ஸ்தலம்

"தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்து
நீரி னின்றடி போற்றி நின்மல கொள்ளென வாங்கே
ஆரங் கொண்டவெம் மானைக் காவுடை யாதியை நாளு
மீர முள்ளவர் நாளு மெம்மையு் மாளுடை யாரே."

என்று சுந்தரமூர்த்தி நாயனாரும்,

"ஆர நீரோ டேந்தினு னானைக் காவு சேர்மினே"

என்று திருஞானசம்பந்தரும் சிறப்பித்துப் பாடியுள்ளது ஜம்பு கேஸ்வரர் வீற்றிருக்கும் திருஆனைக்கா ஸ்தலத்தைப் பற்றியதாகும். இந்த ஸ்தலம் பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்ருகிய அப்பு ஸ்தலம். ஆலய மூர்த்திகள்—சுவாமி ஜம்புகேஸ்வரரும், அம்பாள் அகிலாண்ட நாயகியுமாவார்கள்.

வெள்ளை யானை வழிபட்ட ஸ்தலமாதலால் இதற்கு 'யானைக்கா' என்றும் (யானை வனம்) ஜம்பு நாவல் (வெள்ளை நாவல்) மரத்தடியில் ஸ்வாமி எழுந்தருளி யிருப்பதால் ஜம்பு கேஸ்வரம் என்ற பெயரிலும் இந்த ஸ்தலம் விளங்கி வருகிறது.

"விறன்மிக்க கரிக் கருள்செய்தவனே",
"வெண்ணாவலின் மேவிய எம்மழகா"

என்றும் தேவாரப் பாசுரங்கள் கூறுகின்றன.

கோயில் மூலஸ்தானத்தில் எப்போதும் ஜலம் நிரம்பி விடுவதால் அதை அடிக்கடி இறைத்துவிட்டுச் சுவாமிக்குப் பூஜை நடக்கிறது.

"செழுநீர்த் திரளைச் சென்றாடினேனே"

என்றும் தேவாரம் கூறுகிறது.

முன் ஜென்மத்தில் சிலந்தியாயிருந்து சிவபெருமானை வழிபட்டு அப்பெரும் புண்ணியத்தினால் அரசராய் அவதரித்த கோச்செங்கட் சோழ நாயனாராலே கட்டப்பட்ட ஸ்தலம். இந்த ஆலயத்திலே சிவபெருமானே சித்தராகத் தோன்றி திருநீற்றையே கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்ததால் 'நீறிட்டான்மதில்' என்று சொல்லப்படும் திருமதிலையும் கொண்டது. இந்த ஸ்தலத்தின் கர்ப்பக் கிருஹ வாயில் மிகவும் சிறியது.

சுவாமியை அம்மன் பூஜித்த ஐதிகத்தைக் காட்ட இன்றும் உச்சிக் காலத்தில் அம்மன் கோயில் குருக்கள் அம்மனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு சுவாமி கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்து விட்டுப் போகிறார்.

உறையூர்ச் சோழ மகாராஜா பதக்கம் தரித்துக்கொண்டு காவிரியில் ஸ்நானஞ் செய்தபோது அது நதியில் விழுந்துவிட ராஜா 'சிவபெருமானே கொண்டருளும்' எனப் பிரார்த்திக்க, அந்தப் பதக்கம் திருமஞ்சனக் குடத்திலே அகப்பட்டு அபிஷேகஞ் செய்யும்பொழுது அது ஸ்வாமி மேல் விழ, அதனை சுவாமி அணிந்து அரசருக்குத் திருவருள் புரிந்த ஸ்தலம். ஆலயமோ மிகப் பெரியது. லிங்கம் பள்ளத்தில் இருக்கிறது.

மூலம் :- காளத்தி-நடேச முதலியார் இயற்றிய
"இறைவனின் உறைவிடங்கள்" என்ற நூல்.

ASOKA SCENTED BETELNUT POWDER

மணமக்கள் சந்திக்க நூதன வழி

மணப்பெண்ணை நேரில் பார்க்க சௌகரியமில்லாவிட்டால் இவளுடைய புகைப்படத்தையாவது பெற்றோர்களும் கலியாணஞ் செய்து கொள்ளப்போகிறவரும் பார்ப்பது சகஜம். புகைப் படத்தை மட்டும் பார்த்தால் குற்றங்குறைகள் தெளிவாகத் தெரியாமலிருக்கலாம்.

இதற்காகத்தான் நம் புராதன வழக்கப் பிரகாரம் மணமகனும் குடும்பத்தினரும் மணமகளின் வீட்டிற்குச் சென்று மணமகளையும் அவள் குடும்பத்தினரையும் சந்திப்பது.

மணமகளை நமஸ்கரிக்கச் சொல்வது, பாடச் சொல்வது இதெல்லாம் மணமகளுக்கு ஏதாவது குற்றங்குறைகளிருக்குமானால் அவற்றைத் தெளிவாக்குவதற்காகத்தான். புகைப் படத்தைப் பார்ப்பது இப்பொழுது கர்னாடகப் பழக்கமாகிவிட்டது.

மேல் நாடுகளில் மணமகனும் மணமகளும் ஒருவரைப் பற்றி மற்றொருவர் நன்கு தெரிந்து கொள்வதற்கு ஒரு நூதனமுறை தோன்றியுள்ளது. இதை ஜெர்மானியர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். இது என்னவென்றால் ஒரு பெண்ணின் புகைப் படத்தையெடுப்பதற்குப் பதிலாக அவளுடைய சலனப் படத்தை யெடுப்பதுதான். ஒரு நிமிஷமோ இரண்டு நிமிஷங்களோ கேமிரா முன்பு வந்து பெண் நிற்பாள், பேசுவாள், நடப்பாள். இந்த நூதன முறையைக் கையாண்ட ஜெர்மானியரிடம் விவாகத்தை விரும்பும் எத்தனையோ ஆண்களுடையவும் பெண்களுடையவும் சலனப் படங்களிருக்கின்றன. தனக்குத் தகுதியான ஒரு பெண்ணை விவாகஞ் செய்யக் கோரிக்கொண்டிருப்பவருக்கு தன் வசமிருக்கும் கலியாணத்தை விரும்பும் பெண்களின் சலனப்படங்களையெல்லாம் காண்பிப்பார். அவற்றில் எந்தப் பெண்ணை இந்த அபேட்சகர் விரும்புகிறாரோ அந்தப் பெண்ணுக்கு இந்த அபேட்சகரின் சலனப் படத்தையும் காண்பிக்க ஏற்பாடு செய்வார். அந்தப் பெண்ணுக்கும் இவரை பிடித்துவிட்டால் அவர்களிருவரும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளும் செய்வார்.

மாணவர் நகர்

கல்லூரி மாணவர்கள் தங்கள் வகுப்புகளில் நடக்கும் பாடங்கள்; பாட புத்தகங்கள்; விளையாட்டுகள்; சினிமா முதலிய பொழுதுபோக்கு சாதனங்கள் இவற்றிடையே புதையுண்டு கிடக்காமல் பொதுஜனங்களுக்கும் தொண்டு செய்யமுடியுமென்பதற்குச் சென்ற வருஷம் சென்னை நகரில் ஏழைகள் வசிப்பதற்காக மாணவர்கள் கட்டிக்கொடுத்த வீடுகள் தக்க அத்தாட்சியாகும். இதைவிடப் பன்மடங்கு, தொண்டு பொதுஜனங்களுக்கு மாணவர்கள் செய்யலாமென்பதற்கு ஐயமில்லை. பிறநாடுகளில் மாணவர்கள் பொதுஜனங்களுக்குச் செய்யும் தொண்டுகளின் தகவல்கள் நம் நாட்டு மாணவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கின்றன.

உதாரணமாக நார்வே தேசத்தின் தலைநகரமான ஆஸ்லோவில் சர்வகலாசாலை மாணவர்கள் நடத்திவரும் ஸ்தாபனங்களின் வேலை நம் நாட்டில் கோடிக்கணக்கான ரூபாய்கள் மூலதனமாகக்கொண்ட பெரிய கம்பெனிகளின் சாதனைகளுக்கொப்பாகும். ஆஸ்லோ சர்வகலாசாலை மாணவர்கள் அறுநூறு அறைகள் கொண்ட ஒரு ஹோட்டலை நடத்தி வருகிறார்களாம். இந்த ஹோட்டலை நடத்தும் கல்லூரி மாணவர்களுக்கு இதனால் நல்ல வருவாய் கிடைப்பதோடு இது ஒரு பொதுஜனத் தொண்டுமாகிறது.

ஆஸ்லோ நகரத்தைப் பார்ப்பதற்கு வரும் அநேக வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கு வாசஸ்தலமாக கல்லூரிகளுக்கு ஓய்வு மாதங்களில் இந்த ஹோட்டல் ஒழித்துவிடப்படுகிறது.

ஆஸ்லோ கல்லூரி மாணவர்கள் ஒரு புத்தகப் பிரசுராலயம், இரு புத்தக விற்பனை நிலையங்கள், வேலை தேடித்தரும் ஸ்தாபனம் ஏழு சிற்றுண்டிச்சாலைகள், ஒரு பலசரக்குச் கடை, ஒரு செருப்புக் கடை முதலிய ஸ்தாபனங்களையும் நிர்வகிக்கின்றனர். இந்த ஸ்தாபனங்கள் மூலமாக அநேக ஏழைக் குடும்பங்களுக்குப் பிழைப்புக்கிடைக்கிறது.

இவ்வளவு பெரிய ஹோட்டலை ஏற்படுத்துவதற்குப் பணச் செலவு ஏராளமாய்ப் பிடிக்குமல்லவா? இந்தச் செலவை ஒருவரே ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கென்று ஒரு கம்பெனியை அமைத்து ஏராளமான மூலதனத்தைச் சேகரிக்கவுமில்லை.

ஆஸ்லோ நகரத்துக் கல்லூரி மாணவர்கள்எந்தெந்த நகரத்தை சேர்ந்தவர்களோ அந்தந்த நகர சபைகளிடம் மாணவர்களுக்கு

பயன்படும் பொருட்டு ஒரு கட்டிடம் கட்டுவதற்காக ஏற்படும் செலவில் ஒரு பங்கை கோரினர்கள். அநேக நகர சபைகளும் இக்கோரிக்கைப்பிரகாரம் பண உதவி செய்தன. இவ்வாறு பணத்தை திரட்டி லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து இந்த ஹோட்டலை ஏற்படுத்தினர்கள்.

இந்த ஹோட்டலைக் கட்டியதால் மாணவர்களுக்கு முக்கிய சௌகரியமென்னவென்ருல் அவர்களுக்குச் சொற்ப செலவில் தங்குவதற்கு ஹாஸ்டல் வசதி கிடைப்பதாகும். ஐரோப்பா தேசத்தில் எந்த நகரத்திலும் மாணவர்களுக்கு, ஹாஸ்டல் வசதிகள், ஆஸ்லோவில் 'மாணவர் நகரி'ல் கிடைப்பதுபோல் குறைந்த செலவிலும் சௌகரியமாகவும் கிடைக்காது.

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors
(Specialists in B & C Quality Textile Dresses)

10, Thambu Chetty St, Madras - 1.

★

For Readymade garments fabricated out of India's best clothing materials
—B. & C. Mills cloths

Contact us for your requirements.

தன்னை பலியாக்கிக்கொண்டு மனிதனுக்குதவும் பிராணி இனங்கள்.

வாழ்வளிக்கும் பிராணிகள்

வைத்திய சாஸ்திர ஆராய்ச்சி மூலம் எவ்வளவோ அற்புத மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இந்த அற்புத மருந்துகள் மூலம் தீராத நோய்களென்று கருதிவந்த வியாதிகள் இப்பொழுது அறவே மறைந்தோ அல்லது தடுக்கப்பட்டோ விட்டன. இந்த அற்புதமான மருந்துகளின் தயாரிப்பில் ஒரு முக்கிய அம்சம் இவற்றின் குணத்தைப் பரிசோதித்துப் பார்ப்பதாகும். இன்றைய அற்புத மருந்துகள் அநேகம் விஷப் பொருள்களிலிருந்தே தயாரிக்கப்பட்டவை. அதனால் அவற்றை முதன்முதலாக பரிசோதித்துப் பார்ப்பது மனிதர்கள் மீதல்ல சில குறிப்பிட்ட பிராணி இனங்கள் மீது தான். ஏனென்றால் ஒரு புது மருந்து எதிர்பார்த்த அளவுக்கு அனுகூலஞ் செய்யாவிட்டால் ஒரு மனிதனைக் கொன்று விடும். இப்படி நேரிடாமலிருப்பதற்காக புது மருந்துகளையெல்லாம் பிராணிகள்மீது திரும்பத் திரும்பச்சோதனைசெய்து அவற்றின் குணமாக்கும் சக்தியை எவ்வளவு அதிகரிக்க முடியுமோ அவ்வளவு அதிகரித்த பின்னர் மனிதனுக்குப் பிரயோகிப்பார்கள்.

உங்கள் வீட்டுக்குழந்தைக்குத் தொண்டை நோய் ஏற்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; தொண்டை நோய் என்று தெரிந்தபிறகு 24 மணி நேரத்திற்குள்ளாக ஒரு மருந்தை இஞ்செக்ஷன் செய்தால் குழந்தைக்கு அபாயம் ஏற்படாது. இந்த இஞ்செக்ஷனைச் செய்யாவிட்டால் குழந்தையின் தொண்டை அடைத்துப்போய் மூச்சுவிட முடியாமல் குழந்தை மாண்டு போகும்.

இக் காலத்துக் குழந்தைகளை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்ற கணக்கற்ற நாய்களை வைத்திய நிபுணர்கள் பலியாக்கியுள்ளார்களென்பது அநேகருக்குத் தெரியாது. மனிதன் நோயற்று நீடுழி வாழ்வதற்காகப் பலியாகும் பிராணி இனங்களில் நாய், குதிரை, எலி, முயல் இனங்கள் முக்கியமாகும்.

வைத்திய ஆராய்ச்சி சாலைகளில் வேலைசெய்யும் நிபுணர்கள் அநேகரும் இம்மாதிரிப் பிராணிகளை வீட்டுப் பிராணிகளாக வளர்ப்பார்கள். இதைத் தவிர ஆராய்ச்சி சாலைகளிலும் எந்தெந்தப் பிராணிகள் அகப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் கூண்டுகளில் அடைத்துத்

தீனி போட்டு வளர்ப்பார்கள். முயல் இனத்தைச்சேர்ந்த ஒரு பிராணிக்கு நரம்புக்கூட்டின் அமைப்பு மனிதனுடையது போன்றிருக்கும். அதனால் அந்தப் பிராணி மீது மனிதனைப் பாதிக்கும் வியாதிக் கிருமிகளை இஞ்செக்ஷன் மூலம் பிரயோகித்து பிறகு அந்த வியாதிக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட புது மருந்தையும் இஞ்செக்ஷன் செய்வார்கள். அப்பொழுது அந்தப் பிராணியின் தேகத்தில் நிகழும் மாற்றங்களிலிருந்து அந்தப் புது மருந்தை ஒரு மனிதன் தேகத்தில் இஞ்செக்ஷன் செய்தால் என்ன விளைவுகள் ஏற்படலாமென்பதை நிர்ணயிப்பார்கள். அந்தப் பிராணி குணமடைந்தால், இந்த நோயால் பீடிக்கப்பட்ட மனிதனும் குணமடைவான் என்று அர்த்தம். அந்தப் பிராணி மாண்டுபோனல் அந்தப் புது மருந்தில் சேர்ந்துள்ள பொருள்களை தக்கவாறு மாற்றி மற்றொரு பிராணி மீது இஞ்செக்ஷன் செய்வார்கள். ஆராய்ச்சியாளர்கள் இம்மாதிரித் திரும்பத் திரும்பச் செய்யும் பரீக்ஷைகள் மூலந்தான் அநேக அற்புத மருந்துகள் நமக்குக் கிடைக்கின்றன.

வைத்திய ஆராய்ச்சி சாலைகளில் புது மருந்துகளைச் சோதிப்பதற்காக நாய்களை ஏராளமாய் உபயோகிப்பதைப் பற்றி மேல் நாடுகளில் தீவிரமான எதிர்ப்புண்டு. பொதுவாக இம்மாதிரிப் பரீக்ஷைகள் ஜீவஹிம்சை என்றும் இது பாபகரமானதென்றும் நிலவும் அபிப்பிராயம் தான் இந்த எதிர்ப்பின் காரணம்.

வெகுகாலமாய் நிலவி வரும் இந்த எதிர்ப்பின் பலனாய் அமெரிக்க மாகாண சர்க்கார்கள் பிராணிகளின்பாதுகாப்புக்காக அநேக சட்டங்களை இயற்றியுள்ளன. இந்தச் சட்டங்களினல் ஆராய்ச்சி சாலைகளுக்கு நாய்கள் கிடைப்பது மிகவும் சிரமம் என்ற நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலைமையில் ஒரு விந்தையான அம்சமென்னவென்றல் அமெரிக்காவில் அமலிலுள்ள சட்டப்பிரகாரம் சொந்தக்காரர்களில்லாமல் வீதியில் திரியும் நாய்களை பிடித்து ஒருபட்டியில் அடைத்து விஷ மருந்தை இஞ்செக்ஷன் செய்து இவற்றைக் கொல்ல வேண்டும். இப்படிக் கொல்வதைப் பற்றி அஹிம்சாவாதிகளுக்கு வெறுப்போ ஆட்சேபமோ கிடையாது. ஆனல் விஷ மருந்தை இஞ்செக்ஷன் செய்து கொல்லப்படும் நாய்களை ஆராய்ச்சி சாலைகளில் உபயோகிப்பது மூலம் மனிதனுக்குப் பயன்படுவதைத் தான் எதிர்க்கிருர்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் தெருவில் திரிந்துகொண்டிருக்கும் நாய்களைப் பிடித்து அடைக்கும் பட்டியில், அந்த நாய்களுக்கு விஷ மருந்தை இஞ்செக்ஷன் செய்யும் அதிகாரியின் குழந்தைக்கு ஒரு கொடிய வியாதி பீடித்தது; அந்த வியாதிக்கு

ஒரு டாக்டர் புது மருந்தொன்றைக் கண்டுபிடித்திருந்தார். ஆனால் அதன் குணத்தைப் போதிய அளவு சோதிக்க நாய்கள் கிடைக்காததால் அந்த மருந்தை இந்தக் குழந்தைக்குக் கொடுக்க இவருக்குத் தைரியமில்லை. முடிவில் ஒரு கிராமத்திலிருந்து இரு நாய்களை திருடிக்கொணர்ந்து அந்த மருந்தை நாய்கள்மீது பிரயோகித்துச் சோதித்த பின்பு குழந்தையின் வியாதியைக் குணமாக்கினார்.

நாய்களை ஆராய்ச்சி சாலைகளில் உபயோகிப்பதை எதிர்ப்பவர்கள் புத்தகங்கள் வெளியிடுகிறார்கள்; பத்திரிகைகள் பிரசுரிக்கிறார்கள்; அடிக்கடிக் கூட்டங்கள் கூட்டிப் பிரசாரஞ் செய்கிறார்கள். ஆராய்ச்சி சாலைகளில் வேலையிலீடுபட்டிருக்கும் அநேக நிபுணர்களுக்கு நேரடியாகக் கடிதங்களெழுதி அவர்கள் செய்யும் வேலையைக் குறை கூறுகிறார்கள். சில பிரபல ஆராய்ச்சிக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று துப்பாக்கிப் பிரயோகஞ் செய்து பயமுறுத்துகிறார்கள். ஒரு ஆராய்ச்சியாளருக்குக் கிடைத்த மிரட்டல் கடிதத்தின் ஒரு பகுதி கீழ் வருமாறு:—

"ஆண்டவன் சிருஷ்டியிலேயே மிகவும் அழகுவாய்ந்தது நாய். அந்தப் பிராணியைச் சித்திரவதை செய்யும் உன்னை என்னவென்று கூறுவேன். மனித இனத்தில் சேர்ந்தவனென்று பாவித்துக் கொண்டு மனிதத்தன்மையே யில்லாத மிருகங்கள் எத்தனை லக்ஷம் இவ்வுலகில் வசிக்கின்றன. இவர்களின்மீது உன் ஆராய்ச்சியைச் செய்யக்கூடாதா? வாயில்லாப் பிராணியான இந்த நாய்க்குட்டியை விட்டு விடு".

"நீ சித்திரவதை மூலம் யமலோகத்திற்கு அனுப்பி வைத்த ஒரு நாயின் ஆவி என்னை இப்பொழுது பிடித்துக் கொண்டிருக்கிறது. உன்னால் அனுபவிக்க நேர்ந்த வேதனைகள் எவ்வளவென்று உனக்குச் சிறிதேனும் தெரியுமா? என் மீது இப்போது பாய்ந்திருக்கும் அந்த நாயின் ஆவி அது அனுபவித்த வேதனைகளுக்காக உன்மீது பழிவாங்க வேண்டுமென்று என்னை வற்புறுத்துகிறது. என் வரவை எதிர்பார்த்துக் கொண்டு ஜாக்கிரதையாயிரு."

இம்மாதிரிக் கடிதங்களைப் படித்தால் அவற்றை எழுதுபவர்கள் பைத்தியக்காரர்களென்றுதானே உங்களுக்குத் தோன்றுகிறது. ஆம்! அவர்கள் பைத்தியக்காரர்கள்தான்! அவர்கள் வாயினாலும் எழுத்தாலும் பிதற்றுவதைக் கவனிக்காமல் மனித வர்க்கத்தின் புனித ஜீவனைப் பாதுகாப்பதற்குத் தடையின்றித் தங்கள் வேலையைச் செய்வோமென்ற திட மனத்தோடுதான் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

தொண்டருக்குத் தடங்கல் இல்லை

●

1952-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் லண்டன் நகரம் மிகக் கடுமையான மூடுபனியால் மூடப்பட்டிருந்தது. ஒரு அடிகூட அப்பால் எடுத்து வைப்பதற்குச் சாத்தியமில்லாதிருந்தது. தெருவில் பஸ்களோ, மோட்டார் வண்டிகளோ, மற்றெந்த வாகனங்களோ போகமுடியாமலுமிருந்தது. எல்லா ரயில் வண்டிகளிலிருந்தும் இறங்கிய பிரயாணிகளனைவரும் ரயில்வே நிலையத்திலேயே தங்க நேரிட்டது. இம்மாதிரி ரயில்வே நிலையத்தில் வந்திறங்கிய ஒரு தம்பதிக்கு மிக அவசரமாய் வீட்டுக்குச் செல்ல வேண்டியிருந்ததால் கடுமையான மூடுபனியையும் கவனிக்காமல் ரஸ்தாவில் நடக்கத் தொடங்கிவிட்டனர். ஆனால் சற்று தூரம் சென்றதும் இவர்கள் திக்கு திசை தெரியாமல் தத்தளித்தனர்.

இம்மாதிரி கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டோமே யென்று விசனத்தோடு ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருக்கையில் "மூடுபனியில் நீங்கள் எங்கே போகவேண்டும்" என்று ஒரு குரல் கேட்டது. அவர்கள் போகவேண்டிய இடத்தை தெரிவித்ததும் "இந்தா என் கையைப் பிடித்துக்கொள்" என்று கூறிக்கொண்டு ஒரு மனிதர் தன் கையை நீட்டினார். அந்தக் கையைப் பிடித்துக் கொண்டு அவர்கள் மெள்ள மெள்ள வீட்டையடைந்தார்கள்.

ஒருவர் கண்ணுக்கும் ஒன்றுமே புலப்படாத இந்த சமயத்தில் "தங்களுக்கு கண் எப்படித் தெரிகிறது" என்று தம்பதிகள் ஆச்சரியத்துடன் அந்த தயாளனைக் கேட்டதற்கு அவர் பதில் அளித்தது இவ்வாறு:— "நான் பிறவியில் குருடன் சார், எனக்கு இருளுக்கும் ஒளிக்கும் பேதம் தெரியாது. நான் தினமும் பாதையில் நடந்துகொண்டிருப்பது போலவேதான் இன்றும் நடந்து போகிறேன்."

அன்றைய தினம் மூடுபனி மறைந்து சூரிய ஒளி காணும் வரை பாதையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் எத்தனையோ மனிதர்களை அவரவர்கள் வீட்டிற்குக்கொண்டு சேர்த்தாராம் இந்தக் குருடர். மனிதர் மனிதருக்கு செய்யக்கூடிய தொண்டுக்கு இதைவிடச் சிறந்த உதாரணம் உண்டா?

From K. P. Kesava Menon's *Jeevitha Chinthakal* (Malayalam book).

ஒரு பழங்கால சீனக் கதை

கொடுமையால் அழிந்த கொடுங்கோலன்

சீனாவில் மலைப் பாங்கான பிரதேசம் ஒன்றில் சுவாங் என்று ஒரு குடியானவன் வசித்து வந்தான். அவன் நல்ல உழைப்பாளி. நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு வந்தான். ஆனல் அப்படிப் பாடுபட்டுக் கிடைத்த ஊதியத்தையெல்லாம், அந்நாட்டு அரசன் வரி என்ற பெயரில் கவர்ந்து வந்தான். அதனல் இவன் என்னதான் பாடுபட்டு உழைத்தாலும் ஏழையாகவே இருந்தான். இவனுக்கு கலியாணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனலும், மனைவியைக் காப்பாற்ற அவனுக்குச் சக்தி இல்லையே, அதனல் இவன் மணம் செய்து கொள்ளவில்லை.

அவன் தனியாக இருந்து துன்பப்படுவதைக்கண்டு பரிதாபம் கொண்ட சித்திரக்காரர் ஒருவர் ஒரு நாள் அவனை அழைத்தார். பெரிய காகிதம் ஒன்றில் ஒப்பற்ற அழகி ஒருத்தியின் படத்தை வரைந்து, அதை அவனிடம் அளித்து, வீட்டில் கொண்டுபோய் மாட்டிக்கொள்ளும்படி கூறினர். அவன் ஆனந்தத்துடன் அதைக் கொண்டுபோய் தன் வீட்டில் மாட்டினன். அந்தப் படத்திலிருந்த ஒப்பற்ற அழகியிடம் அவனுக்கு அளவற்ற அன்பு உண்டாகிவிட்டது. மறுநாள் காலை, அவன் வேலைக்குப் போகுமுன்பு அந்தச் சித்திரத்திலுள்ள அழகியிடம், "நீ மட்டும் ஒரு உயிருள்ள அழகியாயிருந்தால் இன்று மாலை நான்வரும்போது வாய்க்கினிய உணவுசெய்து வைப்பாயல்லவா?" என்று ஏக்கத்துடன் கேட்டுவிட்டுச் சென்றான்.

அன்றுமாலை வீடு திரும்பிய அவனுக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. வழக்கத்திற்கு மாறாக அவன் வீட்டின் மேலிருந்த புகைக்கூண்டிலிருந்து சுருள் சுருளாகப் புகை வந்துகொண்டிருந்தது. அவன் வீட்டினுள் சென்றான். சமையலறையில் அவனுக்காக அறுசுவை உண்டி தயாராக இருந்தது. இந்த அதிசயம் எவ்வாறு நிகழ்ந்தது என்று ஆச்சரியத்துடன் உணவருந்தினன்.

மறுநாள் காலை வேலைக்குப் போகுமுன்பு, சித்திரத்தைப் பார்த்து, "நேற்று, என்மேல்

இரக்கம்கொண்ட மங்கை ஒருத்தி எனக்காக சமைத்து வைத்தாள். இன்றும் எனது மேலங்கியைத் தைத்து, துவைத்து வைப்பாளா?'' என்று கேட்டுக்கொண்டே மேலங்கியைக் கழற்றிப் போட்டு விட்டுச் சென்றான். ஆனால் விரைவிலேயே, வேண்டுமென்றே திரும்பி, சப்தம் செய்யாமல் வீட்டு ஜன்னல் வழியாக உள்ளே நோக்கினான்.

சித்திரத்திலிருந்த சித்திராங்கி அவனது மேலங்கியைத் தைத்துக்கொண்டிருந்தாள். சித்திரம் வரைந்திருந்த காகிதம் காலியாகக் கிடந்தது.

குடியானவன் வேகமாக உள்ளே ஓடிச்சென்று அவள் கைகளைப் பற்றிக்கொண்டான். ''பெண்ணே, நீ மறுபடி அந்தச் சித்திரமாய்விடாதே'' என்றான். அவளும் வெட்கத்துடன், ''நீ மிகவும் நல்லவன், நான் உன்னுடனேயே இருப்பேன்'' என்று கூறினாள். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான் அந்தக் குடியானவன். ஆயினும், காலியாக மாட்டிக்கிடந்த காகிதத்தை மடித்துப் பெட்டியில் வைத்துப்பூட்டிவிட்டான்.

அவர்கள் இருவரும் கணவன் மனைவியாகி விட்டார்கள். குடியானவனின் மனைவி ஒப்பற்ற அழகிமட்டுமல்ல. நற்குணமும் வாய்ந்தவள். அநேக கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவள். வழக்கம்போல் குடியானவன் வேலைக்குப் போய்விட்ட பிறகு ஒரு தினம் வீதி வழியே இரண்டு பேர்கள் அழுதுகொண்டு போகும் குரலைக் குடியானவனின் மனைவி கேட்டாள். உடனே அவர்களை அழைத்து, என்ன விஷயமென்று கேட்டாள். தாங்களிருவரும் அரசன் உணவுக்காக பறவைகளை வேட்டையாடுபவர்களென்றும் அன்று ஒரு பறவைகூட அகப்படாததனால் தாங்கள் வெறுங் கையுடன் அரசனிடம் சென்றால், தங்கள் தலைகள் போய்விடுமென்ற பயத்தால் தான் அழுகிறோம் என்றார்கள். அவள் அவர்களிருவரையும் அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுஉள்ளே வந்தாள். ஒரு காகிதத்தில் இரண்டு புறாக்களை வெட்டினாள். அவற்றை வாயால் ஊதினாள். உடனே காகிதப் புறாக்கள் உயிர்பெற்று வெளியே வந்தன. வாசலில் காத்திருந்த அரசனின் வேட்டைக்காரர்கள் அவற்றைப் பிடித்துக்கொண்டு அவளுக்கு நன்றி செலுத்திவிட்டுச் சென்றார்கள்.

அன்று புறாக்களை ருசி பார்த்த அரசன் ஆனந்தங்கொண்டான். புறாக்களைப் பிடித்துவந்தவர்களை அழைத்து, அம்மாதிரி புறாக்களை எங்கு பிடித்தார்கள் என்று கேட்டான். வேட்டைக்காரர்கள் கூறிய பதிலிலிருந்து ஏழைக்குடியானவனின் அதிசய மனைவியைப் பற்றி அறிந்து கொண்டான். மறுநாள் மந்திரி, அரசனின் ஆணைப்படி குடியானவனின் வீட்டையடைந்து, அவன் மனைவியிடம், தினமும் அம்மாதிரிப் புறாக்கள்

இரண்டை அளிக்கும்படிக் கட்டளையிட்டார்.

அவளும் "நீங்கள், மலைகளில் வசிக்கும் எங்களைப் போன்ற ஏழை மக்களிடமிருந்து வரி வசூலிக்காமலிருந்தால், நானும் புருக்களை அனுப்புகிறேன்" என்றாள். மந்திரியும் சம்மதித்தார்.

அடுத்த நாள் காலையில் குடியானவனின் மனைவி இரண்டு காகிதப் புருக்களை கணவனிடம் அளித்து, அரண்மனைக்கு எடுத்துச் செல்லும்படி கூறினாள். "இந்தக் காகிதப் புருக்களையா!" என்று கேட்டுப் பயந்த கணவனுக்கு தைரியமூட்டி அனுப்பினாள். அவன் அரண்மனைக்குச் சென்று, அரசன் முன்பு புருக்களை விட்டதும், அவை உயிர் பெற்றுவிட்டன. இதைக் கண்ட அரசன் மந்திரியிடம் "இந்தத் தரித்திரம்பிடித்த குடியானவனை இங்கே யார் வரச்சொன்னது தினந்தோறும் புருக்களை அவன் மனைவியிடம் அனுப்பச் சொல்" என்று ஆக்ஞையிட்டான்.

மறுநாள் காலை குடியானவனின் மனைவி புருக்களுடன் அரண்மனைக்குச் சென்றாள். அவளுடைய அற்புதமான அழகைக் கண்டு மயங்கிய அரசன், அவளிடம் "நீ பேரழகியாய் இருந்தும், ஒரு ஏழைக்குடியானவனுக்கு மனைவியாக இருப்பதேன்? என்னை மணந்துகொள், அரண்மனையில் சுகமாக இருக்கலாம்"—என்று கூறினான்.

அதற்கு குடியானவனின் மனைவி "என் கணவர் உன்னை விட எல்லாவற்றிலும் மேலானவர். அவரைவிட்டு நான் பிரிந்து வரமாட்டேன்" என்று கூறி, யாரும் தடுக்குமுன்பு விர்ரென்று அரண்மனையிலிருந்து வெளியேறிவிட்டாள். அரசனுக்குக் கோபம் மூண்டது. "என்னைப் பார்த்து அப்படிக் கூற அவளுக்கு என்ன தைரியம்?" என்று குதித்தான். மந்திரியின் மூலம் குடியானவனை "மறு நாள் காலையில் ஒரு குதிரைப் பந்தயத்திற்குத் தயாராக இருக்கும்படியும், வெற்றி பெற்றவர்களுக்கே குடியானவனின் மனைவி சேரவேண்டுமென்றும் செய்தி அனுப்பினான். இதைக் கேட்ட குடியானவனின் மனைவி கணவனுக்கு தைரியமூட்டினாள். அவள் கட்டை, குச்சி, காகிதம் முதலியவற்றைக்கொண்டு ஒரு குதிரையைத் தயாரித்தாள். மறு நாள் காலையில் அது உயிருள்ள ஒரு வெள்ளைக் குதிரையாக மாறிவிட்டது. அரசன் ஒரு கருப்புக் குதிரையில் ஏறி வந்தான். பந்தயம் தொடங்கிவிட்டது. முதலில் அரசனே வெற்றி பெறுவான் போல் தோன்றினாலும் முடிவில் குடியானவனே வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசன் அதோடு நிற்கவில்லை. மறுநாள் ஒரு படகுப் போட்டி வைக்கவேண்டும் என்றும், அதில் வெற்றி பெறுகிறவர்களுக்கே குடியானவனின் மனைவி சேரவேண்டும்" என்றும் கூறினான்.

அன்றிரவெல்லாம் மனைவியும் கணவனுமாகக் கண் விழித்து ஒரு படகைத் தயாரித்தார்கள். குடியானவன் மனைவி படகின் பின்பாகத்தை மிகவும் உறுதியாகவும் கூர்மையாகவும் ஆக்கினுள். அடுத்த தினம், அரசனின் படகை மூந்திக் கொண்டு, குடியானவனின் படகு சென்று விட்டது. அரசன் அவனை அழிக்க படகை வேகமாகத் திருப்பிக் கொண்டு குடியானவனின் படகைக் கவிழ்க்க வந்தான். ஆனுல் அரசனின் படகு குடியானவனின் படகின் பின் பக்கம் மோதிய உடனே உடைந்து விட்டது. அரசனின் படகு கவிழ்ந்து, அவன் உயிர் தப்புவதே அரிதாகிவிட்டது. இதிலும் குடியானவன்வெற்றிபெற்ருன்.

சினங்கொண்ட அரசன், அதோடு நிற்கவில்லை. " நீ என்னுடைய அழகான விலையுயர்ந்த மேலங்கியை வீணுக்கிவிட்டாய். இன்னும் மூன்று தினங்களுக்குள் அதுமாதிரியே மயில் தோகை, கிளி இறகு முதலியவற்றைக்கொண்டு, சூரியன், கடல் போன்ற சித்திரங்கள் அமைத்து வேருெரு மேலங்கியை கொண்டு வரவேண்டும், இல்லாவிடில் உன் தலையை சீவி விடுவேன்" என்று சீறினுன்.

குடியானவனுக்கு உற்சாகமளித்தாள்; தைரியமூட்டினுள் மனைவி. பிறகு காகிதத்தில் நிறைய மயிலின் உருவங்களையும், கிளியின் உருவங்களையும் வரைந்து. அவற்றை வெட்டி வழக்கம்போல் உயிரளித்தாள். உயிர் பெற்றதும் அவற்றை இறகுகளைப் போடும்படி வேண்டினுள். அவை உதிர்த்த இறகுகள் மூலம் நேர்த்தியான மேலங்கியைத்தயாரித்தாள். ஆனுல்சூரியனையும், கடலையும் எப்படி சித்திரிப்பது என்று இருவருக்கும் தோன்றவில்லை. குடியானவன் பீதியினுலும் கவலையினுலும் அழுதான். அவன் விட்ட கண்ணீர் மேலங்கியில் சிந்தி கடலாக மாறியது. இரவெல்லாம் ஊசியால் வேலை செய்ததால் அவன் மனைவியின் கையிலிருந்து இரத்தம் பெருகி மேலங்கியில் சிந்தி, சூரியனுக மாறியது. பிறகு இவ்வாறு தயாரான அங்கியை அரசனிடம் இருவரும் எடுத்துச்சென்ருர்கள். அரசன் அதை வாங்கிக் கொண்டு, "இதுபோல் இன்னும் மூன்று வேண்டும்" என்ருன். "அரசே, இதை நீங்கள் அணிந்துகொண்டு அளவு சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்" என்ருள் குடியானவன் மனைவி. அப்படியே அரசன் அதை அணிந்துகொண்டான். உடனே அந்த மேலங்கியில் இருந்த கடல் உண்மையான கடலாக மாறி பொங்கியது. அரசனும், அவனைச்சேர்ந்த கொடுமை மிக்க மந்திரிகளும் அதில் மூழ்கி இறந்தார்கள். பிறகு குடியானவன் அவன் மனைவி, மற்ற குடிமக்கள் அனைவரும் சுகமாக வாழ்ந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமா?

அழகான தோற்றம் பாதையில் நடமாடும் யாவரையும் ஸ்தம்பிக்க வைக்கிறது. அழகற்ற முகம் கடிகாரத்தைக் கூட நிறுத்திவிடுகிறதாம்!

அழகாய்ப் பிறந்தால் ஆபத்து

●

அழகான மனிதர்கள் அதிருஷ்டசாலிகளாவார்களென்பது தானே சாதாரணமான அபிப்பிராயம். இது உண்மைதானு?

வாழ்க்கையில் நேரிடும் எவ்வளவோ சந்தர்ப்பங்களில் நற்குணமும் நல்ல மனசும் படைத்திருந்தால் தான், மனிதனுக்கு வெற்றியும் மகிழ்ச்சியும் கிடைக்கிறதென்பது யாவருமறிந்ததே.

அமெரிக்காவில் கலியாணமான ஆயிரக்கணக்கானபெண்களிடையே நடந்த ஒரு விசாரணையில் தங்கள் கணவர்களின் பழக்கங்களில் எவை அவர்களுக்கு அதிகத் திருப்தி யளிக்கின்றன என்று கேட்கப்பட்டது :—

இந்த ஆயிரக்கணக்கான மனைவிகளில் ஒரு ஸ்திரீகூட தன் கணவனுக்கு அழகில்லையென்று வருந்தவோ கணவன் அழகா யிருக்கவேண்டுமென்று விரும்பியதாகவோ தெரியவில்லை.

கணவர்கள் நம்பிக்கைக்குத் தகுதியானவர்களாயிருக்க வேண்டும். தன்மீது அதிக அன்பு காட்டவேண்டும், சிரமப்பட்டு இன்னும் ஏராளமாகச் சம்பாதிக்கவேண்டும், குழந்தைகள்மீது இன்னும் அதிகக் கவனஞ்செலுத்த வேண்டுமென்றெல்லாம் தான் இந்தப் பெண்மணிகள் கூறினார்களே தவிர அழகான கணவர்கள் வாழ்க்கையில் முக்கியமென்று ஒருவர் கூட கூறவில்லை. யௌவனமான ஆண்களும் பெண்களும் சந்தித்துக் காதல் கொண்ட பின்னரே கலியாணங்கள் நடக்கும் மேல் நாடுகளில் கூட ஆண்களுக்கு அழகு முக்கிய அம்சமில்லையென்று வெளியானது சற்று அதிசயம் தானே!

மற்ருெரு விசாரணை, கலியாணமாகாத கல்லூரி மாணவிக

ளிடையே நடந்தது. மணந்து கொள்ளப்போகும் கணவர்களின் எந்த அம்சத்தை முக்கியமாக அவர்கள் விரும்புகிறார்களென்று கேட்டதற்குப் "பணம் தானென்று நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் பதிலளித்தார்கள். நூற்றுக்குப் பதினைந்து பேர்கள் குண விசேஷம் என்று பதில் கூறினார்கள். நூற்றுக்கு ஒன்றிரண்டு பேர்கள்தான் கணவனுக்கு அழகு தேவை என்று பதிலளித்தனராம்.

மேல் நாடுகளில் பல சந்தர்ப்பங்களில் ஆயிரக்கணக்கான ஸ்திரீகளிடம் ஆண்களுடைய குணவிசேஷங்களில் அவர்கள் எந்த அம்சத்தை விரும்புகிறார்கள் என்று கேட்டதற்குப்பெரும்பாலான பெண்கள் ஒரே பதில் தான் அளித்திருக்கிறார்கள். அது என்னவென்றால், ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குப் போதிய அளவு சம்பாத்தியம் கணவனுக்கு இருக்கவேண்டுமென்பதுதான். வயதில்முதிர்ந்த பெண்களில் ஒருவர்கூட ஆண்களுக்கு அழகு இருக்கவேண்டுமென்ற பேச்சே எடுக்கவில்லை. சிறுமிகளில் அபூர்வமாகச் சிலர் மட்டும்தான் அழகைக் கோரினார்கள். இவர்களும் மற்ற குண விசேஷங்களைக் கூறிய பிறகு தான் அழகைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

இதிலிருந்து தெளிவாகிற தென்னவென்றால் ஆண்களின் குணவிசேஷங்களில் அழகுக்கு முக்கியத்துவம் கிடையாதென்பதுதான்.

மேல் நாடுகளில் அநேக சமூக சாஸ்திர நிபுணர்களின் ஆராய்ச்சியிலிருந்து அழகான மனிதர்கள், அழகில்லாதவர்களை விட அருமையான கணவர்களாகமாட்டார்களென்றும் அவர்களுக்கு நல்ல வேலைகள் கிடைப்பதில்லையென்றும் இவர்களில் பெரும்பாலோர் ஆயுள் முடிவில் அரைப் பைத்தியங்களாக மாறிவிடுகிறார்களென்பதும் தெளிவாகிறது.

மனோதத்துவ நிபுணர்களின் அபிப்பிராயப் பிரகாரம் அழகனை மணந்த ஸ்திரீக்கு ஒரு நாளும் மகிழ்ச்சி கிடையாதென்பதே.

பிற ஸ்திரீகளின் வலையில் தன் கணவன் எப்போது விழுந்துவிடுவானோ என்ற பீதி இந்த ஸ்திரீக்கு சதா இருந்து கொண்டிருக்கும்.

அழகான ஆண்கள் பொதுவாய் வீண் ஜம்பக்காரராய்த் தானிருப்பார்களாம். இவர்களுடன் காலந்தள்ளுவதென்பது ஒரு ஸ்திரீக்கு மிகச் சோதனையான காரியந்தானே!

மேல் நாடுகளில் அதிகப் பொறுப்புள்ள உத்தியோகங்களுக்கு அழகான ஆண்களை அமர்த்தவே கூடாதென்று அநேக பிரபல கம்பெனிகள் தீர்மானித்திருக்கின்றன. பொறுப்புள்ள உத்தியோகத்

திற்குத் திறமை மட்டும்தான் தேவை, வேறென்றும் தேவையில்லையென்பதுதான் அநேக பிரபல கம்பெனி முதலாளிகளின் அபிப்பிராயம்.

அழகாய்ப் பிறந்தவர்கள் தங்கள் சிறுவயதில், தோற்றத்தின் பாக்கியத்தாலேயே பல காரியங்களைச் சாதித்துவிடுகின்றனர். பரீக்ஷையில் தேறிவிடுகிறார்கள்; உத்தியோகமும் கிடைத்துவிடுகிறது.

திறமையேயில்லாமல் உத்தியோகங் கிடைக்கும் வரையில் காலந்தள்ளிய ஒருவருக்குஉத்தியோகம் கிடைத்த பிறகு தேவையான விஷயங்களில் பயிற்சி பெற்றுத் திறமையடைய ஆர்வம் ஏற்படாதது இயற்கை தானே! அதனல் முயற்சியும் திறமையும் லட்சியமாகக் கொண்டவர்களிடம் இவரால் போட்டியிட முடியாது.

வயதிலும் சற்று முதிர்ந்து அழகான தோற்றமும் மறையத் தொடங்கும்போது அழகனுய்ப் பிறந்தவனின் கதி மிகவும் பரிதாபகரமானதன்றோ!

இன்னொரு முக்கியமான விஷயத்தை மனோதத்துவ நிபுணர்கள் வற்புறுத்துகிறார்கள். மிக அழகான ஒரு மனிதனை நாம் சந்தித்தால் அவன் தோற்றத்தை நாம் வெகு சீக்கிரத்தில் மறந்துவிடுகிறோம்.

மூக்கோ, கண்ணோ, காதோ கோளாருன முகத்தை ஒரு மனிதன் தன் ஆயுள் பூராவும் மறப்பதில்லை. ஆதலால் அழகில்லாதவர்களே! உங்கள் கவலையை விட்டொழியுங்கள்!

மாமனாருக்கும் மாமியாருக்கும் மட்டும்!

'மாப்பிள்ளை' என்ற வார்த்தையைச் சரியாக உச்சரிக்க வேண்டும். இதைத் 'தப்பளை' என்ற வார்த்தையைச் சொல்வது போல் சட்டென்று சொல்லிவிடக் கூடாது. ஆனால், அதற்காகச் சங்கீதத்தில் நிரவல் செய்வது போலவும் மெதுவாகச் சொல்லக்கூடாது.

"மா" என்ற எழுத்தை ஒரு மாத்திரை காலம் அதிகமாக நீட்டவேண்டும். மற்ற எழுத்துக்களை விட அதை உயர்ந்த ஸ்தாயியில் உச்சரித்து, மற்ற வார்த்தைகளைச் சட்டென்று சொன்னால் அதட்டுவதுபோலிருக்கும். ஆனால் மற்ற வார்த்தைகளைக் கொஞ்சம் நீட்டிச் சொன்னாலோ பரிகசித்துக் கூப்பிடுவதுபோலிருக்கும்.

"இரண்டாவது 'ப்' என்ற எழுத்து. இதை 'மா'வை விடச் சற்றுக் குறைந்த சப்தத்துடன் உச்சரிக்க வேண்டும். இதைப் புரியும்படியாகச் சொல்லக் கஷ்டமாயிருக்கிறது. அதாவது ஒரு ஸ்வரத்திலிருந்து அடுத்த ஸ்வரத்திற்கு நழுவுவது போலிருக்க வேண்டும். அப்புறம் 'பி' என்ற எழுத்தை 'ப்' என்பதைப் போலவே சொல்லலாம். 'ள்' என்பதில், இலேசாக நின்று அழுத்தவேண்டும். கடைசியாக உள்ள 'ளை' என்பதைக் கிட்டத்தட்ட 'மா'வைப் போல் உச்சரிக்கவேண்டும். இந்த ஒலி சாஸ்திரத்தை அனுசரித்து வார்த்தைகளை உச்சரித்தால் மட்டும் போதாது. அது அடிக்குப் பயந்து கொண்டு ஒப்புவிப்பது போலிருக்கும். அர்த்த பாவத்தோடு சொல்ல வேண்டும். அதில் அன்பு தொனிக்கவேண்டும்.

"தூமிலன்"

தனயனைத் திருத்திய தந்தை

●

தஞ்சையைச் சேர்ந்த ஒரு சிற்றூரில் பொன்னன் என்ற பெயருடைய ஒரு தொழிலாளி இருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் பொன்னி. வள்ளி என்ற பெண்ணும், முருகன் என்ற பையனும் அவர்களுக்கு இருந்தனர். பொன்னன் மிகவும் நேர்மையானவன். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டுண்பவன். முருகன் அவர்களுக்கு மிகவும் அருமையாகப் பிறந்தவனுதலால் அவனைச் செல்வமாக வளர்த்து வந்தார்கள்.

முருகனுக்குப் பதினெட்டு வயதாயிற்று. அவனுக்கு உழைப்பதிலோ, அல்லது படிப்பதிலோ ஊக்கமே உண்டாகவில்லை. பொன்னன் அவனை ஏதாவது தொழில் கற்றுக் கொள்ளும்படி நல்ல புத்தி கூறினுன். முருகனே, வேளா வேளைக்குச் சாப்பிடுவதிலும், அழகாக உடையணிந்து கொண்டு ஊர் சுற்றுவதிலுமே கவனமாக இருந்தான். பொன்னியும், வள்ளியும், முருகனுக்குப் பணத்தினருமை தெரியாதவாறு பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட பொன்னனுக்கு முருகனிடம் வெறுப்புண்டாயிற்று.

ஒரு நாள் பொன்னன் பொன்னியைப் பார்த்து, “பொன்னி! முருகனுக்குப் பதினெட்டு வயதாகிவிட்டது. அவனுக்குப் படிப்பிலும் புத்தி செல்லவில்லை. உழைக்கவும் மாட்டேன் என்கிருன். பணத்தினுடைய அருமையும் அவனுக்குத் தெரியவில்லை. இப்படியே அவனுடைய வாழ்நாள் முழுவதும் இருக்கமுடியுமா? இப்படியிருந்தால் அவனுடைய வாழ்நாளே வீணுகிவிடும். அவன் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்கூடச் சம்பாதித்துக்கொண்டுவர முடியாத நிலையிலன்ருே இருக்கிருன்? என்னுல் இனிமேலும் இவ

னுடைய சோம்பேறித்தனத்தைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது'' என்று சீறினான்.

உடனே பொன்னி முருகனை யழைத்து, "முருகா! உன் அப்பா உன்னைப்பற்றிக் குற்றஞ் சொல்லுகிறார். உன்னால் இப்பொழுதிலிருந்து இன்றிரவுக்குள் ஒரு ரூபாய் கூடச் சம்பாதிக்க முடியாதா?'' என்று கேட்டாள். "ஓ! முடியுமே'' என்று வீறாப்பாகப் பதிலளித்த முருகன், வீட்டை விட்டுப் புறப்பட்டுப் பகலெல்லாம் ஓரிடத்திற் பதுங்கிக் கொண்டிருந்துவிட்டு இருட்டும் வேளையில் வீட்டிற்கு வந்தான். தாயாரைப் பார்த்து, "அம்மா! இன்று எனக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. தயவு செய்து ஒரு ரூபாய் கொடு. அதை, அப்பாவிடம் நான் சம்பாதித்துக் கொண்டுவந்ததாகக் காட்டுகிறேன். நாளைக்கு எப்படியாவது சம்பாதித்துவிடுவேன்'' என்று கெஞ்சினான். அவளும் மனமிரங்கி ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத்தாள்.

அதை, அன்றிரவு பொன்னனிடம் தான் சம்பாதித்துக் கொண்டுவந்ததாகக் காட்டினான் முருகன். பொன்னன் பதில் பேசாது அந்த நோட்டைச் சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டான். முருகன், பேசாமலிருந்துவிட்டான். மறுநாளும், ஊரெங்கும் அலைந்துவிட்டுத் தன் தமக்கை வள்ளியிடம் மன்றாடி ஒரு ரூபாயை வாங்கித் தான் சம்பாதித்ததாகத் தந்தையிடம் கொடுத்தான் முருகன். அதுவும் பொன்னன் கையினால் சுக்கு நூறாகியது. முருகன் ஒன்றுமே பேசவில்லை.

மறுநாட் காலையில் அவனுக்குப் பணந்தரத் தாயும் தமக்கையும் மறுத்துவிட்டார்கள். அன்று முருகன் வேலைக்காக ஊரெங்கும் சுற்றியலைந்தான். ஒரு வேலையும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு தனவந்தரின் பெட்டி படுக்கைகளை ஏறத்தாழ ஒரு மைல் தூரம் சுமந்து சென்றதற்காக அவனுக்கு ஒரு ரூபாய் கூலி கிடைத்தது. முருகன் மிகவும் சோர்ந்துவிட்டான்.

அந்த ரூபாய் நோட்டையும் தன் தகப்பனிடம் காட்டினான். அதையும் பொன்னன் கிழிக்க முயன்றபொழுது முருகனால் தாங்க முடியவில்லை. "அப்பா! அப்பா!! அதைக் கிழிக்காதீர்கள். அது என்னுடைய பணம்'' என்று கூவித் தடுத்தான். பொன்னன் சிரித்தான். "முருகா! இது தான் நான் உன்னைத் திருத்தக்

கண்டுபிடித்த உபாயம். முதல் இரண்டு நாட்களும் நான் நோட்டு களைக் கிழித்தபொழுது உன் முகத்தில் எவ்விதமான மாறுதலும் உண்டாகவில்லை. ஏனென்ருல், அவை நீ கஷ்டப்பட்டுச் சம்பா தித்தவையல்ல. ஆனல் இது நீ உண்மையாகவே உழைத்துச் சம்பாதித்தது. அதனுல்தான் நீ இதை மிகவும் போற்றுகிருய் !'' என்ருன். அன்று முதல் முருகன் உண்மையான உழைப்பாளி யாக விளங்கினன்.

—*Eelakesari*, Jaffna

இஞ்ஜினீயர் பசு !

உயர்ந்த குன்றின் மீது கனவான் ஒருவர் ஒரு மாளி கையை அமைத்தார். இந்த மாளிகையை அமைக்கும் போது கட்டிடத்திற்குச் சுலப மாய்ப் போக்குவரத்து ஏற் படுத்துவதற்கு ஒரு பாதை யைச் சிருஷ்டிப்பதைப் பற்றி ஒரு இஞ்ஜினீயரிடம் யோசனை கேட்டார். இஞ்ஜினீயர் இதற்கு "ஒரு பசுவைக் கேட் போமே'' என்று பதில் கூறினர்.

"பசுவா ? இது என்ன விநோதமாயிருக்கிறதே'' என்று கனவான் அதிசயமுற்ருர்.

"ஆமாம், பசுவைத்தான் !'' என்று இஞ்ஜினீயர் மறுபடி யும் கூறினர். "பசுவிற்கு ஒரு தொழுவத்தை குன்றின் மீது அமைத்து அதில் நிறையத் தீனியையும் வைத்துப் பசுவைத் தினந்தோறும் காலையில் குன்றின் அடிபாகத்துக்கு கொண்டு போய் விடுங்கள். மாலை நேரத்திற்குள் தினந்தோறும் அது தன் தொழுவத்திற்குத் திரும்ப எப்படிச் செல்கிறதென்பதைக் கவனித்தால் பாதையை அமைப்பதற்கு எது உத்தமமான வழி என்று நன்கு புலப்படும்'' என்ருர்.

அவர் கூறியவாறு கனவான் பசுவிற்குத் தொழு வத்தை குன்றின்மீது அமைத்த சில வாரங்களுக்குள் பசுவின் கால் சுவடுகள் பாதைக்கு அஸ்திவாரம் போட்டுவிட்டது.

அதிகாரிகள் மனைவிகளுக்கு

அதிகாரிகளுடைய மனைவிகள், தங்களுக்கு கணவர்களின் சம்பளத்தில் தான் பங்குண்டு, கடமைகளில் பங்கில்லையெனக் கருதக்கூடாதென்பதற்கு இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளின் மனைவிகள் தக்க உதாரணமாவார்கள். ஆங்கில அதிகாரிகள் இந் நாட்டிலிருக்கும்போது அவர்களுடைய மனைவிகள் அவர்களுடைய வருமானத்திலும், கௌரவத்திலும் பங்கு கொள்வதோடு இவர்கள் செய்தே தீரவேண்டுமென்ற கட்டுப்பாடில்லாத பல தொண்டுகளையும் செய்துள்ளார்கள்.

ராஜப் பிரதிநிதிகளின் மனைவிகளும், கவர்னர்களின் மனைவிகளும் கூட இவ்வாறு செய்துள்ளார்கள். இந்தச் சீமாட்டிகளெல்லாம் அவர்கள் மாளிகைகளிலேயே உல்லாசமாக இருந்துகொண்டு ஆடம்பர வாழ்க்கையிலீடுபட்டிருந்தால் யார்தான் இவர்களைக் குறைகூறமுடியும்?

ஒவ்வொரு பிரிட்டிஷ் அதிகாரியின் மனைவியும் தன் கணவன் அதிகார முறையில் செய்யும் வேலையோடு இணைந்த தொண்டுகளை மக்களுக்கு ஓயாமல் செய்துகொண்டிருந்தார்கள்.

சம்பளம் பெற்றுக் கணவர்கள் செய்து வந்த வேலைக்குச் சம்பளமில்லாமலே அவர்கள் மனைவிகள் செய்துவந்த தொண்டு சமானமாகும்.

—ராஜாஜி

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்

அசோகா உற்சாகம் தரும்

பேறு மன்னன்—
மக்களின் நண்பன்

●

நாற்பத்தெட்டு நாவல்களும் வேறு புத்தகங்களும் நூற்றுக் கணக்கான சிறிய நூல்களையும் எழுதிய ஒரு எழுத்தாளர் அமெரிக்காவில் இருக்கிறார். இவருடைய புத்தகங்கள் அமோகமாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, இங்கிலாந்து முதலிய ஆங்கில பாஷை பேசும் தேசங்களில் விற்பனையானதும் தவிர, ஜெர்மனியில் இருபது லக்ஷம் பிரதிகளும் ருஷ்யாவில் 30 லக்ஷம் பிரதிகளும் விற்பனையாகியுள்ளன.

ஏழைகளையும் பாட்டாளி மக்களையும் ஆதரித்து எழுதப்பட்ட இவருடைய அநேக நூல்கள் ருஷ்யாவின் புரட்சிக்குக்கூட காரணமாயிருந்திருக்குமென கருதப்படுகிறது. இந்தப் பிரபல நூலாசிரியர் பெயர் அப்டன் சிங்களேர். இவருடைய நூல்கள் 48 பிற நாட்டுப் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான பாஷைகளின் பெயர்களும் அவை எங்கு பேசப் படுகின்றனவென்பதுங் கூட இவருக்குத் தெரியாது.

இவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். பத்து வயது வரை பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கு வசதியில்லாதிருந்தது. தந்தையோ ஒரு மதுபான வியாபாரியும் குடிகாரருமாயிருந்தார். இரவுதோறும் மதுபான கடைகள் எல்லாவற்றிலும் சென்று தந்தையைத் தேடுவதே இவருக்கு வேலையாயிருந்தது. மதுபானத்தினுல் இளம்வயதில் இவ்வளவு துன்பத்தை யனுபவிக்க நேர்ந்ததால் இவர் தனது நூல்களில் மதுபானத்தை அறவே ஒழிக்க வேண்டுமென்று மிகத் தீவிரமாக வற்புறுத்தியுள்ளார். இவர் மதுபானம் செய்வதில்லை; ஏன்? காப்பி—டீ கூட அருந்தமாட்டார்; புகை பிடிப்பதும் கிடையாது.

பத்து வயதுக்குள் தானகவே எழுத்தறிவு பெற்றுர். பள்ளிப் படிப்பை சிறுவர்கள் முடிக்கும் வயதுக்கு முன்பே ஆங்கில பாஷையிலுள்ள அரிய நூல்களை யெல்லாம் கற்றறிந்திருந்தார்.

இவர் தன் சொந்தக் கல்விப்பயிற்சியில் இவ்வளவு ஆர்வங்கொண்டிருந்தார்.

தந்தையின் மடமையால் பள்ளியில் கல்வி பயிலமுடியாத இவர் தன் சொந்த உழைப்பினால் கல்லூரிக்குச் சென்று உயர்தரக் கல்வி பயின்றார். கல்லூரி படிப்புக்கு மாதா மாதம் செலுத்தவேண்டிய கட்டணத்தை அவர் பத்திரிகைகளுக்குச் சிறு கதைகளும், கட்டுரைகளும், ஹாஸ்ய துணுக்குகளும் எழுதிச் சம்பாதித்தார்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் சிறுவர்களுக்குக் கதைகள் எழுத ஆரம்பித்தார். இவை மூலம் சுமாரான வரும்படி கிடைத்துங் கூட மன நிம்மதியற்றிருந்தார். ஏனென்றால் எழுத்துத் திறமையைப் பணஞ் சம்பாதிப்பதற்காக உபயோகிப்பது இவருக்குப் பிடிக்கவில்லை. பாட்டாளி மக்களை வதைக்கும் வறுமையையும் மற்றும் அநேக துன்பங்களையும் அறவே ஒழிக்கவேண்டுமென்றும் விரதம் பூண்டிருந்தார். அதனால் வியாதியால் பீடித்திருந்த தன் மனைவிக்காகவும் தன் குழந்தைக்காகவும் பணஞ் சம்பாதிப்பது தேவையாயிருந்துங்கூட, தான் பிறந்து வளர்ந்த நகரத்தை விட்டு வெளிப் பிரதேசங்களுக்குச் சென்று தன் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு அநேக நாவல்களை எழுதினர். இவற்றில் ஒன்றும் வருமானமில்லாததால் இவரும் இவரது குடும்பமும் வறுமைக்காளாகவேண்டியிருந்தது. அந்த நாட்களில் இவருக்கு பசியால் வாடாத நேரமே இல்லாதிருந்தது.

இவர் எழுதிய ஆறுவது நாவல் மூலம் இவருக்குப் புகழோடு ஏராளமான வருமானமும் கிடைத்தது. இதிலிருந்து இவரது வறுமையும் மறைந்தது.

அப்டன் சிங்களேர் தீவிர சமூக சீர்திருத்தவாதியும் லட்சியவாதியுமாவார். தன் மனத்தில் ஏதாவது சரியென்று தோன்றி அது சட்டவிரோதமாயினும் அந்தச் சட்டத்தை எதிர்க்கவும் அதற்காகப் பாடுபடவும் துணிவு கொண்டவர்.

பாட்டாளி மக்களுக்கு எழுத்தாளர் உலகத்தில் இவரை விடச் சிறந்த நண்பர் கிடையாது.

இரு உண்மை சம்பவங்கள்

பிரார்த்தனை பலித்தது

அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஒரு விதவையும் அவள் குடும்பத்தினரும் வறுமையினால் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். அக்கம்பக்கத்திலிருந்தவர்களிடம் கடன் வாங்கியும் கையிலிருந்த சிறு பொருள்களை அடகு வைத்தும் வாழ்க்கை நடத்திவந்தனர். கணவன் உயிரோடிருக்கும்போது சுமாராகச் சுபிட்சமாயிருந்த இந்தக் குடும்பத்தின் சொத்துக்கள் ஒவ்வொன்றும் இவ்வாறு ஒழிந்துபோயின.

இம்மாதிரிக் கொடிய வறுமையில் தவித்துக்கொண்டிருக்கும் போது இரண்டு மூன்று மாத வீட்டு வாடகை வேறு, பாக்கியாயிருந்தது. இந்தத் தொகை அற்பமாயிருந்தாலும் விதவையினால் இதைச் சமாளிக்க முடியவில்லை. வீட்டுச் சொந்தக்காரர் கோர்ட்டின் நடவடிக்கை மூலம் எஞ்சியிருந்த பொருள்களை ஏலம்போடுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார். எஞ்சியிருந்த பொருள்கள் யாவை? இரண்டு மூன்று கண்ணாடி போட்ட படங்கள், ஒரு மேஜை, ஒரு நாற்காலி—இவைதான். இவையெல்லாம் தன்னிடமிருந்து அடுத்த தினம் போய்விடுமே யென்று நினைத்து உருகின விதவையின் மனோவேதனைக் களவேயில்லை. தான் தினந்தோறும் வழிபடும் கிறிஸ்துவின் படத்திற்கு எதிரே நின்று "யேசுநாதரே, கதி ஏதுமில்லாத என்னையும் என் குழந்தைகளையும் நீ காப்பாற்ற மாட்டாயா" என்று வாய்விட்டழுதாள்.

ஏல தினம் வந்தாயிற்று. கோர்ட்டுச் சிப்பந்திகள் ஏல சாமான்களின் ஜாபிதாவுடன் தயாராயிருந்தனர். பிறர் பொருள்களை மிகவும் மலிவாக அடித்துக்கொண்டு போக விரும்பும் மக்களின் கூட்டமும் நிறைந்திருந்தது. சில மரச்சாமான் வியாபாரிகளும் வந்திருந்தனர். கூடியிருந்த மக்களுக்கு முதன் முதலாகக் கண்ணில் பட்டது, ஏசு நாதரின் திருவுருவம் தான். இந்தச் சித்திரம் எவ்வளவு அருமையான பொருளென்று அங்கு கூடியிருந்த வியாபாரிகளனைவருக்கும் தெரியும். அதனால் ஒவ்வொருவரும் அதைத்தானே வாங்கவேண்டுமென்று தீர்மானித்

தனர். இந்தக் காரணத்தால் ஏசு நாதர் படத்தின் விலை ஏறிக்கொண்டே போயிற்று. விதவை கனவில் கூட கண்டிராத ஒரு தொகை அந்தப் படத்திற்கு மட்டுமே கிடைத்தது! வீட்டுக்காரருக்குச் செல்லவேண்டிய தொகையைவிட எத்தனையோ மடங்கு பணம், அந்தச் சித்திரத்திற்கு மட்டுமே கிடைத்துவிட்டதால் ஏலம் நிறுத்தப்பட்டது. வாடகை பாக்கியை கொடுத்ததுபோக மீதியிருந்த பணம் விதவைக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கை நடத்த, சில மாதங்களுக்குப் போதுமானதாயிருந்தது.

★

1912 - ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் "டைட்டானிக்" என்ற கப்பல் முதன் முதலாக இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்குச் சென்றுகொண்டிருந்தபோது அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் மிதந்து வந்த ஒரு பர்வதம் போலுள்ள பனிக்கட்டியின் மீது மோதியுடைந்தது. இப்படிக் கப்பல் உடைந்துபோன தினத்தன்று இரவு நடந்த சம்பவம் இது :—

லண்டன் நகரவாசியான ஒரு ஸ்திரீ அன்றிரவு உணவுக்குப் பின் மனத்தில் ஏதோ சஞ்சலப்பட்டுக்கொண்டு நித்திரை வராமற் தவித்துக் கொண்டிருந்தாள். சற்று அமைதி பெறுவதற்காக மேஜை மீதிருந்து ஒரு பிரார்த்தனைப் புத்தகத்தை யெடுத்துப் படிக்கத் தொடங்கினாள். திடீரெனப் புத்தகம் இவள் கையை விட்டு நழுவிக் கீழேவிழுந்தது. புத்தகத்தைக் குனிந்து எடுத்தவுடன் அவள் கண்ணில் அகப்பட்ட ஏட்டில் "கப்பல் பிரயாணம் செய்கிறவர்களுக்காகச் சொல்லுகின்ற பிரார்த்தனை மொழிகள்" என்ற தலைப்பைக் கண்டாள். இந்தத் தலைப்பைக் கண்டதும் இவள் மனோ வேதனை பின்னும் அதிகரித்தது.

ஏனென்றால் அவளுடைய கணவன் அப்போது "டைட்டானிக்" கப்பலில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தான். அவனுக்குத்தான் ஏதாவது ஆபத்து நேரிட்டிருக்குமோவென்று அவள் மிகப் பீதியடைந்தாள். அதனால் நாற்காலியிலிருந்தவாறே ஆண்டவனைப் பிரார்த்திக்கத் தொடங்கினாள். நாலைந்துமணி நேரம் தொடர்ந்தாற்போல் பிரார்த்தனையிலீடுபட்டிருந்தாள். விடியற்காலை 5 மணி ஆனதும் சிறிது மன நிம்மதியடைந்தாள். அப்போது நித்திரையிலாழ்ந்தவள், அவளுடைய சகோதரி காலைப் பத்திரிகையோடு 8 மணிக்கு அவளை எழுப்பியபோதுதான் எழுந்திருந்தாள்.

பத்திரிகையில் "டைட்டானிக்" கப்பல் அடைந்த நாசத்தைப் பற்றிய செய்தியை அவள் படித்தாள். உயிர் தப்பிய கப்பல் பிரயாணிகளின் ஜாபிதாவில் தன் கணவனுடைய பெயரை காணாததால், இவள் துக்கசாகரத்தில் ஆழ்ந்தாள். பின் வந்த செய்தியில் உயிர் தப்பிய பிரயாணிகளில் தன் கணவனும் ஒருவனென்று அறிந்தாள்.

அவள் கணவன் லண்டனுக்குத் திரும்பி வந்த பிறகு இவளுக்கு யாவும் விளங்கின. கப்பல் பனிக்கட்டி மீது மோதி முழுகத் தொடங்கியவுடன் அவன் தன் மனைவியைப்பற்றி வருந்தினானென்று கூறவேண்டுமா?

அதே சமயத்தில் தான் லண்டன் வாசியான அந்த ஸ்திரீ மனச்சஞ்சலமடைந்தாள். சமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டு யமனோடு போராடிக்கொண்டிருக்கும் சமயத்திலெல்லாம் இந்த ஸ்திரீ தாங்க முடியாத மனோவேதனையடைந்து கணவனுக்காகப் பிரார்த்தனை செய்துகொண்டேயிருந்தாள். விடியற்காலை ஐந்து மணிக்கு உயிர்தப்பிய பிராணிகள் ஏறியிருந்த படகில் இவனுக்கும் இடம் கிடைத்தது. அதே ஐந்து மணிக்குத்தான் அந்த ஸ்திரீயும் மன நிம்மதி யடைந்தாள்.

மனைவியின் பிரார்த்தனை தான் கணவனைக் காப்பாற்றியதென்று யூகிப்பது சரியல்லவா?

—From *Jeevitha Chinthakal*, by K. P. Kesava Menon.

ஹாஸ்ய எச்சரிக்கை

பிரான்சைச் சேர்ந்த ஒரு சிறிய நகரத்தில் மிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் மோட்டார் வண்டிகளை ஓட்டுபவர்களுக்குத் தீவிர எச்சரிக்கைகளுக்குப் பதிலாக நாற்சந்திகளில் நிறுத்தி வைத்துள்ள கம்பங்கள் மீது கீழ்க்கண்டவாறு அறிவிப்புகள் காணப்படுகின்றன.

"இந்த நகரம் மிகவும் ரம்மியமானது. நிதானமாய் ஓட்டிக் கொண்டு போனால் நகரத்தைச் சுற்றிப் பார்க்கலாம்."

"வேகமாய் ஓட்டிக்கொண்டு போனால் இங்குள்ள சிறைக்குச் செல்லலாம். அங்கே சேறும் சகதியாயுமிருக்கும்."

பருப்பும் பட்டுப் பாயுமில்லாத
விவாகமுண்டா?

பட்டுப்பாய்

"பாயும் வாய்க்காலருகில் எழும்
பசிய கோரை அழகினைப்பார்"

—கவிமணி

நாம் படுக்கைக்கும், விரிப்பிற்கும் பாய்களைப் பயன் படுத்துகிறோம். இப்பாய்கள், ஓலை, தாழை, பிரம்பு, கோரை முதலியவற்றால் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலும் கோரைப் பாய்களையே படுப்பதற்கு உபயோகிக்கிறோம். முரட்டுப் பாய், மென்மையான பாய், பட்டுப் பாய் எனக் கோரைப் பாய்களை மூவகைப் படுத்தலாம். சோறு நீக்கப்படாத கோரையாலும், கற்றாழை மடலாலும் முரட்டுப்பாய் நெய்கிறார்கள். மென்மையான பாய் நெய்வதற்கு, கற்றாழை மடலுக்குப் பதிலாக, நூலைத் திரித்து பாவாகப் போடுகிறார்கள். பட்டுப் பாயானது சோறு நீக்கப்பட்ட துல்லிய கோரையாலும், மெல்லிய நூலாலும் நெய்யப்படுகின்றது. முரட்டுப் பாயும், மென்மையான பாயும் தென்னாற்காடு, வட ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் நெய்யப்படுகின்றன. பட்டுப் பாயானது, திருநெல்வேலி ஜில்லாவில் குறிப்பாக பத்தமடையில் நெய்யப்படுகின்றது.

பட்டுப்பாய் நெய்வதற்குப் பொருநை நதிக் கரையில் வளரும் கோரையையே பயன்படுத்துகிறார்கள். இக் கோரையை இலவசமாக வெட்டிக் கொள்ள அரசாங்கமும், அனுமதித்திருக்கிறது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, அதாவது புரட்டாசி, மாசி மாதங்களில் இக்கோரையை அறுவடை செய்கிறார்கள். அறுத்துக் கொண்டு வந்த கோரையை இரண்டாகக் கீறிப் பதினைந்து நாட்களுக்குக் குறையாமல் வெயிலில் காயப்போடுகிறார்கள். அதனால் அக்கோரை பொன்னைப்போன்ற பளபளப்பான மஞ்சள் நிறம் பெறுகிறது. பின் அவற்றை முடிச்சு, முடிச்சாகக் கட்டி ஓடும் நீரில் ஒரு வாரத்திற்கு அழுக வைக்கிறார்கள். அவற்றை ஆற்று நீர் அடித்துச் செல்லாமலிருக்க அவற்றின் மீது கற்களை வைக்க வேண்டும். நீரின் சேறும், அழுக்கும் கோரையில் படியாமலிருக்க அன்றாடம், அழுக வைக்

கப்பட்ட கோரை முடிச்சுகளை அவிழ்த்து ஒவ்வொரு கோரை யாக நீரில் நன்ருக அலசுகிருர் கள். இவ்விதம் செய்யாவிட் டால் கோரையின் நிறமே மாறி விடும். பின்னர், இக்கோரையி லுள்ள சோற்றை மழுங்கலான கத்திகொண்டு நீக்கி, தோலியை மூன்ருகவோ, நான்காகவோ தேவைக் கேற்ப கிழித்து வெயி லில் காயப்போடுகிருர்கள். நூலின் தரத்தை 'எண்' குறித் துத் தரப்படுத்துவது போலப் பட்டுப் பாய்க்குத் தேவையான கோரையை முப்பதாவது எண் ணிலிருந்து நூற்று நாற்பதாவது எண் வரை தரப்படுத்தியுள்ளார் கள். கிழிக்கப்பட்ட கோரைத் தோலி, வெயிலில் நன்ருகக் காய்ந்ததும், உருண்டையான பொடிக் கம்பி போலாகின்றது. இவ்விதம் பண் படுத்தப்பட்ட கோரையே பட்டுப் பாய்க்கு ஊடையாக இருக்கிறது. இந்த ஊடைக் கோரையைத் தயாரிக்க ஒரு மாதம் பிடிக்கும். இக்கோ ரையை இரவு முழுவதும் நீரில் ஊற வைத்து, மறு நாள் வெயி லில் சிறிது நேரம் உலர வைத் துப் பின்னர் சாயம் கொடுக் கிருர்கள். மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை முதலிய வர்ணக் கோரைகளைத் தயாரித்துக் கொள்கிருர்கள். பத்தமடை ஊரில் உயர் ரகப் பட்டுப்பாய் நெய்வதற்குத் தாவரங்களினின் றும் தயாரிக்கப்பட்ட சாயத் தைக் கோரைக்குக் கொடுப்ப துண்டு. அந்தச் சாயம் அழியா மல், நீண்ட நாட்கள் இருக்கு மாம். ஆனல் இப்பொழுது ரசாயனக் கம்பெனியார் தயா ரிக்கும் சாயங்களையே பயன் படுத்துகிருர்கள். இச்சாயங்கள் நூலுக்குப் போடும் சாயங்களி னின்றும் வேறுபட்டவை.

சாதாரண பாய்களுக்குக் கற் ருழை மடலை, அல்லது நூலைக் கயிருகத் திரித்துப் பாவு போடு கிருர்கள். ஆனல் பட்டுப் பாய்க்கோ, கோரையின் தரத் திற்கேற்ப, நூலின் தரமும் மாறுகிறது; பாவும் நெருக்கமாக இருக்கிறது. உதாரணமாக நூற்று நாற்பதாவது நம்பர் பாய் நெய்வதற்கு நூரும் நம்பர் நூலின் மூன்று இழைகளை ஒன்ருக முறுக்கிப் பாவு போடு கிருர்கள். இந்த நூலுக்குப் பழைய சோற்றைக் கடைந்து கூழாக்கிப் பசை கொடுக்க வேண்டும். பாய் நெய்வதற்கு ஒரு சிறு தறியை அமைத்திருக் கிருர்கள். கைத்தறி நெசவின் அடிப்படையான தொழில் நுணுக்கம் தான், பாய் நெய் வதற்காக அமைக்கப்பட்டுள்ள தறியிலும் காணப்படுகிறது. கைத்தறி நெசவுக்கு ஊடை தயாரிப்பதற்கு அவசியமான சாதனங்களும் பாய் நெய்வதற் குப் பாவு போட உதவுகின்றன. அக்கருவிகளின் பெயர்கள்கேட் பதற்கே விநோதமாக இருக்கும். அவை முக்காலி, குச்சாலி, அச்சு, பண், மிதி பட்டை, அணைகுழல், சுற்று பறி, கம்பு, விழுது கம்பு, மணப் பலகை, திருவட்டம், வீசனம் மாந்தம் முதலியன. இக்கருவி

களைத் தயாரிக்கக் குறைந்தது ரூபாய் பதினைந்து போதுமானது. துணியை நெய்வது போலவே, பாயின் தறியிலும் பண்ணை மேலும் கீழுமாகச் செயல்படுத்திக் கோரை ஊடையை நனைத்து, பாவில் கொடுத்து, இரு முனைகளையும் விரல்களினால் அக்கோரையை உருட்டி, பின்னர் அச்சால் அணைக்கவேண்டும். ஒரு பாய் நெய்வதற்கு முக்கால் முடி கோரைத் தேவைப்படுகிறது. அதை அழுக வைத்து இழைத்த பின்பு நான்கிலொரு பாகமே தேறுகிறது. அதே அளவு தான் பாயின் மொத்த கனமாகிறது. பாயின் தரத்திற்கேற்ப அதை நெய்து முடிக்கக் காலம் பிடிக்கிறது. உதாரணமாக நூறும் நம்பர் பாய் நெய்வதற்கு 20 நாட்களும் நூற்று நாற்பதாம் நம்பர் பாய் நெய்வதற்கு ஒரு மாதமும் பிடிக்கின்றது. இவ்வாறு நெய்த பாயை கடத்தல் என்ற முறைப்படி, தறியின்பால் கிடக்கும் போதே, ஒரு கையைப் பாய்க்குக் கீழும், மற்றொரு கையை அதற்கு மேலும் கொடுத்துக் கோரைகளை விரல்களால் கவனமாகக் கோதி நெருக்க வேண்டும். பிறகு தறியினின்று பாயை எடுத்து, மணப் பலகையில் கிடத்தி ஒரு சிறு குழவிக் கல்லால் நன்றாகத் தேய்த்து மெருகு கொடுக்கிறார்கள். அவ்விதம் செய்யும் போது பாயிலிருக்கும் சிம்புக் கோரைகள், துணுக்குகள் எடுபடுகின்றன. அக் குழவிக்கல் கொண்டு தேய்ப்பதால், பாய் பளபளப்பாகத் தனி அழகு பெறுகிறது. பின்னர் பாயின் விளிம்புகளைக் கட்டி, நுண்மையாகவும் கவனத்துடனும் கோரைச் சிம்புகளை அரிகிறார்கள். இவ்விதம் அரியும்போது, ரண சிகிச்சையில் ஒரு டாக்டருக்கு எவ்வளவு கவனம் தேவையோ, அவ்வளவு கவனமும் நிதானமும் தேவை. இல்லாவிடில், பாயின் விளிம்புக் கோரை அறுபடுவதற்குப் பதிலாக, மென்மையான பட்டுப் பாயே அறுபட்டுவிடும். அதனால் இரண்டு மாத உழைப்பே பாழாகிவிடும். எனவே பாயின் விளிம்பைக் கூறுகக் கட்டி முடிக்க ஒரு நாள் பிடிக்கிறது. அதனால் விளிம்புக் கட்டு சிறந்த தையலைவிட அழகாகத்தோன்றுகிறது. பின்னர் பாயின் நான்கு மூலைகளிலும் பட்டுக் குஞ்சங்களை வைத்துக் கட்டுகிறார்கள். இவ்விதம் உருவான பாய், துணி உறையில் போடப்பட்டு விற்பனைக்கு வருகிறது.

பட்டுப் பாய்கள், வண்ணப் பாய், சிந்தாமணிப் பாய், கம்பளிப் பாய், மேஜைப் பாய், கலியாணப் பாய், தொழுகைப்பாய் என பல வகைப்படும். அப்பாய்களில் பெயர்களும், பூக்களும், கட்டங்களும், பட்டு நூலிலும், ஜரிகையிலும் போடுகிறார்கள். பாவு நூலையும், ஊடைக்கோரையையும் மாறி மாறிப் போட்டுப் பெயர்களும், பூக்களும் பொறிக்கிறார்கள். இதற்கு அதிகமான நாட்கள் பிடிக்கின்றன. எனவே பாயின் விலையும் அதற்கேற்ப

உயருகிறது. 130, 140 நம்பர் பாய்களில் ஒரு வரிக்குப் பெயர் போட ஏழு ரூபாயும், 110, 120 நம்பர் பாய்களில் ஒரு வரிக்கு ரூபாய் ஐந்தும் விலையில் கூட்டி நிர்ணயித்துள்ளார்கள். இப்பட்டுப் பாய்களை மடக்கி பையில் வைத்துக் கொள்ளும் அளவுக்கு மென்மையாக இருக்கின்றன. பல பொருட் காட்சிகளில், இவை வைக்கப்பட்டுச் சிறப்புற்றிருக்கின்றன. நம் நாட்டின் முதல் குடியரசு தினத்தன்று நம் ஜனாதிபதிக்கும், இங்கிலாந்து ராணி மகுடாபிஷேகத்தின் போது ராணியாருக்கும், விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட விலையுயர்ந்த பாய்களை இத் தொழிலில் ஈடுபட்டோர் அன்பளிப்பாக அனுப்பியுள்ளார்கள். இந்தப் பட்டுப்பாய்களைக் கொண்டு, அழகான மணிபர்ஸ், கைப்பை, தலையணை உறை, கூடை முதலியன செய்கிருர்கள். வட நாட்டில் இப்பாய்களை வேனிற் காலத்தில் படுக்கையின் மீது விரித்துப் படுக்கிருர்கள். இப்பாயின் மீது துயில்வது குளிர்ச்சியைத் தருகிறது. மேலும் அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில், இப் பட்டுப் பாய்கள் கைப் பைகளாகவும், கார்களில் அழகு மிதிகளாகவும், சாய்மானத்தில் வைத்துப் பொருத்துவதற்காகவும், மேஜை விரிப்புக்காகவும், பயன்படுத்துகின்றனர். இப்பாயின் விலை கோரையின் தரத்திற்கேற்ப உயருகிறது. 30-ம் நம்பர் பட்டுப்பாய் 72 அங்குல நீளம் 30 அங்குல அகலம்: விலை ரூபாய் 2-8-0. அதே நீள, அகலமுள்ள 140-ம் நம்பர் பாயின் விலை ரூபாய் 36 ஆகிறது. 30 அங்குல அகலத்திற்குமேல் பாய் கிடைப்பதரிது. ஏனெனில் கோரையின் நீளமே 30 அங்குலத்திற்கு மேல் போகாது.

பத்தமடையில் இத்தொழிலில் சுமார் 50 முஸ்லிம் குடும்பங்கள் தான் ஈடுபட்டிருக்கின்றன. ஒரு குடும்பத்திற்குச் சராசரி மூன்று தறிகள் என்று கணக்கு வைத்தாலும் மொத்தமாக 150 தறிகள்தான் பட்டுப் பாய் உற்பத்தியில் வேலை செய்கின்றன. அவர்கள் மாதம் மூவாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பாய்களை உற்பத்தி செய்கிருர்கள். இத்தொழிலில் ஆரம்ப முதல் இறுதிவரை அதிகக் கவனமும், பொறுப்பும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பொறுமையும் அவசியம். எனவே இந்தத் தொழிலில், கோரையைக் கீறுவதிலிருந்து, பாயின் விளிம்பு கட்டுகிறவரை வீட்டுப் பெண்களே முழுவதும் ஈடுபட்டுள்ளார்கள். கோரையை நீரில் அழுக வைப்பது, அலசுவது, சாயம் பிடிப்பது முதலிய காரியங்களை ஆண்கள் கவனிக்கிறார்கள். இவ்விதமாக, "காரியம் யாவினும் கை கொடுத்து" இருபாலாரும், இந்தத் தொழிலில் ஒன்றித்துப் பாடுபடுகிருர்கள். ஒருதனி நபர் நாள் முழுவதும் ஈடுபட்டால் நாள் ஒன்றுக்கு இன்று எட்டணா கூலி தான் தேறுகிறது. இத்தொழில் கட்

டுப்பாடற்ற, சுயேச்சையான தொழில். சாதாரணப் பாய் நெய்கிறவர்கள் இத்தொழிலில் ஊக்கம் காட்டுவதில்லை. காரணம் பட்டுப் பாய்கள் சீக்கிரம் விலைபாவதில்லை. மேலும் விரைவில் நெய்து முடிக்கக் கூடியவையுமல்ல. இப் பட்டுப் பாய்கள் விலை அதிகமாக இருப்பதாலும், ஆடம்பர, அலங்காரப் பொருள்களாகவுமிருப்பதாலும், நிதி வசதி பெற்றவர்களே வாங்க முடியும். மாளிகையில் விரும்பப்படும் இப்பட்டுப் பாய்கள் குடிலில் தான் உற்பத்தியாகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டோரின் பொருளாதார நிலை செம்மையாக இல்லை. வறுமை அதிகரிக்கும்போது, குறைந்த விலைக்கே, அதாவது உழைப்பிற்குரிய ஊதியத்தையுமிழந்து இப்பட்டுப் பாய்களை விற்றுவிடுகிறார்கள், இவற்றை விரும்பி வாங்குவோரிடம், அதிக விலை வைத்து விற்று விடுகிறார்கள். இந்தப் போக்கால் இத்தொழில் பாதிக்கப்பட்டது. இப்பாய்களின் தேவையை நிர்ணயிக்க முடியாததுபோல, உற்பத்தியையும் ஒரே நிலையில் வைக்க முடிவதில்லை. சமீபத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் ஒரு கூட்டுறவு சங்கத்தை நிறுவியுள்ளார்கள். அகில இந்தியக் கைத்தொழில் போர்டு, இந்தப் பாய் நெசவாளருக்கு ஐயாயிர ரூபாய் மான்யமளித்து உதவியிருக்கிறது. மேலும் சென்னை அரசாங்கமும், ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கும் இச்சங்கத்தின் மூலமாக, நெசவாளருக்கு உதவுகின்றன. இதனால் திட்டமிட்ட உற்பத்தியும் நிர்ணயிக்கப்பட்ட விலையும் இத்தொழிலில் இப்பொழுது அமலாகிக் கொண்டுவருகின்றன.

இத்தொழிலுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டியது நமது கடமை. பட்டுப்பாய் தொழிலை மேலும் பெருக்கவேண்டுமெனில், இப்பாய்களின் பயனையும், தன்மையையும் பற்றி நல்ல விளம்பரம் செய்ய வேண்டும். இத்தொழிலின் சிறப்பு நம் நாட்டில் கூடச் சரிவர அறிமுகமாகவில்லை. இத்தொழிலை மேலும் எவ்விதம் முன்னேற்றலாம் என்பதை கைத்தொழில் நிபுணர்கள் ஆராயவேண்டும். வெறும் அலங்காரத்திற்காகவும், ஆடம்பரத்திற்காகவும் மட்டுமே இப்பாய்களைப் பயன்படுத்தவில்லை. அவை மற்றக் காரியங்களுக்கும் பயன்படுகின்றன. 'பயனுள்ளது தானே, அழகுள்ளது' என்கிறான் கிரேக்க சிந்தனையாளன் பிளாட்டோ.

—"மணி விளக்கு"

இறப்பிலும் கிறுக்கு

ஒருவர் தன் மரணத்திற்குப் பின் தன் ஆஸ்திகள் யார் யாருக்குச் சேரவேண்டும், எவ்வாறு உபயோகிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டு எழுதும் பத்திரத்திற்கு 'உயில்' என்று பெயர். சாதாரணமான மனிதர்கள் தங்கள் விருப்பப்படி தங்கள் ஆஸ்திகளை உயில் பத்திரம் மூலம் யார் யாருக்கு நன்மை செய்ய வேண்டுமோ அவர்களுக்கு நன்மை செய்கிறார்கள். அசாதாரணமான கிறுக்குப் பிடித்த மனிதர்கள் உயில் பத்திரங்கள் மூலமும் பிறரை வேதனைக்கும் சிரமத்திற்குமாளாக்குகின்றனர்.

ஒரு சீனர் தன் மகன்மீது இருந்த வெறுப்பின் சின்னமாக தன்னுடைய உயில் பத்திரம் மூலம் ஐந்து ரூபாய்களை அவனுக்ளித்து இந்தத் தொகையை அவன் தற்கொலை செய்துகொள்வதற்கு ஒரு கயிறு வாங்கிக்கொள்வதற்காக உபயோகிக்கவேண்டுமென்றும் உயிலில் கண்டிருந்தார்.

ஒரு அமெரிக்கர் தன் உயில் பத்திரப் பிரகாரம் தன் மனைவிக்குக் கொடுக்கும் ஆஸ்திகளோடு தான் தரித்துக்கொண்டிருந்த ஒரு நிஜாரும் அவளைச் சேரவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

ஆஸ்திரேலியாவில் ஒருவர் தன் மனைவிக்கு பன்னிரண்டணுவையளித்து எந்தக் குளம், குட்டையிலாவது மூழ்கித் தொலைய எங்காவது செல்ல, வழிச்செலவிற்கிருக்கட்டுமென்று எழுதிவைத்திருந்தார்.

மேல் நாடுகளில் சிலர் மனைவி மேல் உள்ள ஆத்திரத்தைக் காட்டுவதற்கு ஒரு விநோதமான வழியைக் கையாளுகின்றனர். உயில் பத்திரங்களில் ஆஸ்தியில் ஒரு பாகத்தை மனைவிக்குக் கொடுத்துவிட்டு, அவள் இரண்டாவதாக மணந்துகொள்ளும் கணவனுக்கு அவளுக்குக் கொடுத்ததைவிட இரண்டல்லது மூன்று பங்கு அதிகமாக எழுதி வைத்துவிடுகின்றனர். இம்மாதிரி எழுதி வைத்த ஒருவர் கூறுங் காரணமென்னவென்றால் தன் உயில் பத்திரம் மூலம் ஏராளமாகப் பணம் கிடைக்கும் தன் மனைவியின் இரண்டாவது கணவனாவது தான் இறந்துபோனதைக் குறித்து சற்று மனம் வருத்தங் கொள்ளமாட்டானா வென்றுதான்.

மற்றொருவர் தன் மனைவியைப்போல் ஒரு விசித்திர சிருஷ்டியை மணந்துகொள்பவனுக்கு எவ்வளவு பொருள்கள் கொடுத்தாலும் தகும் என்ற காரணங் கூறினார்.

வியாபாரத்தில் பெருத்த நஷ்டமடைந்த ஒரு வியாபாரி தன் உயில் பத்திரத்தில் தன்னுடைய கடன்காரர்களில் நான்கு பேர்கள் தன் சவத்தை கல்லறைக்கு எடுத்துச் செல்லவேண்டுமென்று கோரியிருந்தார். தன் வியாபாரத்தை அழித்தவர்களின் உதவி முடிவுவரை இருக்கட்டுமென்று கிண்டலாக உயில் பத்திரத்தில் கண்டிருந்தார்.

ஒரு வக்கீல் தன் அளவற்ற சம்பாத்தியமனைத்தையும் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு எழுதிவைத்துவிட்டார். தன்னை வக்கீலாக அமர்த்திக்கொண்டவர்கள் எல்லோரும் பைத்தியக்காரர்கள்; அதனால்தான் பைத்தியக்காரர்களுக்குச் செய்யும் தொண்டு இது என்று காரணமும் கூறியிருந்தார்.

அமெரிக்காவில் ஒரு குருடி உயில் பத்திரத்தைத் தன் கையாலேயே எழுதினாள். உயில் பத்திரத்தை பாதி எழுதியானதும் பேனாவில் மை தீர்ந்துவிட்டது. இதை உணராமலேயே குருடி பத்திரத்தை முடித்துவிட்டதால் உயில் பத்திரத்தை பாதிக்குமேல் படிக்க முடியவில்லை. ஆனாலும் கையெழுத்து நிபுணர்களைக் கொண்டு மையில்லாத பேனாவால் கிறுக்கிய அக்ஷரங்களின் ரூபங்களைப் புரிந்துகொண்டு அவளது விருப்பங்கள் பூர்த்திசெய்யப்பட்டன.

இரண்டு மனைவிகளைக்கொண்ட ஒருவர் அவர்களிருவருக்குமாகத் தன் ஆஸ்திகளைப் பங்கிட்டார். அவர்கள் இரண்டு பேர்களும் ஒருவருடைய மனைவிகளே என்பது அந்த உயில் பத்திரம் மூலம்தான் இவர்களுக்குத் தெரிந்தது. உயில் பிரகாரம் கிடைத்த சொத்துக்களைப்பெற்றுக்கொண்டு இந்த இரு விதவைகளும் சக்களத்திப் போராட்டமின்றி அன்யோன்யமாக வாழ்ந்தார்கள்.

அமெரிக்காவில் ஒரு நீதிபதி இம்மாதிரி அநேக விந்தையான உயில் பத்திரங்களின் தகவல்களையெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறாம். மனிதன் உயிருள்ளபோது நடத்தும் வாழ்க்கையைவிட, உயிரிழந்த பின்னர் அவன் கிறுக்கு மனப்பான்மையால் நேரிடும் நிகழ்ச்சிகள் சுவையானதாகும்.

தீப்பெட்டியில்லாத தேசம்

●

அமெரிக்கர்கள் அக்னி தேவனின் அருளை அபரிமிதமாகப் பெற்றவர்கள். ஏனென்றால் அங்கு தீக்குச்சிகளுக்கு விலையே கிடையாது. இலவசமாகவே எல்லோருக்கும் தீக்குச்சிகள் கிடைக்கின்றன.

ஒரு பாக்கட் 'சிகரெட்' வாங்கினால் அத்துடன் இருபது தீக்குச்சிகள் கொண்ட ஒரு சிறிய தீக்குச்சி புத்தகம் இலவசமாகக் கிடைக்கிறது. உங்கள் துணிகளைச் சலவை செய்யும் லாண்டிரியிலிருந்து உங்கள் 'கோட்டு' வரும்போது அதன் பையில் ஒரு தீக்குச்சிப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கும். நீங்கள் வாடிக்கையாய் மளிகை சாமான் வாங்கும் பலசரக்குக் கடையிலிருந்து சாமான்கள் வாங்கும் போதெல்லாம் தீக்குச்சி புத்தகம் இலவசமாகக் கிடைத்துவிடுகிறது, ஹோட்டல்களில் தேநீரோ அல்லது ஏதாவது குளிர்ந்த பானமோ அருந்தப்போனால் நீங்கள் அமர்ந்திருக்கும் மேஜைமீது இருக்கும் தீக்குச்சிப் புத்தகங்களிலிருந்து உங்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொள்ளலாம். நாடகம் பார்க்கச் செல்வோர்களுக்கு நாடக நிர்வாகிகள் தீக்குச்சிப் புத்தகங்களை இலவசமாக விநியோகஞ் செய்கின்றனர்.

அமெரிக்காவில் மற்ற தேசங்களில் உள்ளது போல் தீப்பெட்டியே கிடையாது. தீக்குச்சிகளை கெட்டியான ஒரு அட்டையின் கீழ்பாகத்தில் ஒட்டி மேல் பாகத்தை அதன்மீது புத்தகம் போல் மூடி வைக்கப்பட்டிருக்கும். மூடும் பாகத்தின் வெளிப்புறத்தில் தீக்குச்சியை கிழிப்பதற்கு தீப்பெட்டியிலுள்ளது போன்ற மருந்துப் பசை பூசப்பட்டிருக்கும்.

தீக்குச்சிப் புத்தகங்கள் பத்திரிகைகளைப்போல் ஏராளமாக விளம்பரக் கருவிகளாக உபயோகிக்கப்படுகின்றன. எல்லா வியாபாரிகளும் தங்கள் பத்திரிகை விளம்பரங்களுக்காக ஒரு தொகையைச் செலவிடுவதுபோல் தீக்குச்சிப் புத்தக விளம்பரங்களுக்கும் செலவிடுகிறார்கள். தீக்குச்சிப் புத்தக உற்பத்தியாளர்கள் விளம்

பரஞ் செய்யும் வியாபாரிகளுக்கு விநியோகிப்பதற்காகவே தான் இந்த தீக்குச்சிப் புத்தகங்களை உற்பத்தி செய்கிறார்கள். இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் அமெரிக்கக் கம்பெனிகள் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டுத் தீக்குச்சிப் புத்தகங்களில் விளம்பரஞ்செய்து, இவற்றை பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகஞ் செய்கின்றனர். தீக்குச்சி ஒரு வீணாக்கமுடியாத பொருள் அல்லவா? ஏழையானாலும் சரி, பணக்காரனானாலும் சரி, தீக்குச்சியை விட்டெறிவதில்லையே! தீக்குச்சிப் புத்தகத்தையெடுத்து ஒரு குச்சியை கிழிக்கும்போது விளம்பரஞ் செய்யும் வியாபாரியின் பெயரைப் பார்க்கிறான். அந்த வியாபாரி உற்பத்திசெய்து விற்கும் பொருளின் பெயரைத் தெரிந்துகொள்கிறான். இல்லாவிடில் எந்த நாடகத்தை, எந்தக் கம்பெனியார் எந்த நகரில், எந்த தியேட்டரில் நடத்துகின்றனர் என்பதை அறிகிறான்.

பொது ஜனங்களிடம் நேரடியாகப் போய்ச் சேருவதற்கு இதைவிடத் தகுதியான ஒரு விளம்பர மார்க்கம் எதுவுமில்லை.

இந்த முறையை சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அமெரிக்கர் கண்டுபிடித்ததாகும். இந்தத் தீக்குச்சிப் புத்தகத்தை ஒருவாறு அமைத்ததும் அதை விலைகொடுத்து பொதுமக்கள் வாங்க மாட்டார்களென்று அவருக்குத் தோன்றியது. அப்பொழுது அவரிடம் தீக்குச்சிப் புத்தகத்தை உற்பத்திசெய்யும் உரிமையை வாங்கின ஒரு கம்பெனிக்கு ஒரு யோசனை தோன்றியது. உற்பத்தி செய்யும் தீக்குச்சிப் புத்தகங்களிலெல்லாம் ஏதாவது வியாபாரிகளின் விளம்பரங்களும் அந்தப் பொருளை உற்பத்தி செய்யும் செலவும் கிடைக்கும். அவற்றை விளம்பரஞ் செய்யும் வியாபாரி அவற்றை இலவசமாய் விநியோகஞ் செய்வதனால் அவருக்கு வியாபாரமும் பெருகும். புகழும் ஓங்கும். இந்த யோசனையின் விளைவே அமெரிக்காவில் இப்போது எங்கும் பரவியுள்ள இலவசத் தீக்குச்சிப் புத்தகங்கள்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

அவசரப் பிறவிகள்

●

மாதமாகாத (முதிராத) குழந்தைகள் எவை? பத்து மாதங்கள் கர்ப்பத்தில் தங்காமல் ஆறு மாதங்களிலும் ஏழு மாதங்களிலும் பிறக்கும் குழந்தைகள் முதிராத குழந்தைகள்தான். பத்து மாதங்கள் பூர்ண கர்ப்பத்திலிருந்தும் முழு வளர்ச்சியடையாத குழந்தைகளும் முதிராத குழந்தைகள் தான்.

இயற்கையின் நியதிப்பிரகாரம் கர்ப்பத்தில் குழந்தை சுமார் 280 நாட்கள் தங்கவேண்டும். சில சமயம் 280 நாட்கள் ஆவதற்கு முன்பே குழந்தைகள் பிறக்கின்றன. குழந்தைகள் பூரண வளர்ச்சியடைந்தாலும் சரி, அடையாவிடினும் சரி, இயற்கை நியதிக்கு மேல் அதிக நாட்கள் கர்ப்பத்தில் தங்கமுடியாது.

பிறக்கும் வேளையில் ஐந்தரைப் பவுண்டுகளோ அல்லது அதற்குக் குறைவாகவோ எடையுள்ள குழந்தைகள் யாவும் முதிராத குழந்தைகள் இனத்தைச் சேர்ந்தவை.

சமீப காலம் வரையில் முதிராத குழந்தைகள் யாவுமே பிழைக்காமலே இருந்தன. ஆனல் இப்பொழுது அப்படியல்ல; முதிராத குழந்தைகளில் நூற்றுக்கு எண்பதும் பிழைக்க வழியுண்டு. கர்ப்பத்திலிருக்கும் சூழ்நிலைகளை வெளியே சிருஷ்டித்து அவற்றில் குழந்தைகளைப் போதிய காலம் வைத்து பூரண வளர்ச்சியை யளிப்பதற்குத் தேவையான கருவிகள் இப்போது உள்ளன.

ஆப்பிரிக்காவில் வசிக்கும் சில வனவாசிகளிடையே முதிராத குழந்தைகள் போதிய வளர்ச்சி பெறுவதற்குச் சில முறைகளைக் கையாளுவதுண்டு. ஆமணக்குச் செடியின் இலைகளால் ஒருகூண்டு செய்து, அதில் குழந்தையை வைத்து, கூண்டையும் குழந்தையையும் ஒரு மண் பாத்திரத்தில் கிடத்திவிடுவார்கள். மண் பாத்திரத்தை தினமும் வெயிலில் வைப்பார்கள். எஸ்கிமோக்களிடையே கையாளும் வழி என்னவென்ருல் ஒரு பெரிய பறவையின் தோலோடு கூடிய இறக்கைகளை யுரித்து இறக்கைகளிருக்கும் பாகத்தை உட்புறமாக்கி அதற்குள் குழந்தையைக் கிடத்தி ஒரு தீபத்துக்கு மேல் தொங்கவிடுவார்கள். இம்மாதிரி வழிகளால்

குழந்தைக்குப் போதிய அளவில் உஷ்ணத்தை யளித்து கொஞ்சம் கொஞ்சமாக ஆகாரத்தையுங் கொடுத்து இரண்டல்லது மூன்று மாதங்களில் ஒரு சாதாரணக் குழந்தையாக்கி விடுவார்கள்.

இந்தப் பழைய வழிகளுக்குப் பதிலாக விஞ்ஞானிகள் புது முறைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். கண்ணாடியால் ஒரு கூண்டைச் செய்து அதற்குள் குழந்தையை வைத்து சரியான அளவுக்கு காற்றையும் உஷ்ணத்தையும் குழாய்கள் மூலமாக செலுத்தி முதிராமல் பிறந்த குழந்தைகளை வளரச் செய்கிறார்கள். இக் கருவிக்கு அடைகாக்குங் கருவியென்று பெயர்.

மேல் நாட்டு பிரசவ ஆஸ்பத்திரிகளிலெல்லாம் இம்மாதிரிக் குழந்தைகளுக்காக மிகப் பெரிதான அடை காக்கும் கருவிகள் உள்ளன. அவசர 'கேஸ்களு'க்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு சிறிய அடைகாக்கும் கருவிகளுமுண்டு.

இம்மாதிரி வளர்ச்சி பெறாத குழந்தைகளுக்கு இரத்தம் செலுத்துவதற்குக் கூட வழிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். விஞ்ஞானிகள் அடைகாக்குங் கருவியில் குழந்தையை வைத்து விட்டால் 48 மணி நேரத்திற்கு ஆகாரம் எதுவும் கொடுப்பதில்லை. பிறகு இரண்டு மணி நேரத்திற் கொருதடவை பால் கொடுப்பார்கள். இரண்டல்லது மூன்று மாதங்களான பிறகு தான் திரும்பி வீட்டிற்குச் சென்று தயாரால் வளர்ப்பதற்குத் தகுதிபெறும்.

நாலைந்து வயது வரையிலும் முதிராத குழந்தைகளைப் பற்றி நாம் மிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இம்மாதிரிக் குழந்தைகளுக்கு இருமலும் மற்ற சுவாச கோசக் கோளாறுகளும் சீக்கிரத்தில் பீடிக்கும். நாலைந்து வயதடைந்த பிறகு முதிர்ந்த குழந்தைகளுக்கும் முதிராத குழந்தைகளுக்கும் யாதொரு வித்தியாசமும் கிடையாது.

உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் முதிர்ந்த குழந்தைகள் அடைவதுபோலவே முதிராத குழந்தைகளும்அடையும். நெப்போலியன், சர்ச்சில் போன்ற அரசியல் தலைவர்களும், நியூட்டன், டார்வின் முதலிய பிரபல விஞ்ஞானிகளும் பிறவியில் முதிராத குழந்தைகளே யாவார்கள். இதிலிருந்து ஒரு முதிராத குழந்தை ஒரு முதிர்ந்த குழந்தையைவிட உடல் வலிமையிலோ மனோவலிமையிலோ குறைந்ததாயிருக்குமென்ற கவலை அநாவசியமென்று ஏற்படுகிறதல்லவா ?

—B. B. C. Broadcast

உயிரளிக்கும் உணவு

> உணவின்மையால் இறப்பவர்களுடைய எண்ணிக்கையைவிட அதிக உணவு உண்டு இறப்பவர்களின் எண்ணிக்கை தான் அதிகம்.

அன்றையதினம் ரயிலில் இரு ஆடவர்கள் பேசிக்கொண்டது இப்பொழுது ஞாபகத்துக்கு வந்தது.

"என்னப்பா! இப்பொழுது எங்கு பார்த்தாலும் வைட்டமின்கள் பேச்சாக இருக்கிறது. ஆனல் நமது கிராமத்தில் இருக்கும் கிராமவாசிகளேப் பாருங்கள். அவர்களுக்கு இந்த வைட்டமின்களேப் பற்றி என்ன தெரியும். அவர்கள் ஆகாரமும் ரொம்ப சாதாரணமாகத்தான் இருக்கிறது. அவர்கள் நம்மைவிட திடசாலிகளாகவும் இருக்கின்றனர்."

"அன்பனே, உனக்கு கிராமவாசிகள் எவ்வளவு பழங்கள் சாப்பிடுகிருர்கள் என்று தெரியுமா ? மாம்பழம், கொய்யாப்பழம் வாழைப்பழம் ஆகியவற்றையும் மாறி மாறி காலா காலத்தில் நிறைய அகப்படும் பச்சைமிளகாயையும் நகரவாசிகளேவிட கிராமவாசிகள் அதிகமாக உபயோகிக்கின்றனர். அவர்கள் அருந்தும் பழங்களிலும் பச்சை மிளகாய்களிலும் நிரம்ப நீ கூறுகிற சத்துக்கள் இருக்கின்றன. இந்த ரகசியத்திஞல் தான் அவர்கள் நம்மைவிட திடகாத்திர சரீரமுடையவர்களாக இருக்கின்றனர். நிறையக் கேழ்வரகும் உபயோகிக்கின்றனர்" என்ருன் மற்ெருருவன்.

இவர்களுடைய சம்பாஷணை என் பேஞவிற்கும் புத்திக்கும் சிறிது வேலே கொடுத்தது. ஏன் கொழுத்த பணக்காரர்களில் திடகாத்திரமான சரீரம் படைத்தவர்கள் சொற்பமாக இருக்கின்றனர் ? மேற்கூறிய இரண்டாவது நபர் இந்த கேள்விக்கு விடை கொடுத்துவிட்டார். கிராமவாசிகளின் ஆகாரம் எளியதாய் இருந்தாலும் சத்து நிறைந்தவையாய் இருக்கின்றன. பணக்காரர்கள்

கிராமவாசிகள் சாப்பிடுவதைவிட அதிகமாகத்தான் சாப்பிடுகிறார்கள். அவற்றைச் சரியாக ஜீரணிப்பதுதான் கிடையாது. அதற்கேற்ப உழைப்பும் பணக்காரர்களுக்கு கிடையாது. உணவின்மையால் இறப்பவர்களுடைய எண்ணிக்கையைவிட அதிக உணவுண்டு இறப்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறதென்பதை நாம் உணரவேண்டும். அதிக உணவால் பல வியாதிகள் வந்து அடைகின்றன. வியாதிகள் வராமல் தடுப்பதும் இல்லை. கடைசியில் டாக்டர்கள் பாடு நல்ல வேட்டைதான். அதற்காகத் தான் ஒவ்வொருவரும் தகுதியான உணவைத் தன் தேக நிலைக்கேற்றவாறு உட்கொள்ளவேண்டுமென்று கூறுவது மிகையாகாது. நம்மில் அநேகர் நிறைய காய் கறிகள், பழ தினுசுகள், தித்திப்பு வகையறுக்கள், பருப்பு தினுசுகளையும் உணவோடு சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் எது தங்கள் தேக நிலைக்கு உகந்தது என்பதை தெரிந்துகொண்டு சாப்பிடவேண்டும். தேகத்தைப் பலப்படச் செய்யும் சத்துக்களைப் பற்றி கூறும் பொழுது "நாங்கள் எல்லாம் அருந்துகிறோம். அதைப் பற்றி உங்களுக்கு அக்கறை இல்லை. நாங்கள் திடகாத்திரராய் இருக்கிறோம்" என்று கூறுவது அவ்வளவு உசிதமான பதில் அல்ல.

வாஸ்தவந்தான். இப்பொழுது நல்ல வலிமையுடன் இருக்கத் தான் செய்கிறோம். எந்த எதிர்பாராத நேரத்திலும் வியாதி நடுத்தர வயதில் வரலாம். நல்ல வாலிபத்தில் சரியான தொகுக்கப் பட்டஉணவு அருந்தியிருந்தால் நடுத்தர வயதில் வரும் வியாதியை சமாளிக்கலாம். வராமலே தடுத்தும் இருக்கலாம். சிறுவர்களுக்குச் சரியான உணவு ஊட்ட வேண்டுமென்பது முக்கிய விஷயமாகும். பெற்றோர்கள் தான் அவர்களின் சாப்பாட்டின் ஒழுக்கத்தையும், அவர்களுடைய எளிமையான சரீரம் எவ்வளவு தூரம் தாங்குமென்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

பழம், நாம் அருந்தும் உணவில் முக்கிய ஸ்தானம் வகிக்க வேண்டும். பழம் நிறைய சாப்பிடவேண்டும். நிறைய பேரிக்காய், தக்காளி, ஆப்பிள்பழம் சாப்பிடுபவர்கள் அதிர்ஷ்ட சாலிகளே! பழ ஆகாரத்திற்குப் பிறகு பால் முக்கிய உணவாகும். குழந்தைகளுக்குத்தான் பால் ஏதுவான ஆகாரமாகும் என்று பெரும்பாலான ஜனங்கள் நினைப்பதுண்டு. தங்கள் குழந்தைப் பருவத்தை

தாண்டியதும் டீயிலும், காப்பியிலும் விடும் பால் போதுமென்று கூறுவது சரியாகாது. நிறைய பால் தினமும் அருந்தவேண்டும். பால் வியாதியைத் தடுத்து, தேகத்தின் வளர்ச்சியையும் வளப்பத்தையும் அதிகரிக்கிறது. தலை மயிர், எலும்பு, கண்கள், பற்கள் எல்லாவற்றிக்கும் பலத்தைக் கொடுக்கும். இது தவிர பால் ரத்தத்தை நன்ருகச் சுத்தி செய்யும். விஷ வஸ்துக்கள் தயாரிக்கும் சில ஐரோப்பிய தொழிற்சாலைகளில், விஷ வஸ்துக்களின் கொடுந்தன்மை தொழிலாளர்களின் உடம்பில் பரவாமலிருக்க ஊழியர்களை நிறைய பால் அருந்தச் செய்கின்றனர். இவர்கள் வேலைக்கு வரும் பொழுதே நிறைப பால் அருந்தி விட்டு வருகின்றனர். எல்லாம் தொழிற்சாலையின் செலவில் தான். பால் ரத்த சுத்தி செய்வது என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்.

வெண்ணெய், உணவில் வேருெரு முக்கிய அம்சமாகும். பல் நன்ருக கெட்டியாக இருப்பதற்கும் குழந்தைகளுக்கு பல் வளருவதற்கும் மிக்க உதவுகிறது. க்ஷய ரோகத்தை எதிர்த்து போராடக் கூடிய முக்கிய உணவுகளில் வெண்ணெய் தலை சிறந்தது. க்ஷய ரோகத்திற்குக் காரணமான கிருமிகளுக்கு வெண்ணெய் ஒரு பெரிய எதிரியாகும். தயிர், உலகத்திலேயே மிக்கப் போற்றத்தக்க அமிருதம் என்றே கூறலாம். ஆயுளைத் தயிர் உணவு, விருத்தி செய்கிறது.

அதிருஷ்ட வசமாய் இந்தியாவில் பெரும் பகுதியினர் தயிரை ஏராளமாக உபயோகிக்கின்றனர். பச்சைக்காய் கறிகளையும், கீரை தினுசுகளையும் நிறைய உபயோகிக்கவேண்டும். காரட் என்னும் கிழங்கு வகைகள் கண் பார்வையை விருத்தி செய்யும். இப்பொழுது சமீபத்தில் நடந்த உலக யுத்தத்தில் ஐரோப்பாவில் ஆகாய விமானப் படைகளின் விமான ஓட்டிகள் நிறைய காரட் சாப்பிடும் படி வற்புறுத்தப்பட்டனர். அவர்களுக்கு கண் பார்வை தானே முக்கியம். கோதுமை, உளுந்து, கடலை இவைகளில் நிறைய சத்துக்கள் இருக்கின்றது. பாலிஷ் செய்யப்பட்ட அரிசியில் போஷாக்கு சத்துமிகக் குறைச்சல். ஆனல் இரத்தக் கொதிப்பு (Blood Presure) என்ற வியாதிக்கு அரிசி ஆகாரம் இன்றியமையாதது. எப்படி, இனிப்பு பண்டங்கள் குழந்தைகளின் வளர்ச்சியைத் தடுக்கும் என்ற தப்பபிப்பிராயம் உண்டாயிற்று என்று நான் சிந்தித்தேன். சர்க்கரை எலும்பு வளர்ச்சிக்கு ஒரு முக்கிய உணவாகிறது. மித

மாக சர்க்கரையை ஆகாரத்தோடு சேர்த்துக்கொள்வது தேகத்திற்கு ஆரோக்கியம் தரும். கடந்த யுத்தத்தில் நிறைய சர்க்கரை உணவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சில பெற்றோர்கள் குழந்தைகளுக்கு தித்திப்பு பண்டம் கொடுத்தால் அவர்கள் பற்களைக் கெடுத்துவிடும் என்ற தப்பபிப்பிராயம் கொண்டுள்ளனர். குழந்தைகளுக்குப் பற்கள் விழுந்து மறுபடியும் முளைக்கும் காலையில் அவை மிக்க உறுதியாக முளைப்பதற்கு நிறைய இனிப்பு பண்டங்கள் கொடுக்கவேண்டும் குழந்தைகளுக்கு காலை, மாலை சாப்பாட்டுக்கு மத்தியில் இனிப்பு கொடுக்கவேண்டும். ஆகாரத்தோடு கொடுத்தால் சீக்கிரம் ஜீரணமாகிவிடும். குழந்தைகளும் நன்றாக வளரும்.

—நாமகிரி ஸ்ரீனிவாசன்

உத்தம யோகிகள்

ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் உயர்ந்த பதவிகளை வகிப்பதிலும் நம் மக்கள்மீது அதிகாரஞ் செலுத்துவதிலும் மோகங் கொண்டவர்களென நினைத்துக் கொண்டிருந்தோம். மகிழ்ச்சியுடன் அதிகாரப் பதவியை உதறிவிடுவதற்கும் நமக்கு ஒரு படிப்பினை தந்துள்ளார்கள் ஆங்கிலேயர்கள். அதிகாரத்தை மகிழ்ச்சியுடன் உதறித்தள்ளுவதற்கு இன்னும்எத்தனையோ உதாரணங்கள், உயர்ந்த பதவிவகித்த பல ஆங்கில அதிகாரிகளிடையே காணலாம்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் எவ்வளவு ஆர்வமும் விருப்பமும் கொண்டவர்களாயிருந்தார்களோ அதேபோல் அதிகாரத்தை விடுவதிலும் அவ்வளவு ஆர்வத்தையும், விருப்பத்தையும் காண்பித்துள்ளார்கள். அந்தப் பற்றற்ற மனப்பான்மையைத் தான் கீதையில் ‘யோகம்’ என்று கூறப்பட்டுள்ளது.

யோகத்தைப் பற்றி அழகாகவும் விரிவாகவும் பேசத் தகுதியுள்ள எத்தனை சமஸ்கிருத பண்டிதர்களுக்குப் பிரிட்டிஷ் அதிகாரிகள் அனுஷ்டித்த யோகத்தைக் கையாள முடியும்? பிரிட்டிஷாரிடமிருந்த அதிகாரத்தை நம் கைக்கு மாற்றிக்கொண்டதால் மட்டும் நாம் நன்மை பெற முடியாது. நமக்கு நன்மையளிப்பது நமது நன்னடத்தையே.

—**Rajaji**

மாதர்கள் தினந்தோறும் கதை கேட்பது நம் நாட்டில் மட்டுமல்ல

ரேடியோவிலும் தொடர் கதைகள்

கதை சொல்வதும் கதை கேட்பதும் தமிழ் நாட்டின் தனித் தன்மையைச் சேர்ந்ததாகும். சாதாரணமாக ஆலயங்களில் பண்டிதர்களும், புராணிகர்களும், பக்தி ரஸமான கதைகளைப் பாமர ஜனங்களுக்குக் கூறுவது வழக்கம்.

பக்த விஜயம், ராமாயணம், பாகவதம், பாரதம் முதலிய இதிஹாசப் புராணங்களையும் கம்ப ராமாயணம் போன்ற இனிய காவியங்களையும் எடுத்துரைத்து பொருள்களை விளக்கி, பாமர மக்களுக்கு மகிழ்ச்சியுமளித்து மோக்ஷத்திற்கும் வழி காண்பிக்கிறார்கள் நம் நாட்டுப் புராணிகர்கள்.

நம் நாட்டில் இம்மாதிரிப் புராணக் கதைகளைச் சொல்வதும் அவற்றை கேட்பதும் இரவு வேளையில்தான். சில புராணங்களை மாதக் கணக்காய் சொல்வதும் கேட்பதும் நம் நாட்டில் ஒரு புராதன வழக்கமாயிருப்பதோடு, இப்போது இந்தப் பழக்கம் மேல் நாடுகளிலும் வியாபித்துள்ளது.

அமெரிக்காவில் சிறிது காலமாக நடந்துகொண்டிருக்கும் கதாப் பிரசங்கத்தைப் பற்றியுள்ள தகவல்கள் நம் நாட்டுப் புராணக் கதைகளைக் கேட்போருக்கு ருசிகரமாயிருக்கும். ஆனால் இந்தக் கதைகள் புராணங்களுமல்ல, பழைய கதைகளுமல்ல. இவையெல்லாம் இன்றைய பிரபல நாவலாசிரியர்கள் இயற்றும் தொடர் கதைகள் தான்.

ஒரு மனிதன் வாயாற் கதையைச் சொல்லி அந்த இடத்தில் மக்கள் கூடுவதை அமெரிக்கர்கள் காட்டுமிராண்டித்தனமென்று நினைப்பார்கள்.

வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் நூதன வழிகளைக் கையாளும் அந்நாட்டில் கதைகள் சொல்வதும் நூதன வழிகள் மூலம்

தான். இந்தக் கதைகளைக் கேட்பதற்கு நூற்றுக் கணக்கான மக்கள் கூட வேண்டுமென்பதில்லை. யாவரும் அவரவர் வீடுகளிலிருந்துகொண்டே கதைகளைக் கேட்டு மகிழ்ச்சி யடையலாம்.

அமெரிக்காவில் ரேடியோ மூலம் செய்திகள், சங்கீதக் கச்சேரிகள், நாடகங்கள் முதலியவற்றை ஒலிபரப்புவதோடு தொடர் கதைகளையும் தினந்தோறும் ஒலிபரப்பி வருகிறார்கள். செய்திகளையும், சங்கீதக் கச்சேரிகளையும் கேட்காமற் போனாலும் தொடர் கதைகளை அமெரிக்கமாதர்கள் கேட்கத்தவறமாட்டார்கள்.

அநேகமாகத் தொடர் கதைகளை மத்தியான வேளைகளிலே தான் ஒலிபரப்புவார்கள். அதாவது ஸ்திரீகள் அவர்கள் வீட்டுக் காரியங்களை முடித்துவிட்டு ஓய்வெடுத்துக்கொள்ளும் நேரத்தில், ரேடியோவில் வரும் நிகழ்ச்சி தொடர் கதைகளாகும். தினந்தோறும் ஐந்தாறு தொடர் கதைகளின் ஒவ்வொரு அத்தியாயம் ரேடியோவில் வரும்.

ஒவ்வொரு தொடர் கதையையும் 15 நிமிஷ நேரம் சொல்வார்கள். தினந்தோறும் இவற்றை மிகவும் ருசிகரமான கட்டத்தில் நிறுத்தப்படும். அதனல் லட்சோப லட்ச அமெரிக்க மாதர்கள் தினந்தோறும் மிக ஆவலுடனும் உற்சாகத்துடனும் ரேடியோ தொடர் கதைகளைக் கேட்கிறார்கள்.

சில ரேடியோ தொடர் கதைகளைப் பற்றிய தகவல்கள் கீழ் வருமாறு :--

"ஒரு டாக்டரைப் பற்றிய தொடர் கதையைக் கூறத் தொடங்கி பதினான்கு வருஷங்களாகின்றன, இன்னும் தொடர்ந்து வருகிறது..அந்தக் கதையில் ஒரு டாக்டருக்கும் அவருடைய நர்ஸுகளுக்குமிடையே நடக்கும் பல விஷயங்களன்றி வைத்தியத் துறையைச் சேர்ந்த அநேக நூதனமான அம்சங்களுமிருக்கும்.

இன்னொரு டாக்டரைப் பற்றித் தொடங்கிய கதையும் ஆரம்பித்து பதினாறு வருஷங்களாகின்றன. இக்கதை இரு வைத்திய சகோதரர்களைப் பற்றியதாகும். இவர்களை இவர்களுடைய அத்தை வளர்த்து வந்தாளாம். சகோதரர்கள் மணஞ் செய்து கொண்டு அவர்களுடைய மனைவிகள் வீட்டிற்கு வந்த பின்பு அத்தைக்கும் இவர்கள் மனைவிகளுக்கும் நேர்ந்த தகராறுகளைப் பற்றி விவரிக்கும் கதை இது.

பதினேழு வருஷங்களாக ஒலிபரப்பப்படும் மற்ளெரு தொடர் கதையில், மாமனர் மாமியார், மாப்பிள்ளைகளுக்குமிடையே நேரும் சச்சரவுகளை ஓயாமற் சொல்லி வருகிறார்கள்.

இம்மாதிரி அநேக கதைகளை அமெரிக்காவில் ரேடியோவில் ஒலிபரப்புகிறார்கள். ரேடியோ தொடர் கதைகள் மாதர்களுக்குப் பிடிக்கவேண்டுமானல் கதையில்—ஒரு டாக்டர் இருக்கவேண்டும்; குழந்தைகள் பிறக்கவேண்டும்; காதல் நிறையவேண்டும். அமெரிக்க மாதர்களுக்கு, வாழ்க்கையில் தத்தளித்து மனேதைரியத்துடன் வெற்றியடையும் மாதர்களைப் பற்றிய கதைகள் பிடிக்காது.

இக்கதைகளைக் கேட்கும் மாதர்கள் கதாபாத்திரங்களைத் தங்கள் வாழ்க்கைக்கு ஒரு படிப்பினையாகக் கொள்கிறார்கள்.

அவர்களின் துன்பங்களைப் பற்றிக் கேட்கும்போது மாதர்கள் வாய்விட்டு அழுவார்கள். தங்களுக்குப் பிடித்த கதைகளைப் பற்றியும் கதா சந்தர்ப்பங்களை ஆமோதித்தும் பிடிக்காத விஷயங்களைப் பற்றிக் கண்டித்தும் ரேடியோ நிலையங்களுக்கு ஏராளமாகக் கடிதங்களெழுதுகிறார்கள்.

அமெரிக்கா ரேடியோவின் ஜீவநாடி அந்நாட்டு மாதர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் தொடர் கதைகள் தான் என்று அமெரிக்கப் பத்திரிகைக்காரர்கள் கருதுகிறார்கள்.

ரயில் வண்டியும் மாட்டு வண்டியும்

ஹிந்தியில் இருப்பதைவிட நம் தென்னிந்திய மொழிகளில் அழகிய இலக்கியங்கள் பல இருக்கின்றன. அதனல் ஹிந்தி பரவுவதற்காக உழைக்கும் தொண்டர்கள் வேறு மொழிகளைத் தாய் பாஷையாகக்கொண்ட மக்களின் மனத்தை புண்படுத்தக்கூடாது, ஏனென்றல் ஹிந்தி இந்தியா முழுவதும் போகும் ரயில் வண்டி போன்றது. தாய்மொழியோ உள்ளூரில் மட்டும் நடமாடும் மாட்டு வண்டிக்குச் சமானம். அதனல் ரயில் பிரயாணிகள் மாட்டு வண்டியை வெறுக்கவேண்டுமா ? ரயில் வண்டியை விட்டு இறங்கினல் மாட்டு வண்டிகளில் தானே உங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லவேண்டும்.

—ராஜாஜி

சுதந்திர தினம் கொண்டாடிய நாம் இனி அடிமைப்படோம் என்று மனோ திடம் கொள்வோம்.

அடிமைத்தனத்திற்கு அஸ்திவாரமிட்டவர்

●

ஆங்கிலேயர்கள் இப்போது நம்மீது ஆட்சிபுரிவதில்லை. ஆயினும் இந்தியாவை சிறிது சிறிதாக ஆக்கிரமித்து தங்கள் ஆட்சியை நிறுவுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்த நாட்களைப் பற்றி அடிக்கடி அவர்கள் ஞாபகப்படுத்திக்கொள்வதுண்டு. இரண்டு நூற்றூண்டுகளாக இந்த நாட்டை ஆண்டு வந்த ஒரு இனத்தாருக்கு இங்கு நடத்திய ஆடம்பரவாழ்க்கையை எளிதில் மறக்க முடியாது.

பழைய விஷயங்களை ஞாபகமூட்டுவதற்காக ஒரு ஆங்கில எழுத்தாளர், இந்தியாவின் முதன் ராஜப்பிரதிநிதியாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸைப் பற்றி ஒரு புத்தகம் சமீபத்தில் எழுதியுள்ளார். நம் அடிமைத் தனத்திற்கு அஸ்திவாரமிட்டவர் என்று இந்தியரால் கருதப்படும் வாரன்ஹேஸ்டிங்ஸையும் ராபர்ட் கிளைவையும் இங்கிலாந்தில் பெரிய மனிதர்களென்றுதான் கருதுகிறார்கள். 1750—ம் ஆண்டில் ஹேஸ்டிங்ஸ் பதினெட்டு வயதுள்ள ஒரு வாலிபனாகத்தான் முதன் முதவில் இந்தியாவில் தோன்றினான். அப்பொழுது இந்தியாவிலிருந்த நிலைமையும் ஏறக்குறைய இன்றைய நிலைமையேதான். இனத்தோடினத்தாருக்குப் பகை! மாகாணத்திற்கு மாகாணம் பூசல்; தலைவர்—தொண்டர் என்ற வித்தியாசம் இல்லாமை; எல்லாரும் தலைவர்களே! இம்மாதிரி நிலைமை ஒரு ராஜ்யத்தில் ஏற்பட்டால் அது வெளி நாடுகளி

லிருந்து பணத்தோடும் ராஜதந்திரத்தோடும் வரும் ஆக்ர மிப்பாளர்களுக்கு மிக அனுகூலமான சூழ்நிலை தானே! வாரன் ஹேஸ்டிங்ஸ் கிழக்கிந்திய கம்பெனிக்கு ஒரு குமாஸ்தா வாக வந்தார். அப்பொழுது கிழக்கிந்திய கம்பெனியார் வங்கா ளத்தில், தங்கக்கட்டிகள், துணி ரகங்கள், துப்பாக்கிகள் மற்ற யுத் தக் கருவிகள் முதலியவற்றை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டிருந் தார்கள். இந்தக் கம்பெனியார் வியாபாரம் முதலியவற்றிற்காக ஏராளமான பணத்தை வாரி இறைத்துக்கொண்டிருந்தனர். இந்தி யாவில் உற்பத்தியாகும் எந்தப் பொருள்களையும் அவர்கள் வாங் கத் தயார். எத்தனையோ இந்தியர்களுக்கு உத்தியோகமளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்த யுத்தக் கருவிகளை உபயோகித்து எந்த அக்கிரமங்கள் செய்யவும் தயாராயிருந்தனர். இதனால் கல்கத்தாவில் சேர்ந்திருந்த இந்த இந்தியக்கருங்காலிகள் கூட்டத்திற்களவேயில்லை. முஸ்லீம் உத்தியோகஸ்தர்கள் ஹிந்து பாங்கர்கள், மார்வாரி பாங்கர்கள், ஜர்மானிய வியாபாரிகள், போர்ச்சுகீஸிய வியாபாரிகள்; கலப்பு ஜாதியார்கள், அடிமைகள்— முதலியவர்களால் கல்கத்தா நகரம் நிறைந்திருந்தது எல்லாவித அயோக்கியர்களுக்கும் ஏராளமான பொருள் சம்பாதிக்க வசதி யிருந்தது. கங்காணிகளுக்கும், தரகுக்காரர்களுக்கும் அமோக மான வருமானம். நினைத்த மாத்திரத்தில் எவரை வேணுமானு லும் கொன்றுவிடுவார்கள். விரோதிகளைக் கொலை செய் வதற்கோ அல்லது ஆற்றிலோ குளத்திலோ தள்ளுவதற்கோ கண் களை நோண்டுவதற்கோ சிரமமேயில்லை. கிழக்கிந்திய கம்பெனி யின் பிரதிநிதிகளான இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்கள் கம் பெனியின் வியாபாரத்தைச் செய்வதோடு கம்பெனிக்குத் தெரியா மலும் லாகிரிப் பொருள்கள் வியாபாரத்திலும் ஈடுபட்டு ஏராள மான பொருள் சம்பாதித்துக்கொண்டிருந்த காலம் அது. வாரன் ஹேஸ்டிங்ஸும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர் தான்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் 35 ஆண்டுகள் இந்தியாவில் வசித்திருந் தார். இந்தியாவிற்கு வந்த சமயத்தில் அநீதியாகப் பணம் சம்பா தித் திருந்தாலும் தனக்கு அதிகாரம் கிடைத்த பிறகு மற்ற உத்தி யோகஸ்தர்களின் ஒழுங்கற்ற முறைகளைக் கண்டித்தார். அப் போது வங்காளத்தைப் பீடித்த பஞ்சத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் பலியானர்கள். இம்மாதிரிச் சம்பவம் இனி நடக்கக்கூடா

தென முன்னேற்பாடாக அநேக நெற்களஞ்சியங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார். திபேத் ராஜ்யத்தைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சியும் எடுத்துக்கொண்டார். வங்காளத்தில் ஒரு கல்லூரியை அமைத்தார். பழைய ஹிந்து மத இதிஹாஸங்களையும் புராணங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தார். ஆங்கிலேயர்களை அங்கத்தினராகக் கொண்டதும் அவர்களது மேற்பார்வையிலுள்ளதுமான ஒரு ராணுவத்தைச் சிருஷ்டிக்கவேண்டுமென கம்பெனியாருக்கு வற்புறுத்திக் கூறினர்.

வாரன் ஹேஸ்டிங்ஸின் குணவிசேஷங்களில் ஒன்று மிக முக்கியமானது இந்தியர்கள் கறுப்பர்களாயினும் அவர்களைப் பற்றி இவருக்கு வெறுப்பிருக்கவில்லை. இந்தியர்களிலும் மதிப்புக்குரியவர்கள் ஏராளமாக இருக்கிறார்களென்றும் அவர்களை ஆங்கிலேயர்கள் கௌரவித்து பதவிகளையளிப்பது நலம் என்றும் அடித்துக் கூறியுள்ளார்.

அந்தக் காலத்தில் இந்தியர்களைப் பற்றி இத்தகைய சம மனப்பான்மை அபூர்வமல்ல. ஒரு ஆங்கில உயர்தர ராணுவ உத்தியோகஸ்தர் இந்திய ராஜகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு ராஜகுமாரியை மணஞ் செய்துகொண்டிருந்தார். அந்த மனைவி மூலம் அவர் பெற்ற மகனை இங்கிலாந்திற்கு அனுப்பித்து அங்குள்ள பிரபுக்களின் குமாரர்களுக்கு மட்டும் வித்தியாப்பியாசம் அளிக்கும் கல்லூரியில் வித்தியாப்பியாசம் செய்வித்தார். வாரன் ஹேஸ்டிங்ஸிற்குள்ள ஒரு மிகப் பெரிய குறை அவரது அகம்பாவமாகும். தன்னைப்போல் திறமையுள்ளவரும் அறிவாளியுமான எவரும் அதுவரை பிறந்ததே கிடையாது என்ற மனப்பான்மை கொண்டவர். இந்தியாவிலும் அவருக்கு ஆங்கில இனத்தைச் சேர்ந்த பெரும் விரோதிகளிருந்தனர். அவர்கள் இவரை எதிர்த்தும் ஓயாமல் குறை கூறிக் கொண்டுமிருந்தார்கள். முடிவாக அவர் இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்றுவிட்டார். இவர்மீது லஞ்சக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்த வழக்கு விசாரணை ஒன்பது வருஷ காலம் நடந்தது. ராணுவத்துடன் இந்தியாவிற்கு வந்து யுத்தத்தால் வெற்றி பெற்று இந்தியர்களை அடக்கியாளவில்லை ஆங்கிலேயர்கள். இந்த நாட்டில் இன்றைக்கும் நிலவியுள்ள குற்றங் குறைகள், பூசல்கள் மக்களிடையே போட்டிக் கலகங்கள் முதலியவற்றால் தான் ஆங்கி

லேயர்களுக்கு இந்தியாவில் இடங்கிடைத்தது. இடங்கிடைத்த பின்னர் அவர்கள் நிர்வாகத் திறமையினாலும் சாதுர்யமான அரசியல் சூழ்ச்சிகளாலும் வேண்டும்போது ராணுவ பலத்தாலும் நம் நாட்டு மக்களை மயக்கி அடக்கி, மண்டையிலடித்து இரண்டு நூற்றாண்டுகள் இந்தியாவில் ஆட்சி புரிந்தார்கள். இந்த உண்மையைத் தான் வாரன் ஹேஸ்டிங்ஸ் முதலிய சரித்திர பிரபலஸ்தர்களின் வரலாறுகள் நமக்கு ஞாபகமூட்டுகின்றன. இந்த வரலாறுகளிலிருந்து 17 - ம் நூற்றாண்டில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சரியான பாடத்தை இப்போதாவது கற்றுக்கொள்வது நம் கடமையாகும்.

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES
FIRST - CLASS CLOTHES
MADE OF SUPERIOR B. & C.
MATERIALS

Prices Moderate

பழமொழிகள்

காசு கணவன், கவலை மனைவி.

இயற்கை ஒரு பெரிய கிணறு. அதில் அழகு ஒரு சிறு வைர மோதிரம். அந்தக் கிணற்றைத் துரு வாரி மோதிரத்தை எடுப்பவன் கவி.

நண்பர்களும் பிடில் தந்திகளும் எப்பொழுதும் முடுக்கி வைக்கக் கூடியவையன்று.

புகழ்ச்சி ஒரு பூதக் கண்ணாடி. அது மனித சொரூபத்தைப் பெரிதாக்கிக் காட்டுகிறது.

மணியோசை கேட்டதும் கோவிலுக்குச் செல்; கரண்டியோசை நின்றதும் சாப்பாட்டுக்குச் செல்.

குருடன் கையில் வைடூரியமும், கூழாங்கல்லும் ஒன்றுதான்.

குரூபியான பெண்ணைக் கண்டால் கண்ணுக்கு எரிச்சல். அழகான பெண்ணைக் கண்டால் மூளைக்குக் குடைச்சல்.

காசில்லாத பை கவிழ்ந்து தான் படுக்கும், நெறித்து நிற்காது.

தைரியம் சண்டையில் மாட்டிக் கொள்ளும்போது, தந்திரம் தப்பித்துக் கொள்ள வழி தேடுகிறது.

கோர்ட்டிலிருக்கும் நீதிபதியும் வலையிலுள்ள மீனும் சமம்.

பித்துப் பிடித்த மூளை தான் பிசாசின் கோர மாளிகை.

தேகத்தில் உண்டாகும் நோய்கள் ஆரோக்கியக் குறைவுக்கு ஈடு செய்யப்படும் வரிகள் தான்.

பெரும் பிரசங்கிகள் எல்லோரும் மதகு உடைந்த ஏரிபோலத் தான். அவர்கள் மனத்தில் ஒன்றும் நிற்காது. எல்லாவற்றையும் பேசிக் கொட்டி விடுவார்கள்.

குள்ள -நரி வேதாந்தம் பேசும்போது உன்னுடைய கண் உன் கோழி மேலிருக்கட்டும்.

கள் குடித்தவன் கண்ணாடியைப் பார்த்தால் கண்ணாடிக்குத் தான் ஆபத்து.

பணத்தின் மீது உன் அதிகாரத்தைச் செலுத்து, இல்லாவிட்டால் அது உன்மீது அதிகாரம் செலுத்தும்.

எல்லா மாத்திரைகளுக்கும் சர்க்கரைப் பூச்சு வேண்டியதில்லை. கசப்பு மாத்திரைக்குத்தான் அது வேண்டும்.

Compiled by *T. S. J.*

பாரதத்துப் பெண்!

மாலைநேர மஞ்சள் வெயிலிருக்கும்போதே தெய்வ சந்நிதானத்தில் விளக்கேற்றி வைத்து, குங்குமமிட்டு நமஸ்கரித்துவிட்டு, முன்னடித் தாழ்வாரத்திலமர்ந்து பகவந் நாம ஸ்மரணை செய்து கொண்டிருந்த மாமனுருக்கு நமஸ்காரம் செய்து "தீர்க்க சுமங்கலியாக இரு அம்மா" என்ற ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு மாமியாருக்கு நமஸ்காரம் செய்தாள். அவள் என்றும் போல அன்றைக்கும் "நெற்றிப் பொட்டழிச்சு, தாலியைப் பிடிச்சிழுக்கணும்" என்றாள்.

இந்த ஆசீர்வாதத்தை ஏழு ஆண்டுகளாகச் செய்துகொண்டிருந்தாள் மாமியார். மாமியாருடைய ஆசீர்வாதத்தின் பொருள் என்ன என்பது மருமகளுக்குத் தெரியாது. தனக்குத் தெரியவேண்டும் என்று ஆவல் பிறந்த சமயம் பெரியோர்களிடம் போய் 'நீங்கள் சொல்வதன் அர்த்தம் என்ன' என்று கேட்பதா மரியாதையில்லாமல், நமக்கு நல்லதைத் தானே நினைப்பார்கள் பெரியோர்கள்' என்று அடக்கமாக இருந்தாள் அந்தப் பெண்.

மருமகள்மீது மாமியார் உயிராக இருந்தாள். அருணோதயத்தில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பசுத் தொழுவத்திற்குள் புகுந்து கன்றுடன் கூடிய பசுவைத் தொழுதுவிட்டு பசுஞ்சாணம் எடுத்து வந்து முற்றம், வாசல் தெளித்துப் பெருக்கி, முத்து முத்தாகக் கோலமிட்டு வீடு சுத்தம் செய்து நீராடிவிட்டு வந்து, பூஜைக்கு நிவேதனம் தயாரிப்பாள்.

பக்தி, சிரத்தையுடன் பகவானைத் தொழுவாள். பெரியோர்களுக்கும், கணவனுக்கும் பக்தியோடும், பிரியத்தோடும் பணி செய்வாள். பசித்து வருவோர்க்கு அன்னமிடுவாள். துன்புற்றோர்க்கு தன்னாலியன்ற உதவி செய்வாள்.

இதெல்லாம் இல்லாளுக்குரிய மாண்பு என்பதைத் தன் பெற்றோரால் ஓதி உணர்த்தப் பட்டவள் அப் பெண். மணம் புரிந்துகொண்டு இல்லறம் தொடங்கி வருடங்கள் பத்தாகியும் கூட மகப்பேறு கிட்டவில்லையே என்ற வேதனை அவள் மனசில் புரையிட்டுக் கொண்டிருந்தது.

நம் வீட்டிலும் குழந்தை பிறக்குமா, தொட்டில் கட்டிப் பார்ப்போமா என்று ஏங்கும் தனது மாமனர் மாமியார் படும் அவஸ்தையையும், குழந்தையை எடுத்துக் கொஞ்சிக் குலாவ தன்

கணவன் படும் ஆசையையும் கண்டு அவள் மனம் வேதனையுற்றது. "பகவானே, நான் பெண்ணுக்கு உரிய தர்ம மார்க்கத்தில் நடப்பது ஸத்தியமாக இருந்தால் எனக்கு புத்திர பாக்யம் கொடு. இன்றேல் என்னை அழித்துவிடு. என் வீட்டிலுள்ளோருக்குத் தீராத்துயர்விளைவிக்கும் நானிருந்து உபயோகமென்ன?" இவ்வாறு உள்ளுருகுவாள் அப்பேதைப் பெண்.

அவள் பிரார்த்தனை ஈடேறியது. அவள் வேண்டிய வரம் கிடைத்தது! சந்தோஷத்தால் உடலும், உள்ளமும் பூரித்தாள். தனக்கு மகப்பேறு தந்து கலி தீர்த்த தெய்வத்திற்கு பாலமுது செய்து நிவேதனம் படைக்க நினைத்தாள்.

நீராடி, தூய ஆடை யணிந்து மங்களாலங்காரத்துடன் விடியற் காலையில் எழுந்து பசுவைக் கறந்து பாலன்னம் தயாரித்தாள். இடுப்பில் குழந்தையும், கையில் பாலன்னமும் எடுத்துக் கொண்டு, பெரியோர்களுடைய ஆசியுடன் பகவானுக்கு அர்ப்பணஞ் செய்ய ஆலயத்திற்குப் புறப்பட்டாள்.

பாதி வழி வந்தாள். ஒரு மரத்தடியில் அருளே வடிவாக, ஒளியே உருவாக அமர்ந்திருந்த மூர்த்தியைக் கண்டாள்!

ஆச்சரியத்தால் மெய்சிலிர்த்தாள்! 'பகவானே, மனித தேகத்திற்கு இவ்வளவு காந்தியேது'? இத்தேவன்யார்?" என்று விழித்தாள். அருகே சென்று பார்த்தாள். அன்ன ஆகாரமற்று ஜீவன் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். இந்த க்ஷணமே அந்த ஜீவனுக்கு தாரகமாக ஏதாவது உள்ளே செல்ல வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

பச்சாதாபத்தால் அவள் மனம் கனிந்தது. தனது வேண்டுதலை நிறைவேற்றிய பகவானுக்காகத் தயாரித்த அமுதை அந்தத் தவ வடிவிற்கு ஊட்டலானாள்.

கை, கையாக இரண்டு வாய் அமுதம் தாரகமாகக் குக்ஷியில் விழுந்ததும் அந்த ஞான மூர்த்தியின் கண்கள் மலர்ந்தன. அப்பெண்ணின் அருள் முகத்தைக் கண்டார்.

தெளிந்த குரலில், தயை நிறைந்த குரலில் "அம்மா, நீ யார், எங்குற்றாய், எனக்களித்த அமுதால் நான் விழிப்புற்றேன். உனக்கு என்ன வேண்டும் அம்மணி?" என்று வினவினார்.

மன மகிழ்ச்சியுடன் தவ வடிவை வணங்கி "ஐயனே, எனக்கு யாதொரு குறையுமில்லை—வரங்கேட்கத்தக்கதாக! என்பால் அன்பு மிக்க பெரியோரும், பட்சமாக உள்ள கணவனுமிருக்கிறார்கள். இரப்போர்க்கு 'இல்லை' என்னாது அன்னமிட பகவான் அருள் செய்திருக்கிறார். மகப்பேறு இல்லையே என்ற கவலையிருந்தது. பரம்

பொருளை வேண்டினேன். என் மீது ஆண்டவன் கருணை புரிந்துவிட்டார். எனது இல்லற வாழ்வு எனக்குப் போதிய அளவு மகிழ்ச்சியையும், அமைதியையும் திருப்தியையுமளித்திருக்கிறது. அதுவே யதேஷ்டமெனக் கருதுகிறேன். இந்நிலை என்றென்றும் எனக்கிருந்தால் போதும்'' என வேண்டினாள் அப்பெண்!

"அம்மா! அவ்வளவுதானா உன் அபிலாஷைகள்?''

"ஆம் ஐயனே! அறம், பொருள், இன்பம் இம் மூன்று படிகளிலும் நேர்மையோடு நிற்பவர்க்கு வீடு தன்னால் கிடைக்கும் எனப் பெரியோர் சொன்னார்கள்! இல்லறத்தின் மாண்பினை ஓதி இவ்வாறு இருக்கப் பணித்தார்கள். அவ்வளவே எனக்குத் தெரியும்'' என்றாள் அப்பெண்.

அவள் தான் கௌதம புத்தன் உண்மையைக் கண்ட ஸுஜாதை!

எதையோ எழுத நினைத்து இதை எழுதி இருக்கிறேன். மனசில் எண்ணங்கள் விரிகின்றன.

பாரத நாட்டில், பெரியோர் சொற்படி, தெய்வபக்தி, அன்பு, ஈகை, ஒழுக்கம், நேர்மை, தயை இவை அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற ஸுஜாதைகளாக ஏனிருக்கக் கூடாது?—அன்று—சாவகாசமாக மடியில் படுத்து தாய்ப் பாலுண்ணும் குழந்தை நெற்றிப் பொட்டை அழித்து, தாலிச் சரட்டைப் பற்றி இழுத்ததைக் கண்டு—மாமியாரின் வாழ்த்துதலுக்குப் பொருளுணர்ந்து திடுக்கிட்டாளே—அந்த ஸுஜாதை, அம்மாதிரி பொறுமைக் களஞ்சியங்களாக இருந்தால்—அமர வாழ்வாகுமே நம் இல்லறம்!

—கு. ப. சேது அம்மாள்

ஆலய ஆபரணங்கள்

சென்னை மாகாணத்தில் 7800 ஆலயங்களிருக்கின்றன. இந்த ஆலயங்களிலுள்ள விக்ரகங்களுக்கு அணிவிக்கும் ஆபரணங்கள், தங்கம், வெள்ளி, வாகனங்கள் முதலியவற்றின் விலை மதிப்பு சுமார் நாலரைக் கோடி ரூபாய். திருமலை—திருப்பதி ஸ்ரீ வெங்கடாசலபதியின் ஆபரணங்கள் மட்டுமே சுமார் 74 லக்ஷம் ரூபாய் விலைமதிக்கலாம். சமீபத்தில் தான் வெங்கடாசலபதிக்கு இரண்டரைலக்ஷ ரூபாய் செலவில் வைகுண்ட ஹஸ்தத்தை சாத்தியுள்ளார்கள். ஸ்ரீரங்கம் ரங்கநாத ஸ்வாமி ஆலயத்தில் முப்பத்தெட்டரை லக்ஷ ரூபாய்கள் விலைமதிப்புள்ள ஆபரணங்களிருக்கின்றன. மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்தில் பதினைந்து லக்ஷ ரூபாய் விலைமதிப்புள்ள ஆபரணங்களும் ராமேஸ்வரம் ஸ்ரீராமநாத ஸ்வாமி ஆலயத்தில் 27½ லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள ஆபரணங்களும் உள்ளனவாம்.

வேண்டாம் வெறுப்பு

ஆங்கில பர்ஷைதான் இந்தியாவிற்கு ஆகாய விமானம் ஆகும். உயர்ந்த இடங்களுக்கும் தூரதேசங்களுக்கும் போக்குவரத்துக்கு விமானம் எவ்வளவு உபயோகமானதோ அது போன்றே தான் ஆங்கிலமும்.

பூமி மீது எங்கு செல்வதற்கும் ரயில் வண்டி எப்படியோ அப்படித்தான் ஹிந்தியும். நீங்கள் உங்கள் கிராமத்தையும்விட்டு எங்குமே நகரவே போவதில்லையானல் நீங்கள் ஹிந்தியை கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. உங்கள் தாய்ப் பாஷையே உங்களுக்குப் போதும். ஆனல் இந்தியா பூராவும் உங்களுக்குப் பிரயாணஞ் செய்ய விருப்பமிருப்பின் ஆங்கிலமும் ஹிந்தியும் உங்களுக்குத் தேவைதான்.

ஆங்கிலேயர்கள் வெளியேறிவிட்டார்களென்பதற்காக ஆங்கில பாஷையை வெளியேற்ற வேண்டியதில்லை. ஆங்கிலேயர்கள் இங்கிருந்து செல்லும் பொழுது, நம்முடைய ரயில் வேக்களையும், தந்திக் கம்பிகளையும் அவர்களுடன் சேர்த்து அனுப்பிவிடவில்லையல்லவா? கச்சேரிகள் இன்றுமிருக்கின்றன. ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் இன்னும் அமலில் இருக்கின்றன.

ஆங்கில பாஷை மீது வெறுப்பு வேண்டாம். ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட ரயில்வேக்களையும் தந்தி வசதிகளையும் விட மிக முக்கியமானதாகும் ஆங்கில பாஷை.

—ராஜாஜி

வீட்டுக்கொரு முருங்கை

'வீட்டுக்கொரு முருங்கை மரம்' என்பது முதுமொழி. இதனலே நம் முன்னேர்கள் முருங்கை மரத்தை எவ்வாறு மதித்திருந்தார்கள் என்பது நன்கு புலப்படும்.

முருக்கு, கலியாண முருக்கு, கறி முருக்கு, காட்டு முருக்கு என மூவகைப்படும். இவற்றுள் இரண்டாவதாகிய கறி முருக்கு நமக்கு எத்தனையோ விதத்திற் பயன்படுகின்றது. இதன் இலை, ஈர்க்கு, பூ, பிஞ்சு, காய், பட்டை, பிசின், வித்து, வேர் ஆகிய எல்லாமே மிகப் பிரயோஜனமானவை.

சுக வாழ்வுக்குச் சுத்த இரத்தம் வேண்டும். உறுதியான பற்கள் வேண்டும். ஒழுங்காகக் குடல்கள் வேலை செய்யவேண்டும். இவற்றிற்கெல்லாம் நமது உணவில் 'சி' ஜீவசத்து ஏராளமாக இருக்கவேண்டும். இச்சத்து நாம் சாப்பிடுகிற காய் கறிகளில் வேண்டிய அளவு கிடைக்கிறது. விசேஷமாக முருங்கையின் எல்லாப் பாகங்களிலும் சத்துக்கள் மிக ஏராளமாக இருக்கின்றன. இவற்றின் குணங்களை இங்கு ஒவ்வொன்ருக ஆராய்வோம்.

முருங்கைக் கீரையில் 'ஏ' சத்து 11·330 யூனிட் வரை இருக்கிறது. இரும்பும் சுண்ணும்புச் சத்தும் ஏராளம். வாயுத் தொல்லையுள்ளவர்கள் முருங்கை இலையை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டு வருவது அவசியம். குழம்பிலிட்டோ வறுத்தோ கொள்ளலாம். இலை ஈர்க்கு, (இலைக்காம்பு) சிறுநீரைப் பெருக்கும், ஜுரத்தையும் போக்கும்.

முருங்கைப் பூவையுஞ் சமைத்துச் சாப்பிடலாம். இது கண்ணுக்குக் குளிர்ச்சியையும், தாது விருத்தியையுந் தரும்.

முருங்கைப் பிஞ்சு வாத பித்த சிலேத்துமமாகிய முத்தோஷங்களையும் போக்க வல்லது. பத்தியத்திற்கு முருங்கைப் பிஞ்சை விரும்பிக்கொள்வது பலருமறிந்த விஷயமாகும்.

முருங்கைக் காயில் 'சி' சத்து ஏராளமாக—119·6 மில்லிகிராம் வரை—இருக்கிறது. இதற்கு அடுத்தபடியாக நுகோல், பீட்ரூட் ஆகியவைகளில் அதிகம். ஆனால் இவை இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்காது.

முருங்கைக் காயில் 'சி' சத்தைத் தவிர 'ஏ' சத்தும் ஏரார்ளமாக-184 யூனிட்டுகள் வரை—இருக்கிறது. காய்கறிகளிலே தக்காளியில் தான் 'ஏ' சத்து அதிகம்—320 யூனிட்டுகள் வரை. அடுத்தபடியாக முருங்கைக் காய், அவரைக் காய், கோவைப் பிஞ்சு ஆகியவற்றில் நிறையவுண்டு. இவையெல்லாவற்றிலும் பார்க்கச் சுண்டை வற்றலில் 'ஏ' சத்து நிரம்பவுண்டு—720 யூனிட் வரை.

முருங்கைக் காயிலே தேவையான எல்லாச் சத்துகளும் இருக்கின்றன. இரும்புச் சத்து 5·28 சத விகிதம் இருக்கிறது. இரத்தஞ் சுத்தமாயிருப்பதற்கு இரும்புச் சத்து இன்றியமையாதது. இந்தச் சத்து வேண்டிய அளவு முருங்கைக்காயில் இருக்கிறது.

இதுவுமன்றித் தாதுப் பொருள், புரதப் பொருள், ஹார்போ ஹைட்ரேட் பாஸ்பரஸ், சுண்ணும்புச் சத்து ஆகியனவும் உடலுக்கு அவசியமான அளவு முருங்கையில் இருக்கின்றன. பதார்த்தகுண சிந்தாமணி கூறுவதைக் கேளுங்கள்:

சொல்லும் பிணியெல்லாம்
தோல்வியாம் ஐயமறும்
பல்லுயிர்க்கும் தாதுமிகும்
பத்தியமாம்—வில்லார்
பெருங்கைக்கா மன்துதிக்கும்
பெண்ணே நறிய
முருங்கைக்காய் தன்னைமொழி

இத்தகைய பெருமை வாய்ந்த முருங்கைக் காயை எல்லோரும் — குறிப்பாக மரக்கறி போஜனக்காரர்கள் தவருது சமைத்து உண்டு வரவேண்டும். முருங்கைக்காயென்ருல் நம்மவருக்கு மிக முக்கியம். முருங்கைக்காய் சாம்பார் என்ருல் சிலருக்கு முள்ளங்கி சாம்பார், வெங்காய சாம்பார் கூடப் பொருட்டல்ல. சிலர் முருங்கைக்காய்க் கறியை–விசேஷமாகப் பொரிக்கறியை—நன்ருய் வழுந்திச் சாப்பிட்ட பின் அதன் சக்கையை நன்கு மென்று சாரத்தைச் சுவைப்பார்களென்ருல் அதன் குணத்தையும் உரு

சியையும் நாம் ஒருவாறு யூகித்தறியலாம்.

முருங்கை வித்துச் ஜல ரூபமாகக் கரைந்து நீற்றுப் போன விந்தைக் கெட்டிப் படுத்திச் சரீரத்தைப் பலப் படுத்துவதிலும் இதனுலேயே இதன் விதையையுந் தாதுபுஷ்டி லேகியத்திற் சேர்ப்பர். வேர் வாத கோபத்தை நீக்கும்.

முருங்கை மரப் பட்டை வாத தோஷத்தையும், சில் விஷங்களையும் நீக்கும். வேர்ப்பட்டை கபதோஷத்தையும் போக்கும். முருங்கைப் பிசின் அதிக மூத்திரம், குஷ்டமேகம், தொந்த வாதம் ஆகியவற்றை நீக்கும். சுக்கிலத்தை இறுகச் செய்து அழகையும் பலத்தையுமளிக்கும். இதனைப் பாலில் இழைத்து உட்கொள்ளலாம். 'விந்து விட்டார் நொந்து கெட்டார்' என்பதனுல் விந்துப் பல மற்றவர்களும், வீண் விரயஞ் செய்தவர்களும் விரும்பிக் கொள்ள வேண்டும். முருங்கை மரத்தை வளவுகளில் வைத்துச் சுலபமாக வளர்த்துவிடலாம். ஆவணிக் கடைசியிலோ, புரட்டாசியிலோ ஒரு முற்றிய கொப்பை வெட்டி நட்டுவிட்டால் அது விரைவில் தளிர்த்துக் கிளைத்துப் பூத்துக் காய்க்கும்.

சிலர், முருங்கை மரத்தை வீட்டுக்கருகில் நாட்டி வளர்க்கலாகாது; வளர்த்தால் வேதாளங் குடி புகும் என்பர். ஒரு வேதாளமல்ல. பல கொடிய குட்டி வேதாளங்களாகிய கம்பளிப் பூச்சிகள் தோன்றித் தொல்லை விளைவிக்கும். இதற்கு உரிய காலத்தில் அடி மரத்தில் சிறிது ஃபினைல் கலந்த நீர் தெளித்துவிடின் கம்பளிப் பூச்சிகள் ஒழிந்துபோம்; குட்டி வேதாளங்களும் தலை காட்டமாட்டா.

"Eelakesari"



அமிருதம் அளிக்கும் பூச்சி

கவிகளாயினும் சரி, பாமரர்களாயினும் சரி, இனிய பொருள்களைத் தேனுக்கு ஒப்பிடுவது சகஜம். இது நம் நாட்டில்மட்டுமன்று, உலகம் பூராவும் பரவியுள்ளது.

பழங்கால எகிப்தியர்கள், சீனர்கள், கிரேக்கர்கள் ஆரியர்கள் இவர்களுடைய காவியங்களிலும் தேன் இனிய பொருள்களின் சக்கரவர்த்தி என்று காணப்படுகிறது.

இனிய பொருளான தேனை மனிதர்கள் அனுபவிக்கும் உலகத்தின் இன்பங்களுக்கும் தேனீயின் வேதனையளிக்கும் கொட்டை மனிதர்களுக்கு நேரிடும் துன்பங்களுக்கும் கவிகள் ஒப்பிடுவதுண்டு.

தேனீயைப் பற்றிய தகவல்கள் இன்னும் பூராவும் திரட்டப்படவில்லை. தேனீயைப் பற்றி ஆராய்ச்சி செய்யச் செய்ய புதுத் தகவல்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன வென்று சமீபத்தில் வெளி வந்த தேனீயைப் பற்றிய ஒரு புத்தகத்தில் காணப்படுகிறது.

அமிருதத்திற்குச் சமானமான தேனையளிக்கும் பூச்சியை அற்பப் பூச்சியென்று அறிவுள்ள மனிதன் அலட்சியம் செய்யமாட்டான்!

தேனை உற்பத்தி செய்யும் சக்தியைத் தவிர தேனீக்கு மற்ற பூச்சிகளுக்கில்லாத அநேக விசேஷ சக்திகளுண்டு. வாயுவிலிருக்கும் நீராவியிலிருந்து சுத்தமான ஜலம் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கமுடியும். மணத்தைக்கொண்டே மலர்களின் இனங்களை அறிந்துகொள்ளும். சூரியன் மேகத்தால் மூடப்பட்டுக் கண்ணுக்குத் தெரியாமலிருப்பினும் தேனீக்கு திசை தப்பாது. தேனீ தேவனின் சிருஷ்டியில் அதிசயமான ஒன்றுகுமென்று ஆங்கிலச் சிந்தனையாளர் ஒருவரின் அபிப்பிராயம்.

உறவை மறந்தாலும்
இதை மறக்கமுடியாது.

உப்பே உயிர்நாடி

உப்புக்கு இன்றைக்கு 14,000 உபயோகங்களுண்டு. இந்தப் பொருளை பூமியிலிருந்தும் எடுப்பதுண்டு, சமுத்திரத்திலிருந்தும் எடுப்பதுண்டு. உப்பில்லாவிடில் நாகரிகம் வளர்ச்சியடைந்திருக்க முடியாது. அவ்வளவு முக்கியத்துவம் பெற்றது இந்த உப்பு. உப்பைப் பற்றி ஒரு விந்தையான தகவல் என்னவென்றால் அதன்விலை மிக மலிவு. ஆனால் அவை எடுக்குமிடங்களிலிருந்து விற்பனை ஸ்தலங்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஏராளமாகப் பணம் செலவாகிறது. ஒரு படி உப்புக்குக் கொடுக்கும் ஓரணவில் $11\frac{1}{2}$ தம்பிடிகள் இந்தப் போக்குவரத்துச் செலவிற்காகப் போய் விடுகின்றன.

உயிர் உள்ள அனைத்திலும் உப்பு உண்டு. மனிதன் தேகத்திலும் மற்றுமுள்ள இதர ஜீவராசிகள் உடம்பிலும், தாவர வர்க்கங்களிலும் உப்பு உண்டு. ஒரு தின்பண்டத்தில் உப்பு இருந்தால்தான் மற்ற சுவைகள் வெளிப்படும். உப்பில்லாப் பத்தியம் அனுஷ்டிப்பவர்கள் உட்கொள்ளும் பொருள்களும் இயற்கையிலேயே உப்பு சத்து பெற்றதுதான்.

மனிதன் தேகத்திலுள்ள திராவகப் பொருள்கள் எல்லாவற்றிலும் உப்பு சத்து கலந்துள்ளது. அநேக நோய்களும் ரணங்களும் உப்பினால் குணமாகிறது. உணவே உட்கொள்ள முடியாதவன் உயிரை, உப்புச்சத்தை இஞ்செக்ஷன் செய்வதன் மூலம் வருஷக் கணக்காய்க் காப்பாற்றலாம். காயங்கள் மூலம் இரத்த விரயம் ஏற்படும்போது உப்புத் தண்ணீரை இஞ்செக்ஷன் செய்தால் உயிருக்கு ஆபத்து நேராது.

உப்பு, மனிதனுக்குத் தேவைப்படுவதுபோலவே பிராணி இனங்களுக்கும் அவை ஆரோக்கியத்திற்கும் நோய்கள் குணமாவதற்கும் உப்பு அத்தியாவசியமாகிறது. பயிர்களுக்கு சத்து அளிக்கும் சக்தியில்லாத நிலங்களுக்கு உப்புடன் கலந்த மற்ற ரஸாயன சத்துக்கள் உரமாகிறது.

உப்புத் தண்ணீரில் மின்சார சக்தியைச் செலுத்தினால் அது மூன்று பொருள்களாகப் பிரிகின்றன: ஆடைகளுக்கு உபயோகமாகும் ஆட்டு ரோமங்கள், இறக்கைகள் முதலியவற்றைச் சுத்தஞ் செய்வதும் செருப்பு, பூட்ஸுகள் முதலியவற்றிற்குப் பயன்படும் தோலை சுத்தஞ் செய்வதும், தையல் நூலுக்கு வுறுதியளிப்பதும் பிளாஸ்டிக் பித்தான்கள் செய்வதும் 'பிளேக்' 'டைபாயிட்' முதலிய நோய்களுக்கு மருந்துகள் செய்வதும் இன்னும் அநேகவிதமான வாழ்க்கையில் மிக முக்கியமான காரியங்களைச் செய்வதும் இந்த மூன்று பொருள்களில் எதையாவது உபயோகித்துத்தான்.

வைத்தியத் துறையில் சில புது ரக மருந்துகள் தயாரிப்பதற்குப் பூஞ்சகாளான் தேவை. சில பொருள்களில் உப்புச் சத்தைச் சேர்த்துத்தான் இந்த பூஞ்சகாளானைச் சிருஷ்டிக்கிறார்கள். அநேக காய்கறித் தோட்டங்களில் முளைக்கும் களைகளை ஒழிப்பதற்கும் மீன் இறைச்சியைக் கெடாமல் வைத்துக்கொள்வதற்கும், ரொட்டி, பாலடைக்கட்டி முதலியன செய்வற்கும் மரங்களை நீண்ட நாட்கள் பாதுகாப்பதற்கும் தோலைப் பதனிடுவதற்கும் 'ரெப்ரிஜெரேட்டரில்' (ஐஸ் பெட்டி) ஐஸ் உண்டாவதற்கும், மேல் நாடுகளில் பனிக்காலத்தில் பாதைகளில் விழும் பனிக்கட்டியை உருக்கி நீராக்குவதற்கும்—ஆக இது போல அநேக முக்கியமான காரியங்களுக்கெல்லாம் உப்பு அத்தியாவசியமானது. 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பது நம் நாட்டு பழமையான வசனம். உப்பில்லாவிடில் உலகமே சூன்யம்தான் என்பதில் இனிமேல் உங்களுக்குச் சந்தேகம் உண்டா?

ASOKA SCENTED BETELNUT POWDER

சட்டங்கள் இயற்றினல் மட்டும் போதாது. அவற்றிற்கு பொதுமக்களின் ஆதரவும் வேண்டும்.

சமூக சீர்திருத்தமும் மக்கள் உதவியும்

இந்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜு சுதந்திரத் தினத்தன்று வெளியிட்டுள்ள எச்சரிக்கை:—

குடி ஆட்சி யென்றல் மக்களின் பிரதிநிதிகளுக்குச் சட்டங்கள் இயற்றும் அதிகாரத்தை யளிக்கும் ஒரு ஏற்பாடு மட்டுமல்ல. சட்டங்களை இயற்றுவதற்கு என்ன காரணம், அவற்றை இயற்றினல் பொது மக்கள் என்ன பலனை யடைவார்கள், இவை பற்றியெல்லாம் பொது ஜனங்களிடையே தீவிரப் பிரசாரஞ் செய்வதும் குடியாட்சியைப் பெற்ற மக்களின் முக்கிய கடமையாகும்.

எவ்வளவு பெரிய ஜனத் தொகுதியையும், ஒரு அற்பகட்சி ராணுவபலத்தால் ஆட்டிவைக்க முடியும். ஆளும் கட்சியின் இஷ்டப்படி சட்டங்களை இயற்றி ராணுவ பலத்தால் அவற்றை அமலுக்குக் கொண்டுவரவும் முடியும். ஆனல் இது குடியாட்சி ஆகாதென்று கூறவேண்டியதில்லையே; எந்த ஆட்சியில் இயற்றப்பட்ட சட்டங்கள் பொதுமக்களின் பக்க பலத்தாலும் ஆதரவாலும் அமலுக்கு வருகின்றனவோ அந்த ஆட்சியே உண்மையான குடிஆட்சி. இந்தியாவில் இப்போது அமலிலுள்ள குடியாட்சி இம்மாதிரிக் குடியாட்சியாக இருக்க வேண்டுமென்பதுதான் எனது மனப் பூர்வமான ஆசை.

அதாவது நாமியற்றும் சட்டங்களுக்குப் பக்க பலமாக இந்தியர்களனைவரும் ஒத்துழைத்து அந்தச் சட்டங்களைப் பற்றிப் பொதுமக்களுக்குச் சற்றும் வெறுப்பேற்படாமல் இந்தச் சட்டங்களின் உத்தேசம் நிறைவேறவேண்டும். அப்பொழுது தான் நாம் அடைந்திருக்கும் குடியாட்சி மூலம் பொதுமக்கள் நன்மை பெறுவார்கள்.

உதாரணமாக காங்கிரஸும் காந்திஜியும் வெகு நாளாகப் பாடுபட்டுக்கொண்டிருந்த ஒரு

லட்சியம் என்னவென்றால் இந்திய மக்களுக்கு மதுவிலிருந்து விமோசனத்தை யளிப்பதாகும். இதை லக்ஷியமாக்கி இந்தியாவில் இரண்டு மாகாணங்கள் சட்டங்களும் இயற்றியுள்ளன. காந்திஜியும் காங்கிரஸூம் செய்துவந்த தொண்டுகளைப் பற்றி ஞாபகமுள்ளவர்களின் கடமை என்ன? இந்த இரு மாகாணங்களிலுள்ள மதுவிலக்குச் சட்டங்களை எப்போதுமே ஆமோதித்துப் பேசவேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சுவதைப் பற்றிய தகவல்களை அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டும். காந்திஜி செய்த தொண்டை மறந்து அவர் அளித்த உபதேசத்தை மறுத்து மதுவினால் இன்னும் சீர் கெட்டுப்போய்க் கொண்டிருக்கும் மனிதர்களைச் சமூகத்திலிருந்து பகிஷ்காரஞ் செய்து தாய் நாட்டுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி நினைவூட்டவேண்டும்.

பெரிய மனிதர், சிறிய மனிதர், ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசங்களைப் பாராட்டாமலே இந்த சீர்திருத்தவேலையில் அனைவரும் ஈடுபட்டால் நம் கண்ணெதிரேயே மது ஒழிந்து போகும்.

பொதுமக்களின் கடமை இவ்வாறிருக்க பெரும்பாலோர் என்ன செய்கிறார்கள்? அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெறவில்லையாம்.

மது விற்பனையென்ற பாப கிருத்தியத்தினால் சர்க்காருக்குக் கிடைத்துக்கொண்டிருந்த அமோக வருமானத்தை மதுவிலக்கினால் மறைத்தது பொது மக்களுக்கே காங்கிரஸ் இழைத்த ஒரு அநீதியாம். எவ்வளவு தான் பாடுபட்டாலும் மதுவை அறவே ஒழிக்கமுடியாதாம். மதுவிலக்குச் சட்டம் அமலுக்கு வந்த பின்னர் அதற்கு முன்பு விற்பனையாகிக்கொண்டிருந்ததைவிடப் பன்மடங்கு மது விற்பனை அதிகரித்திருக்கிறதாம். இவ்வாறெல்லாம் பலர் தயங்காமலே பிரசாரஞ் செய்கிறார்கள்.

இப்படிப் பிரசாரஞ் செய்யாமல் குடியால் கெடும் மனிதர்களிடஞ் சென்று, அவர்கள தாலிகட்டிய மனைவிகளுக்காகவும்; அவர்கள் வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும், கடவுளுக்காகவும் "குடியை விடுங்கள்" என்று கூறுவதற்கு ஆளேயில்லை. அது மட்டுமல்ல.

சட்டங்களியற்றுவதன் மூலம் சமூகத்தைச் சீர்திருத்த முடியாதென்பதற்கு சாஸ்திரம், இதிஹாஸம், பொருளாதார நூல்கள், தனி நபர்களின் உரிமைகளை எடுத்துக்கூறும் நூல்கள் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டித் தீவிரமாகப் பிரசாரஞ் செய்கிறார்கள்.

தீண்டாமையையொழிப்பதுஎன்ற விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தீண்டாமையை ஒழிக்க வேண்டும். இந்திய மக்களிடயே

ஐக்கியம் வளர வேண்டுமென்றெல்லாம் மேடைப் பிரசங்கஞ் செய்பவர்களில் எத்தனை பேர் ஹரிஜன முன்னேற்றத்திற்காக உழைக்கிறார்கள் ?

மத்திய சர்க்கார் இயற்றத் தீர்மானித்திருக்கும் ஒரு சட்டப் பிரகாரம் தீண்டாமையை அனுஷ்டிப்பது ஒரு குற்றமாகும்.

தலையை "கிராப்" செய்து கொள்வதற்காக ஒரு ஸலூனுக்குச் செல்லும் ஹரிஜனை நாவிதன் வெளியே துரத்திவிட்டால் அவனுக்குச் சிறை தண்டனை விதிக்கலாம். அவனிடம் அபராதம் வசூலிக்கலாம். சிறைத்தண்டனைக்கும் அபராதத்திற்குமாளான நாவிதனின் மனப்பான்மை எப்படியிருக்கும் ?

ஒரு ஹரிஜனுக்கு க்ஷவரஞ் செய்வதைவிட பாழுங் கிணற்றில் விழுந்து உயிரை விடலாமென்று தீர்மானித்து அவன் கடையை மூடிவிடுவான். சட்டத்திற்கு, இவன் தொழிலை, இவன் நிறுத்தாமல் செய்விப்பதற்கும் எல்லா மனிதர்களிடமும் ஒரே மனப்பான்மையோடிருக்க வைப்பதற்கும் சக்தி கிடையாது.

ஒரு ஹரிஜனை எந்தத் தொழிலாளியோ வேறு எந்த நபரோ அவமதித்தால் பொது மக்கள் அதற்குப் பழி வாங்குவார்கள் என்ற பயம் அனைவருக்குமிருந்தால் தான் ஹரிஜனங்களுக்கு உண்மையான முன்னேற்றம் உண்டு. சட்டத்தை இயற்றி அமலுக்குக் கொண்டுவந்து விடுங்களென்று சர்க்காரிடம் கோரிவிட்டு சட்டங்கள் இயற்றுவதன் மூலம் சமூகத்தைச் சீர்திருத்த முடியாது என்று மேற்கோள்கள் காண்பிப்பவர்களே இந்தியர்களில் பெரும்பாலோர் ஆவார்கள்.

இது போலவே தான் ஹரிஜனங்களுக்கு பொதுக் கிணறுகளை உபயோகிக்கும் உரிமை என்ற பிரச்னையும் சர்க்காரால் ஒரு சட்டத்தை இயற்றி, ஹரிஜனங்களுக்கு இந்த உரிமையையளிக்க முடியும். இப்படி சர்க்கார் கொடுத்த உரிமையை பொதுஜனங்கள் ஆதரிக்காவிட்டால் உரிமையளித்தும் பயனென்ன ? ஹரிஜனங்களுக்கு எல்லா வசதிகளும் அவர்களுக்குத் தனிப்படையாகவேண்டுமென்றே கோரவில்லை. பொதுவாக இருக்கும் வசதிகளில் பொதுமக்களுக்குள்ள உரிமை தங்களுக்கும் வேண்டுமென்று தான் கேட்கிறார்கள்.

ஊரோடொத்து வாழவேண்டும் என்ற பழமையான தத்துவத்தை எல்லோரும் அனுசரித்து நடப்பதற்கு அனைவருக்கும் சம உரிமை வேண்டும். இப்பொழுது உரிமைகளில்லாதவர்களுக்குச் சமமான உரிமைகளையளிப்பதும் அந்த உரிமைகள் அவர்களுக்குப் பயன் படும்படி

காப்பாற்றுவதும் பொதுமக்களுடைய கடமையாகும்.

இப்பொழுதிருக்கும் நம் குடியாட்சியினுல் உரிமையில்லாதவர்களுக்கு உரிமைகளளிக்க அதிகாரம் பெற்றிருக்கிறோம்.

அளிக்கும் உரிமைகளை உபயோகமாக்கும் கடமையை நாம் இன்னும் நிறைவேற்றவில்லை. அந்தக் கடமையை நிறைவேற்றுவது தான் உண்மையான சமூகத் தொண்டு. அந்தக் கடமையை நிறைவேற்றிய பின்னர் தான் நாம் உண்மையான குடியாட்சியைப் பெற்றவராவோம். அந்த உண்மையான குடியாட்சியைப் பெறும் பொழுதுதான் அமர உலகத்தினின்று நம்மை இன்னும் கண்காணித்து வரும் காந்திஜியின் மனம் பூரிப்படையும்.

விஞ்ஞானியின் விரதம்

தவறுகள் ஏதாவது செய்பவர் தம்மைத்தாமே தண்டித்துக் கொள்ளவேண்டுமென்ற கொள்கையை காந்திஜி அரசியல் துறையில் பரவச்செய்தார். இந்தக் கொள்கையை கைப்பிடித்த ஒரு பிரபல ஆங்கில விஞ்ஞானி இப்போது கல்கத்தாவில் இருக்கிறுர். இவர் அங்குள்ள ஒரு ஆராய்ச்சி நிலையத்தில் பேராசிரியராயிருக்கிறுர். கல்கத்தாவிலுள்ள ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர் முன் அறிவிப்புக் கொடுக்காமல் இவரைச் சந்திப்பதற்காக வந்தார். பேராசிரியர் "இப்போது பார்க்கமுடியாது" என்று கூறி அவரை அனுப்பிவிட்டார். ஆராய்ச்சி நிலையங்களில் உழைக்கும் விஞ்ஞானிகளுக்கு ஓய்வு நேரமே கிடையாதென்றும் வேலை நேரங்களில் அவர்களுக்கு உபத்திரவமளிக்கக் கூடாதென்ற தீவிரமான கொள்கை கொண்டவர் இவர். இதனுல் தான் தன்னைச் சந்திக்க வந்த பத்திரிகையாளரான அந்த ஆங்கிலேயரைத் துரத்திவிட்டார்.

பத்திரிகையாளரைத் துரத்திய பின்னர் பேராசிரியருக்கு, தான் அவரிடம் நடந்துகொண்டது முரட்டுத்தனமாகுமென்று தோன்றிற்று. அதற்காகத் தன்னைத் திருத்திக்கொள்வதற்கு மூன்று தினங்கள் உண்ணுவிரதம் அனுஷ்டித்தார். முன்னறிவிப்புக் கொடுக்காமல் ஒரு உழைப்பாளியைத் தொந்தரவு செய்யச் சென்றதால் அவருக்குக் கஷ்டம் நேரிட்டதென்பதை பத்திரிகையாளரான அந்த ஆங்கிலேயரும் அறிந்து தன்னைத் திருத்திக் கொள்ளட்டும் என்ற உத்தேசமும் இந்த உண்ணுவிரத அனுஷ்டானத்தில் உண்டு என்று பேராசிரியர் தனது அறிக்கையில் வெளியிட்டிருக்கிறுர்.

GANZON BROS.

DRESS SPECIALISTS

3, THOPE STREET

TRIPLICANE MADRAS-5

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters.

★

IN the hands of the Master - Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

இருபத்தைந்து பூகம்பங்கள் ஏற்படும்!

இன்னும் இருநூறு வருஷங்களுக்குள் இந்தியாவில் இருப்பத்தைந்து பூகம்பங்களுண்டாகுமன்று பூகம்ப சாஸ்திர விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிருர்கள். பூகம்பங்கள் எவ்வாறு உண்டாகின்றனவென்றும் எந்தெந்த இடங்களில் ஏற்படலாமென்றும் இப்போது சுமாராக திட்டப்படுத்திக் கூற முடியும்.

சென்ற இருநூறு வருஷங்களில் அநேக பூகம்பங்கள் இந்தியாவில் நேரிட்டிருக்கின்றன. இவற்றில் இருப்பத்தைந்து பூகம்பங்கள் அநேக நகரங்களை நாசம் செய்யும் சக்தி படைத்தவை. பதினெட்டு பூகம்பங்கள் கட்டிடங்களைத் தவிடுபொடியாக்கும் சக்தி வாய்ந்தவை.

முப்பத்தோரு பூகம்பங்கள் அவ்வளவு நாசமளிக்கும் சக்தி படைத்தவை யல்ல.

ஹிமாலயப் பிரதேசங்களில் எங்காவது தினந்தோறும் நாலைந்து பூகம்பங்கள் நேரிட்டுக் கொண்டேயிருக்கும்.

பீகார் மாகாணம் இருக்கும் பிரதேசத்தினடியிலுள்ளபாறைகள் 1934-ம் ஆண்டில் பூமி மட்டத்திற்குப் பன்னிரண்டு மைல் தூரம் அடியில் வெடிக்கத் தொடங்கின.

தாவரங்களுக்குள்ள வளர்ச்சியைப் போல் பாறைகளும் வளர்ச்சியடைவதுண்டு. 130 மைல்கள் நீளமும் 80 மைல்கள் அகலமும் எட்டு மைல் கனமுமுள்ள பாறைகள் வளர்ச்சியடைந்ததனல் 1934-ம் ஆண்டில் பீகார் மாகாணத்தையே அழிக்கும் அளவில் பிரமாண்ட பூகம்பம் ஒன்று ஏற்பட்டது.

இந்தியாவிற்கும் வடக்கு ஆசியாக் கண்டத்திற்கும் நடுவே அநேக லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு கடல் பரவியிருந்தது. வடக்கு ஆசியாவிலும் இந்தியாவிலுமுள்ள பாறைகள் வளர்ந்து ஒன்ருேடொன்று சேர்ந்து இந்தக் கடலை மறையச் செய்து ஹிமாலயப் பர்வதத்தையும் சிருஷ்டி செய்தது.

ஹிமாலயப் பிரதேசங்களுக்கடியிலுள்ள பாறைகள் இன்னும் வளர்ந்துகொண்டுதானிருக்கின்றன.

அதனுல் அந்தப் பிரதேசங்களில் பூகம்பங்கள் நேரிடும். நேப்பாளம்—பீகார் பிரதேசங்கள், பஞ்சாப்பைச் சேர்ந்த குமான் குன்றுகள், பாகிஸ்தானம், காஷ்மீரம் ஆகிய இடங்களில் தான் மிகக் கோர பூகம்பங்களை வருங்காலங்களில் எதிர்பார்க்கலாம்.



உங்களுக்குத் தெரியுமா?



பம்பாய் நகரத்தில் பால்காரர்கள் அனைவரும் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த "பையாக்களே". வீட்டு வேலைக்காரர்களெல்லாம் ரத்தனகிரி ஜில்லாவைச் சேர்ந்த மலைவகுப்பார்களாகும். இவர்களை 'ராமன்' என்று அழைப்பார்கள். கல்கத்தா நகரத்தில் டாக்ஸி ஓட்டுபவர்களெல்லாம் பஞ்சாபைச் சேர்ந்த சீக்கியர்களாகும். சென்னை நகரத்தில் தோட்டி வேலையிலீடுபட்டவர்களெல்லோரும் தெலுங்குப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களேதான்.

★

மேல் நாடுகளிலுள்ள பெரிய வியாபார ஸ்தலங்களிலெல்லாம் கணக்கு வேலைகளுக்கு இயந்திரங்களை உபயோகிப்பது வழக்கமாயிருந்து வருகிறது. லண்டன் நகரத்தில் 33,000 சிப்பந்திகள் உள்ள ஒரு ஹோட்டலில் இந்த இயந்திர ரகத்தில் ஒரு மிகப் பெரிய இயந்திரத்தை அமைத்துள்ளார்கள். எவ்வளவு பெரிய கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தலாயிருப்பினும் யாவற்றையும் நிமிஷக் கணக்கில் இந்த இயந்திரம் செய்துவிடும்.

அணு சாஸ்திரம், இன்ஷியூரன்ஸ் இவை சம்பந்தமான கணக்குவேலைகளை மிகச் சீக்கிரத்தில் முடித்து மனிதனுக்கு மிகவும் உதவிபுரிகிறது. இந்த இயந்திரம் சமீபத்தில் மனிதனுக்குச் சில வருஷங்கள் பிடிக்கக்கூடிய கணக்கிடுதல் ஒன்றை மூன்று, நான்கு மாதங்களுக்குள் முடித்து விட்டது.

★

மேல் நாடுகளிலுள்ள தாவர சாஸ்திர நிபுணர்களில் அநேகர் இப்போது மனிதனுக்கு உபயோகமாக இருக்கும் அநேக தாவர இனங்களின் உபயோகத்தைப் பன்மடங்கு அதிகரிக்கும் வழிகளைக் கண்டுபிடித்து வெகுகாலமாக முயற்சித்ததுண்டு. அமெரிக்காவைச் சேர்ந்த பர்பாங் என்பவர், காய்கறிகள் பழவகைகள்—இவற்றில் பல புது ரகங்களைச் சிருஷ்டித்துள்ளார். இவருடைய

ஆராய்ச்சியைப் பயன்படுத்திப் பிரான்ஸ் தேசத்து ஆராய்ச்சியாளர்கள் உருளைக்கிழங்கையும் தக்காளியையும் ஒன்று சேர்த்து ஒரு நவீன காய்கறி ரகத்தைச் சிருஷ்டிக்க முயன்று வருகிறார்கள்.

★

மேல்நாடுகளிலெல்லாம் பனிக் காலத்தில் வெளியே நடமாடுவதற்கு ஆட்டுரோமத்தால் செய்த 'ஓவர் கோட்டு'களை அணிவது வழக்கம். இந்த ஆடையில் ஒரு நவீன ரகத்தை இப்பொழுது அமெரிக்காவில் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இது கண்ணாடியால் செய்த 'ஓவர் கோட்'. தேகத்தின் உஷ்ணத்தைப் பாதுகாக்க ஆட்டுரோமத்தின் சக்தி படைத்த கண்ணாடியால் செய்ததாகும் இந்த 'ஓவர் கோட்'

★

மந்திரத்தால் ஆளை மயக்குவது நம் நாட்டில் மோசடிப் பிச்சைக்காரர்கள் செய்யும் வேலை. மேல் நாடுகளில் கண்ணை விழித்து ஆளை மயக்கி உறங்கச் செய்யும் பழக்கத்தை வைத்தியர்கள் சிகிச்சைகளுக்குத் தாராளமாய்க் கையாளுகிறார்கள். பிரசவிக்கும் ஸ்திரீக்கு வேதனை தெரியாமல் குழந்தையைப் பிரசவிக்க இந்த முறையைக் கையாளுகிறார்கள். இப்பொழுது பல் வைத்தியர்களும் ஆள்களை மயக்கி அவர்களுக்கு வேதனை தெரியாமல் பற்களைப் பிடுங்கிவிடுகிறார்களாம்.

★

பேனாவால் காகிதத்தில் எழுதும் நபருடைய தன்மையைக் காட்டமுடியாது என்ற கவலைகொண்டவர்களின் குறையை ஒரு இஞ்ஜினீயர் விஞ்ஞானி தீர்த்திருக்கிறார். இவர் ஒரு 'பேசும் கடிதம்' எழுதும் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இந்த இயந்திரத்தினருகே சென்று மட மடவென்று பேசிவிட்டால் கிராமபோன் ரிக்கார்டில் பாட்டுகள் பதிவதுபோல் பிரத்தியேக காகிதத்தில், பேசும் வார்த்தைகளெல்லாம் பதிந்து விடுகின்றன. இந்தக் காகிதத்தை அனுப்பவேண்டியவர்களுக்கு அனுப்பிவிட வேண்டியது. காகிதங் கிடைக்கும் நபர் கிராமபோன் போல் உள்ள ஒரு இயந்திரம் மூலம் இந்தக் காகிதத்தை காதாலேயே கேட்கலாம். காகிதத்தை எழுதின நபரின் குணவிசேஷங்களெல்லாம் அவருடைய அசல் குரலிலேயே கிடைப்பதற்கு இதைவிடச் சிறந்த வழியுண்டா?

கடவுள் துணை வேண்டும்

சென்னையிலுள்ள பேசும் பட முதலாளிகள் கோடம்பாக்கம் வட பழனி ஆண்டவனைக் கொண்டாடுவதுபோல் பம்பாயிலுள்ள பேசும் பட உற்பத்தியாளர்கள் ஷிர்டியிலுள்ள சாயிபாபாவைக் கொண்டாடுகிறார்கள். அவர் உயிரோடிருக்கும்போது பெற்ற புகழும் பெயரையும் விடப் பன்மடங்கு அவர் சமாதியடைந்த பின்னர் சினிமாக்காரர்களால் அவர் அடைந்துள்ளார். சினிமாக்காரர்கள் இந்த யோகியைப் போற்றுவது அவரிடத்திலிருந்து யோக மார்க்கங்களையும் பக்தி விஷயங்களையும் அறிந்து கொள்வதற்காக அல்ல. எந்தக் கடவுளின் அருள் இருந்தால் சினிமாப் படங்களுக்கு வருமானம் அதிகம் கிடைக்குமென்று நம்புகிறார்களோ அந்தக் கடவுளை இவர்கள் போற்றத் தயார். சாயிபாபா கிருபை இருந்தாலும் சரி, பிரமதேவன் கிருபை இருந்தாலும் சரி, பிடித்த படம் நன்றாக இல்லாவிட்டால்படம் எப்படி நன்றாக ஓடும்! எப்படி நல்ல வருமானம் கிடைக்கும்? தான் பிடித்த படம் திரையிடப்படும் தினத்தன்று ஒருபடமுதலாளி காலையில் பம்பாயிலிருந்து ஷிர்டிக்குச் சென்று சாயிபாபாவை வேண்டிக் கொண்டு படத்தின் அன்றைய தினக் கடைசிக் காட்சிக்கு வந்து சேர்ந்து விட்டார். ஷிர்டிக்குப் போனதுதான் மிச்சம்! படம் முதல் காட்சியிலேயே காலை வாரிவிட்டதாம்!

இது மட்டுமா? வெளியிட்ட படத்தால் சரியான வசூல் கிடைக்காவிட்டாலும் ஷிர்டிக்குச் சென்று சாயிபாபாவை வேண்டிக்கொண்டால் வருமானம் அதிகரிக்குமென்று இவர்கள் நம்புகிறார்கள். அதையும் ஒரு படமுதலாளி பரீக்ஷித்து விட்டார். படத்தை வெளியிட்டு ஒரு வாரமாகத் திண்டாடிக் கொண்டிருந்த ஒரு பட முதலாளியிடம் "சாயிபாபாவின் அருளை வேண்டினால் படம் அமோக வருமானத்தைத் தரும்" என்று எவரோ போதித்தாராம். உடனே இவர் ஷிர்டிக்குச் சென்றார். திரும்பி வந்து பார்த்த போது அதற்கு முந்திய ஐந்து நாட்களில் கிடைத்த வருமானம் கூட அன்று



கிடைக்கவில்லையென்பது புலனுயிற்று.

இப் படமுதலாளிகள் தவிப்பதற்குக் காரணம் அவர்களது மூடநம்பிக்கைதான். படம் பிடிப்பவருடைய அதிருஷ்டம்; பணம் கடன் கொடுக்கும் பாங்கரின் அதிருஷ்டம்; தேர்ந்தெடுக்கும் நக்ஷத்திரங்களின் அதிருஷ்டம் இவற்றை யெல்லாமொட்டியே தான் பம்பாயில் படப்பிடிப்பு வேலைகள் நடக்கின்றன. நக்ஷத்திரங்களின் நடிக்கும் திறமை; டைரக்டரின் திறமை; சங்கீத டைரக்டரின் திறமை; இவற்றிற்கெல்லாம் இடமேயில்லை! இதனுல்தான் பட முதலாளிகள் ஆலயத்திற்கும் சமாதிக்கும் சென்று வழிபட நேருகிறது.

உண்மையிலேயே இம்மாதிரியான பட முதலாளிகளைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்!

மந்திரமில்லாத ரக்ஷைகள்!

நூறு வயதான ஒரு ஆங்கிலக் குடியானவன் ஒரு விநோதமான ரக்ஷையை உபயோகித்து வருகிறுன். அது அவன் சட்டைப் பையில் சதா வைத்திருக்கும் ஒரு சிவப்பு முள்ளங்கி தான். அதை அவன் சென்ற 40 வருஷங்களாகச் சட்டைப் பையிலேயே வைத்துக்கொண்டிருப்பதாகவும் அதனுல் அவன் ஒரு நாள் கூட வியாதியால் பீடிக்கப்பட்டதில்லை யென்றும் கூறுகிறுன். சிவப்பு முள்ளங்கியை ரக்ஷையாக உபயோகிப்பது மூட நம்பிக்கையாகத் தோன்றலாம். ஆனுல் இந்த மூட நம்பிக்கை மேல்நாடுகளில் தீவிரமாகப் பரவியுள்ளது. ஸ்காட்லந்து தேசத்து வியாபாரி ஒருவர் தன் சட்டைப் பையிலே ஒரு உருளைக்கிழங்கை வைத்திருக்கிருராம். வாதநோய்க்கு இதைப்போலொரு சஞ்சீவி கிடையாதென்கிருர்.

பிரபல ஆங்கில அரசியல் தலைவர் ஒருவர் இன்றைக்கும் விந்தையான ஒரு ரக்ஷையை உபயோகித்து வருகிருராம். அது ஒரு மரத்துண்டாகும். அதிலும் ஒரு கொலையாளியைத் தூக்கிட்டுக்கொன்ற தூக்கு மரத்திலிருந்து வெட்டிய துண்டாகும் இது. இந்த மரத்துண்டு தன் சட்டைப் பையிலிருக்கும் வரையிலும் தனக்கு பாதைகளில் நடக்கும்போது ஒரு விபத்தும் நேரிடாது என்ற திடநம்பிக்கை கொண்டுள்ளார் இவர்.

CONSULT

K. M. S. Press

1/17-C, DINROZE ESTATE
MOUNT ROAD, MADRAS-2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

தென்னிந்தியர், வட இந்தியர், தெலுங்கர், தமிழர், மராட்டியர், குஜராத்தியர் முதலியோரிடையே சச்சரவு மலிந்துள்ள இக்காலத்தில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம்.

பாரதியின் பாரதம்

●

கவிஞன் கற்பனையில் என்ன தான் காணமாட்டான். அழகைக் காண்பான், ஆசையைக் காண்பான், காலத்தைக் காண்பான். இப்படி எத்தனை யெத்தனையோ? அத்தனையிலும் அவன் கருத்துக்கள் காணாத புதுமையைக் காட்டிவிடுகின்றன. நிகழ் காலத்திலிருந்து எதிர் காலத்திற்கு கனவுப் பாதையை அவனால் தானே கட்ட முடிகிறது!

நமது தேசீயக்கவி அமரன் பாரதி எதிர்கால பாரதத்தை எப்படிக் கண்டார்? இதோ அவர் கண்ட கனவு! படித்துப் பூரிப்பீர்கள். கவிதையிலே கவிஞனின் தீர்க்க தரிசனம் எவ்வளவு மகோன்னதமாய்க் காண்கிறது? அடிமையும், கொடுமையும், சிறையும், அடக்கு முறையும் தலை விரித்தாடிய காலத்திலே வாழ்ந்தவர் நமது கவிஞர். அதனிலேயே நொந்து மாய்ந்தவர் அவர். அப்படிப்பட்டவர் நெஞ்சிலே எதிர்கால இந்தியா எப்படி உருவாகி நின்றது!

இந்தியா சுதந்திரமடையப்போவது பற்றியும், அதற்குப் பிறகு என்ன நடக்கும் என்றும் அவர் எவ்வளவு தீர்க்கதரிசனமாக கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்! அவர் இந்தியாவின் விடுதலையில் தான் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார். அவ்வளவு நம்பிக்கையை அவர் எப்படி பெற்றார்? எல்லாம் அவர் கொண்டிருந்த தேசீயப் பற்றுத்தான். விடுதலை யடையும் இந்தியாவில் அவர் எவ்விதமான சமுதாயத்தைக்காண விரும்பினார்?

எண்ணத் தொலையாத பிரிவினைகள். பஞ்சமும் நோயும் படுத்துமோர் வாழ்வுடைய மக்கள். அவர்களிடையே ஒரு கொள்கையில்லை. வீண் பேச்சும், வெட்டிப் பழக்கங்களும் மிகுந்திருந்தன. சிப்பாய், சேவகன் என்றால் குலைநடுங்கிச் சாவார்கள். சாதி சமயச் சண்டைக்குக் கணக்கில்லை. குருட்டுப் போக்குடைய இந்த மக்களிடையே பாரதி வாழ்ந்தார். மக்கள் நிலையைக்கண்டு மனம் நொந்தார். ஆனால் நெஞ்சு பொறுத்ததா? சோம்பி மாயும் உள்ளமா அது? நெஞ்சமெல்லாம் பற்றும் கவிக் கனலல்லவா அது?

"சதையைத் துண்டு துண்டாக்கினும் முன்னெண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?"

என்னுமோர் ஆவேசத்தை மக்கள் நெஞ்சில் பற்றவைத்த கவிஞன் அடிமை வாழ்வு விடிவதற்கு நேரம் இன்னும் அதிகமில்லை என்று உணர்ந்த பொழுதிலே தான் காண விரும்பும் பாரதத்தை தன் அமர கவிதையில் தீட்டிவிட்டான்.

"ஒளி படைத்த கண்ணினாய் வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா"

இப்படி தான் காணும் இளைய பாரதத்தைக் கூவி யழைக்கிறான். அப்படி வரும் பாரதம் எப்படி வளரவேண்டும்; அதன் மக்கள் எப்படி வாழவேண்டும் என்று கனவு காண்கிறான்? இதோ பாருங்கள் அந்தக் கனவுச் சித்திரத்தை:—

"வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம் - அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில் செய்குவோம்; எங்கள்
பாரத தேச மென்று தோள் கொட்டுவோம்."

வெள்ளிப் பனிமலையின் மீது உலாவுவார்களாம். மேலைக்கடலிலே கப்பல் விடுவார்களாம்; பள்ளிகள் எல்லாம் கலைக் கோயிலாகுமாம். எங்கள் நாடு பாரத நாடு என்று தோள் கொட்டிப் பூரிப்பார்களாம் இன்னும் பாருங்கள்,

"சிங்களத்தீவினுக் கோர் பால மமைப் போம்;
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்."

சிங்களத்திற்கும் இந்தியாவுக்கும் பாலமும் வீதியும் போடவேண்டுமாம். அண்டை நாட்டு மக்களிடம் உறவு கொள்ளப் பாலம்; கலந்து வாழப் பாதை! வங்கத்திலே ஓடி விழும் அத்தனை நீரையும் தேக்கி மையத்துப் பாலை நிலமெல்லாம் பசுஞ் சோலை நில மாக்க வேண்டுமாம். இன்னும் வெட்டுக் கனி எடுக்க வேண்டுமாம். எட்டுத்திசையும் ஏற்றிச் சென்று இவற்றை விற்க வேண்டும். பொருள்களைக் கொண்டுவர வேண்டுமாம். தென் கடலிலெடுக்கும் முத்துக்களை பல நாட்டினரும் வந்து வாங்கிச் செல்லவேண்டுமாம்.

இப்படிச் செல்வம் கொழிக்கும் நாட்டிலே மக்கள் எப்படி வாழ்வார் தெரியுமா?

"சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண் களுடனே

சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத் தே
தோணிகளோட்டி விளையாடி வருவோம்."

சிந்து நதியிலே ஒரு தோணீ; மேலே நிலவு; இருவர் அதில் அமர்ந்து களிப்போடு பாடி வருகின்றனர். அவர்கள் யார், நாம் தாம். அருகில் வீற்றிருக்கும் இளங்குமரி சேர நன்னாட்டிளம் பெண்: பாடும் பாட்டு சுந்தரத் தெலுங்கு!

"எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந் நாட்டு மக்கள்"

இந்த நிலை பாரதத்தில் ஏற்பட பாரதி காட்டும் வழி எப்படி? இந்த நிலை வந்துவிட்டால், சமத்துவம், சகோதரத்துவம், சமரசம் தானே வந்து விடாதா?

கங்கைக் கோதுமைக்கு காவிரி வெற்றிலை; மராட்டிக் கவிதைக்கு மலை நாட்டுத் தந்தம் பரிசு; இராஜபுதனத்து வீரனுக்கு கன்னட நாட்டுத் தங்கம் வெகுமதி; காசியிலே பேசுவதைக் கேட்க காஞ்சியிலே கருவி; நாடும் மக்களும் ஒன்றுவதற்கு எப்படி தன் கவிதைச் சொல்லிலே தீட்டிவிட்டார் பாரதி.

பட்டாடை, பஞ்சாடை, ஆயுதம், காகிதம், ஆலைகள், கலா சாலைகள், கோணிகள், இரும்பாணிகள், வண்டிகள், கப்பல்கள் இவையெல்லாம் ஆக்க வேண்டுமாம். நாடு வளமும் வன்மையும் பெறுவதற்கு தொழிலைப் பெருக்கவேண்டுமாம். அப்பொழுது தான் காசினி வணிகரின் கட்டித் தங்கத்தை விற்பனையால் பெறலாமாம்.

மந்திரம், விஞ்ஞானம் இதையெல்லாம் மக்கள் கற்க வேண்டும். வானையும், மீனையும், கடலையும் அளக்கவேண்டும். சந்திர மண்டல மெட்டி ஆராயவேண்டும். இந்தத் தொழில்கள் என்ன? தெருப் பெருக்கும் தொழில், ஏழையும் அடிமையுமற்ற இந்த நாட்டிலே ஈனமாக மதிக்கப்படக் கூடாது. அதையும் ஒரு சாத்திர மாகக் கற்க வேண்டுமாம்!

காவியம், கலை ஓவியம் இந்த நளினக் கலைகளோடு தொழிற் கலையும் வளர்க்கவேண்டும். கொல்லருலையும், ஊசித் தொழிலும் ஏதுமே அற்பமில்லை. எல்லாமே வளர வேண்டும். இப்படி உலகத் தொழிலனைத்தும் இந்த நாட்டிலே வளர வேண்டும்.

"நீதியும் நேர்மையும் மேல், மற்றவை கீழ்" இந்த இரண்டும்தான்—தான் காண விரும்பும் நவ பாரதத்தின் வேற்றுமையாக இருக்கவேண்டும் என்று நம் தமிழ்க் கவிஞன் பண் பாடுகிறான். எவ்வளவு அற்புதமான கனவு. அவன் கனவு என்று நனவாகப் போகிறதோ இந்த சுதந்திர பாரதத்தில்! —"உதயன்"

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள்!

★ பலதரப்பட்ட விஷயங்கள்!

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணுதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

சமூகத்திற்கே ஒரு பெரும் சாபக்கேடாயிருக்கும் அம்சத்தை ஒழிக்க உதவும் வழிகள்.

மாணவர்கள் மனக்கொதிப்பு மறைய

●

இந்தியாவில் இன்றுள்ளது போல் பள்ளி—கல்லூரி மாணவர்களிடையே கலவரங்கள் என்றுமே இருந்ததில்லை யெனத் திட்டமாகக் கூறலாம். எல்லாவற்றிற்கும் கலவரம் தான். ஒரு ஆசிரியரை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றினுல் அதற்கு 'ஸ்டிரைக்.' மாணவர்களின் மாதச் சம்பளக் கட்டணத்தை அதிகரித்தால் அதற்கு 'ஸ்டிரைக்.' கல்லூரி யூனியனுக்கு பிரின்ஸிபால் அங்கீகாரம் கொடாவிட்டால் அதற்கு அடி தடி; பரீக்ஷையில் மார்க்கு வாங்காமல், தேறுவிட்டால் அதற்குக் 'கோர்ட்டு' வழக்கு. மாணவர் உலகத்தில் இப்படி இருப்ப மிகப் பரிதாபகரமான நிலையல்லவா?

இப்படி அமைதியற்ற நிலைமை ஏற்படக் காரணங்கள் பல. ஆசிரியர்களுக்கு, மாணவர்களின் தலைவர்கள் என்ற கௌரவம் போய்விட்டது. இன்றைய பொருளாதார நிலைதான் இவ்விதமான தீங்குகளுக்கும் காரணமாகும். வித்தியாபியாசத்தின் தரம் மிகக் குன்றிவிட்டது. மனிதனுக்குச் சிறந்த நோக்கங்கள் இருந்த காலமும் மறைந்துவிட்டது. அமைதியற்ற நிலைமை ஏற்படுவதற்கு இவைதான் காரணங்கள்.

ஆசிரியர்களுக்குப் போதிய வருமானம் கிடையாது. அதனுல் அவர் தொழிலுக்கேற்ற மதிப்பு அவர்களுக்குக் கிடைப்பதில்லை, மேலும் இந்திய சத்தியாக்கிரக இயக்கங்களில் மாணவர்கள் கலந்துகொண்டார்கள். வயிற்றுப்பிழைப்புப் போய்விடு மென்ற பயத்தினுல் இந்தியாவில் ஆசிரியர்கள் இவற்றில் பங்கு கொள்ளவில்லை. இதுவும் ஆசிரியர்கள் மீதுள்ள மதிப்புக் குறைந்ததற்கு ஒரு காரணமாகும். மாணவர்களோ தாங்கள் எந்தத் துறையில் உழைப்பதற்காக கல்வி கற்றுக் கொள்ளுகிறுர்களென்று விளங்காமலே தான் கல்வி கற்று வருகிறுர்கள். பெரிய பதவிகளும்

அமோக வருமானமும் கிடைக்குமென்ற ஆசையுடன் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அநேகருக்குப் பிற்காலத்தில் நேரிடும் ஏமாற்றங்கள் மாணவ உலகத்திற்கே ஒரு மனச் சஞ்சலத்தை யளிக்கிறது.

கல்வி கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு எதிலும் கிரியாம்சையில் பழக்கம் அளிக்காததால் அவர்களுக்குக் கல்வியைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் மனத்தில் வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது. ஆசிரியர்களின் மதிப்பு உயர நாம் முயற்சிகள் செய்யவேண்டும். உயர்தர கல்வி கற்றுக்கொள்வதற்கு ஆசிரியர்களுக்குச் சந்தர்ப்பங்களும் வசதிகளும் அளிப்பது இதற்கு ஒரு வழி. துருக்கியில் சகல சட்டங்களையும் சர்க்கார் அமலுக்குக் கொண்டுவருவதற்கு முன்பு சட்டங்களை பல ஆசிரியர்கள் கொண்ட ஒரு குழுவிடம் அபிப்பிராயத்திற்காகச் சமர்ப்பிப்பார்கள். இதனால் பொதுமக்களுக்கு ஆசிரியர்களிடம் பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள்மீதுள்ள மதிப்பு ஏற்படுகிறது.

இந்தியாவில் ஆரம்ப, நடுத்தர வகுப்புகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை எட்டு லக்ஷமாகும். ஓய்வு காலங்களில் இவர்களுக்கென்றே உயர்தர கல்விப் பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்து மாணவர்களிடையே இவர்கள் தலைவர்களென்ற மதிப்பை நிலை நாட்டவேண்டும். கிடைக்கும் வருமானம் போதாததால் தான் அநேக ஆசிரியர்கள் வீடு வீடாய்ச் சென்று 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கும்படி நேரிடுகிறது. 'டியூஷனு'க்கும் பள்ளிகளிலேயே ஏற்பாடு செய்து கிடைக்கும் வருமானத்தை எல்லா ஆசிரியர்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்தால் ஆசிரியர்களுக்கு சற்று வருமானமும் அதிகரிக்கும். மதிப்பும் இவ்வளவு குறையாது.

சமூகத்தில் ஆசிரியர்களுடைய மதிப்பை உயர்த்துவதற்கு ஜில்லா அதிகாரிகள் கவர்னர் முதலியோர் நடத்தும், பொது வைபவங்களுக்கு இவ்வாசிரியர்களை அழைக்கவேண்டும். புது டில்லியில் ஜனதிபதி அந்த நகரத்துப் பள்ளிகளின் ஆரம்ப ஆசிரியர்களையெல்லாம் ராஜபவனத்திற்கு அழைப்பதுண்டு.

ஆசிரியர்களின் மதிப்பை உயர்த்துவதற்கும் மாணவர்களுக்குப் பயன்படத் தக்க ஏதாவது தொழிலேற்படுவதற்கும் மற்றொரு வழியுமுண்டு. மற்றொரு வழியையும் ஆராய்வோம். பள்ளியி

லேயே கட்டிடங்கள் கட்டுவது முதலிய வேலைகளை ஆசிரியர்கள் கண்காணிப்பில் நடத்தவேண்டும். பணவசதி அதிக மில்லாத மாணவர்களை இந்த வேலைகளுக்கு கூலி ஆட்களாகச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்குப் பண உதவி செய்யலாம். இதைத் தவிர ஆசிரியர்கள் கண்காணிப்பில் மாணவர்கள் சமூகத்திற்கு உப யோகமான சாலைகள் போடுவது, கால்வாய்கள் வெட்டுவது போன்ற வேலைகளில் ஈடுபடவேண்டும். எந்த வேலைக்கும் பட்டம் தேவை என்ற இன்றுள்ள கட்டுப்பாட்டை ஒழித்தால் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்களுக்கு இப் போது ஏற்படுகிற ஏமாற்றம் ஏற்படாது. படைப் பயிற்சிக்காக இப் போது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள வசதிகள் எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. மாணவர்கள் யாவரும் ஒரு வருஷமாவது இந்தப் படைப் பயிற்சி ஸ்தாபனங்களில் உழைப் பதற்கு ஏற்பாடு செய்தால் அவர்கள் தேகாரோக்கியத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பெரும் உதவியாயிருக்கும். பள்ளிகளிலும் கல் லூரிகளிலும் படிக்கும் மாணவர்கள் புரியும் குற்றங்களுக்குத் தண்டனை யளிப்பதற்கு மாணவ சங்கங்களை நியமிக்கவேண்டும்.

கல்வி கற்றுக்கொள்ள வசதி யளிக்கும் சமூகத்திற்கு ஏதாவது பிரதி உபகாரம் செய்வது மாணவர்களின் கடமையாகும். இது ஒரு கடமையென்ற எண்ணம் மாணவர்கள் மனத்தில் பதியவைக் கும் சூழ் நிலைகள் இப்போது கிடையாது. அந்த சூழ்நிலைகள் ஏற் படும் பொழுது தான் மாணவர் உலகத்தில் இப்போதுள்ள கல வரங்கள் ஒழியும். அந்தச் சூழ் நிலைகளை வெகு சீக்கிரத்தில் சிருஷ் டிப்பது, நம் நாட்டு சர்க்கார்கள், சமூகம், தலைவர்கள் ஆகிய யாவரையும் சேர்ந்த முக்கிய கடமையாகும்.

—Based on Govt. of India Pamphlet
"Student Indiscipline" by *Prof. Humayun Kabir*

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

பார்வைக்கு அற்ப பிச்சைக்காரன், காரியத்தில் அபார வேலைக்காரன்.

"சக்தி பிறக்குது மூச்சினிலே"

●

தெருவில் நின்றுகொண்டு செப்பிடு வித்தை காட்டுபவர்களை நாம் பிச்சைக்காரர்களாகத்தான் கருதுகிறோம். உண்மையான யோக சக்திகளைப் பெற்றவர்களும் சிலர் துறவிகளாக நம் நாட்டில் அலைவதுண்டு. இவர்களிலொருவரைச் சந்தித்து அவருடைய யோக சக்திகளைக்கண்டு மதிமயங்கிப் பிரமித்துப்போன ஒரு ஆங்கிலேயர் கூறும் வரலாறுகும் இது :—

பிரிட்டிஷார் இந்தியாவிலிருக்கும் போது ஒரு ராணுவப்படை முகாமிற்கு ஒரு யோகி சென்றார். ராணுவ அதிகாரிகளனைவரும் இவரது யோக சக்திகளைக் காண ஆவல் கொண்டனர்.

முதன் முதலாக ஆறடி நீளமுள்ள எஃகு கம்பிகள் கொண்ட ஒரு கட்டை யோகி எடுத்துத் தன் முன் வைத்துக்கொண்டார். எஃகுக் கம்பிகளைச் சுட்டிக் காட்டி வெள்ளையர் படைவீரர்கள் யாராவது ஒரு கம்பியை வளைக்க முடியுமானல் வளைக்கலாமென்று கூறினர். படையைச் சேர்ந்த ஐந்தாறு பயில்வான்கள் ஒவ்வொருவராகக் கம்பியை வளைக்க முயற்சித்தனர். ஒருவராலேயும் ஒரு கம்பியைக் கூடச் சற்றேனும் வளைக்க முடியவில்லை. யோகி தன் கழுத்தில் ஒரு கம்பியின் முனையை சாத்திக்கொண்டார். கம்பியின் மற்றொரு முனையை படைவீரர்களைப் பிடித்துக் கொள்ளச் சொன்னர். காலை பிடித்துக்கொண்டு கைகளைப் பின்புறம் வைத்துக் கண்களையும் மூடிக்கொண்டு அந்தப் படைவீரர்களிடம் தான் மூச்சைப் பலமாக விடும்போது கம்பியைத் தன் கழுத்தில் அவர்கள் பலங்கொண்ட மட்டும் அழுத்தச்சொன்னர்.

கண்ணை மூடிக்கொண்டிருந்த யோகி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார். படைவீரர்கள் அழுத்திக் கொண்டிருந்த கம்பி காற்றில் பறக்கும் இலைகள்போல் நடுங்கத்தொடங்கியது. யோகியோ பிரம்மாண்ட கற்சிலைபோல் ஒரு அணுவளவு கூட

அசையாமல் நின்றுகொண்டிருந்தார். நெற்றியிலிருந்து வியர்வை துளிகள் நிற்காமல் மழையைப்போல் விழுந்துகொண்டிருந்தது. திடீரெனக் கம்பியை அழுத்திக்கொண்டிருந்த படைவீரர்கள் கவிழ்ந்து விழப் பார்த்தார்கள். ஏனென்றால் கம்பி வளைந்து போய் இருந்தது. யோகி தன் உடம்பைச் சற்றேனும் அசைக்கவில்லை. சுவாசத்தை அடக்கும் சக்தியால் மட்டும் செய்த வீரச் செயல் இது. மிகக் களைப்படைந்த யோகி தான் செப்பிடுவித்தை சாமான்கள் வைத்திருந்த இடத்திற்குச் சென்று சற்றுநேரம் சிரமபரிகாரஞ் செய்து கொண்டார். இரண்டு கோழிமுட்டைகளை உடைத்துச் சாப்பிட்டார். பிறகு மற்றொரு எஃகுக் கம்பியை கழுத்தில் வைத்ததுபோல் கண்ணில்வைத்து அழுத்தி முன்போல் வளைத்தார். இதைக் கண்ட வெள்ளைப் படை வீரர்கள் அடைந்த வியப்பிற் களவில்லை.

மூன்றாவதாக செய்த சாதனை இதைவிட மிக அற்புதமானது. இரண்டு எஃகுக் கம்பிகளை வளைத்ததால் தனக்குத் தீராத பசி ஏற்பட்டிருக்கிறதென்று வேடிக்கையாய்க் கூறிக்கொண்டு "பழைய க்ஷவர பிளேடுகள் இங்கு கிடைக்குமா" என்று கேட்டார்.

தினமும் க்ஷவரஞ் செய்துகொள்ளும் ஆயிரக்கணக்கான படை வீரர்கள் கொண்ட முகாமில் க்ஷவர பிளேடுகளுக்கு என்ன பஞ்சம்? ஒரு டப்பி நிறைய பழைய பிளேடுகள் வந்து விழுந்தன. குழந்தைகள் மிக ருசியோடு கடலையைத் தின்பது போல் பிளேடுகளைக் கடித்து விழுங்கிவிட்டார் யோகி.

டஜன் கணக்காய் க்ஷவரப் பிளேடுகளைத் தின்றும் தன் பசி ஆறவில்லையென்று சொல்லிக்கொண்டு தன் சிப்பந்தியிடம் தன் பெட்டியில் வைத்திருக்கும் பலகாரத்தைக் கொண்டுவருமாறு கூறினார். அங்கு கூடியிருந்த படை வீரர்களைச் சற்று பின்னால் நகர்ந்திருக்கவும் பணித்தார்.

யோகியின் சிப்பந்தி மூடி வைக்கப்பட்டிருந்த ஒரு கூடையை அவர் முன்கொண்டு வைத்தான். மூடியைத் திறப்பதற்கு முன்பே கூடைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த பலகாரம் தலையை நீட்டியது—ஒரு கொடிய விஷப் பாம்பு!

அங்கு கூடியிருந்த எல்லோரும் நடுங்கினார்கள். பாம்பு வெளியே குதித்து, இரண்டு விநாடிகள் ஆடிக்கொண்டேயிருந்தது.

தப்பி ஓடி ஒளிவதற்கு வழி காணாமல் தத்தளித்தது. திடீரென்று யோகியைக் கண்டதும் அவரை நோக்கிக் குதித்தது. பாம்பு குதித்த கணத்தில் யோகியும் குதித்திருந்தார். அவரை அது கடிப்பதற்கு முன்னால் அவர் அதன் தலையைக் கடித்து எறிந்து விட்டார். பிறகு அதன் வாயைத் திறந்து பாம்பின் விஷப்பையை எல்லோருக்கும் காண்பித்தார். விஷத்தால் நிறைந்திருந்தது அந்தப் பை. யோகி பாம்பைக் கடிப்பதற்கு முன்னால் பாம்பு அவரைக் கடித்திருந்தால் அவர் கதி என்னவாயிருக்கும்?

இந்தப் பாம்பு விளையாட்டு நடந்துகொண்டிருக்கும் போது யோகியின் சிப்பந்தி ஒரு குழியைத் தோண்டிக்கொண்டிருந்தான். குழி வெட்டியானதும் தன்னை அந்தக் குழியில் உயிரோடு புதைத்து விடலாமென்று உத்தரவிட்டார் யோகி. எத்தனை நாழி குழியில் புதையுண்டு கிடக்கமுடியுமென்று படை வீரர்கள் கேட்டதற்கு, யோகி நாள் கணக்காய் இருக்கமுடியுமென்று கூறினார். படை வீரர்கள் கொடுக்கும் சன்மானத்திற்கு பொருந்தியவாறு குழியில் புதையுண்டு கிடக்க முடியுமென்று யோகி விளக்கினார்.

உடனே யோகியைத் துணியில் ஒரு மூட்டையாகக் கட்டி குழியில் தள்ளி மண்ணைப் போட்டு மூடிவிட்டார்கள்.

பதினைந்து நிமிஷங்களானதும் ராணுவ முகாம் அதிகாரி மூடிய குழியைத் தோண்டி புதைக்கப்பட்ட யோகியை வெளியே கொண்டுவரும்படி உத்தரவிட்டார். அதிகாரிக்கு யோகி மாண்டு விடுவாரோ என்று மிகப் பயம். ஆனால் யோகி வெளிவந்தவுடன் அவர் சற்றும் பாதிக்கப்படவில்லை யென்று யாவருக்கும் புலனாயிற்று.

லோபி பணத்தைப் பிடித்துப் பிடித்துச் செலவிடுவதுபோல் புதைந்து கிடந்த இடத்தில் வியாபித்திருந்த சொற்ப வாயுவை, மிகவும் சிக்கனமாகச் சுவாசித்துக்கொண்டு உயிரை நீடித்துக் கொள்ளும் திறமையைப் பெற்றவர் இந்த யோகி. இதுவே இவர் சாதனையின் ரகசியம்.

போதும், போதும் பட்டணவாசம்!

சிறந்த எழுத்தாளரும் ஹாஸ்யத் துறையில்
அதிநிபுணருமான "குச்சாமாமா"
எழுதும் சிறு தொடர்கதை

I

அப்பனின் பெருமை

"அம்மா! இன்னிக்கித்தான் என் மனசிலே சம்பரமமா பாலு பொங்கிச்சு. அந்த பழினியாண்டவன் புண்ணியத்திலே, காலத்துக்கும் இப்படியே இருந்துவிடனுங்க'' என்றான் ஊதுவான்.

''ஆமாண்டாப்பா! நீ சொன்னாப்போலவே அந்த சுவாமிதான் அருள் பண்ணவேணும்'' என்றாள் சேஷிப் பாட்டி என்னும் சேஷம்மாள்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டவாறு கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்த சேஷிப் பாட்டியின் பேரன் கலியாணம் என்னும் கல்யாண ராமன்...தன் மனைவி சீலா வென்னும் சீதாலக்ஷ்மியின் முறுவல் பூத்த முகத்தை நோக்கினான்.

அப்போது அங்கு பிரஸன்னமாயிருந்த சுந்தர குருக்கள் என்னும் சுந்தரேஸ்வர குருக்கள் இச்சம்பாஷணையின் கருத்தை ஆமோதிப்பவராயும், அவர்கள் அபிலாஷையை அனுக்கிரஹிப்பவராயும் "சந்தேகமில்லாமல் சுவாமியின் பரிபூர்ண அருள் உண்டாகும். அடியார் துயரைப் போக்கிடும் அப்பனின் பெருமை உலகமறிந்த விஷயம். நான் ஒன்று சொல்கிறேன். தினந்தோறும் ஒரு அரைப்பலம் எண்ணெய் அம்பிகையின் சந்நிதானத்தில் ஒரு விளக்கில்விட வேண்டியது. பிறகு தரிசனஞ் செய்துகொண்டு திரும்பவேண்டியது. கல்யாணத்தின் ஜன்ம நக்ஷத்ரம் புனர்வஸு, அன்றைய தினம் ஸ்வாமி சந்நிதானத்தில் ஒரு அஷ்டோத்ரம் அர்ச்சனை. குழந்தை சீதாலக்ஷ்மியின் நக்ஷத்திரத்தன்று அம்பிகையின் சந்நிதானத்தில் ஒரு அஷ்டோத்ரம், அவ்வளவுதான். ஜனங்களுக்கெல்லாம் அமோக

மான ஸந்துஷ்டி உண்டாகும். குடும்பத்தில் ஒரு நாளும் அமை திக்குக் குறைவு உண்டாகாது. பரஸ்பர நல்லுணர்ச்சியும் ஒற்றுமையும் வளரும். காலாகாலத்தில் சீதாலக்ஷ்மிக்கு ஸீமந்தக் கல்யாணம் வரும். குடி வளரும்...என்று மேலும் ஏதேதோ சொல்லவிருந்தபோது அங்கு பிரவேசித்த பூவராகாச்சாரியார் என்னும் பக்கத்து வீட்டுக்காரர் "ததாஸ்து, சீக்கிரமே ஸத்புத்ரப் ப்ராப்திரஸ்து. இந்தாருங்கள் ஸ்வாமி ப்ரஸாதம்..." என்று சொல்லிக்கொண்டே ஆளுக்கு ஒரு துண்டு சீனுக் கற்கண்டும் ஒரே ஒரு திராக்ஷைப் பழமும்—பங்கிட்டு—விநியோகித்தார்.

கல்யாண ராமனும் சீதாலக்ஷ்மியும் அய்யங்காரிடமிருந்து பயபக்தி சிரத்தையுடன் பிரஸாதத்தை வாங்கிக் கண்களில் ஒத்திக்கொண்டு பிறகு புசித்தனர். சேஷிப்பாட்டி, மன நிறைவு கண்ணீர் வாயிலாக வெளிப்படவிருக்க—பிரஸாதத்தை வாங்கிக்கொண்டாள்.

அவ்வாறே சுந்தரேஸ்வர குருக்களும் "நான் சொல்லிக் கொண்டே இருந்ததை ஈஸ்வரன் அருள்வது போல நீங்கள் வருவதும் இந்த பிரஸாதங்களை வழங்குவதும் அமைந்தது" என்றவாறே பிரஸாதத்தை வாங்கிக்கொண்டார்.

ஊதுவாரே ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, 'சுவாமி! வெங்கடாசலபதியே வந்த மாதிரி வந்து...இப்படி நல்ல வாக்குக் கொடுக்கறீங்க!" என்று ஆனந்தக் கண்ணீர் பெருக பிரஸாதத்தைப் பெற்றுக்கொண்டான்.

"ஒரு வருஷம் நீங்களெல்லாம் அஞ்ஞாதவாஸம் செய்தது போதும். இனிமேல் எங்கும் சென்று அல்லாட வேண்டாம். தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தது போல் நீயும் இந்த ஊரிலேயே வாழ்ந்து உன் பெரியோர்கள் பெற்ற மரியாதைகளை எல்லாம் ஊராரிடம் பெற்றுக்கொண்டு சௌக்யமாக வாழையடி வாழையாய் விளங்கிடு கல்யாணம்" என்றார் அய்யங்கார்.

"அதுதான், நானும் சொல்ரது. ரெண்டு தலைமுறையாக பெரியய்யா வீட்டு வேலை பாத்துட்டேனுங்க. இந்த ஊரிலே எனக்கும் ஒரு மருவாதை உண்டுங்க. இவரு, பட்டணத்து எசமான், நானு பார்த்து மூணுவது தலைமுறைங்க. இவரு பட்டணம் போரப்பவே நானு வேறே ஓரண்டே போயி ஏன்னமா வேலை செய்யரதூண்ணு ஒரு மழக்கந்தானுங்க. இந்த ஒரு வருசமா வூட்டே வுட்டு நவரலிங்க. இப்ப நம்ம எசமானி வந்தூட்டாருங்களா! இன்னிக்கித்தான் எம் மனசிலே சம்பரமமா பாலு பொங்குதுங்க" என்ருன்.

"சுந்தரேச குருக்கள் சொன்னமாதிரி அர்ச்சனை முத

லிய ஏற்பாடுகளுக்கு வகை செய்யப்பா" என்னும் போதே சீதாலக்ஷ்மி ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட, உட்காரும்படியாக ஒவ்வொருவராய் எல்லோரும் வருந்தி உபசரிக்க, அய்யங்கார் ஸ்வாமிகள் உட்கார்ந்துகொண்டு "மேலும் நாளைய நவமி முதல் நான் உன்னுடைய கோத்ரம் சர்மன் சொல்லி ஸங்கல்பம் பண்ணிக் கொண்டு ஸ்ரீமத் ராமாயணம் பாராயணம் பண்ணத்தொடங்குகிறேன். பட்டாபிஷேகம் வருவதற்குள் ஸீமந்தத்திற்குப் பகவானருள் பிறந்துவிடும். கல்யாணராமன் வயிற்றில் ஸுந்தரராமன் பிறப்பான்" என்றார்.

"பெருமாளாட்டமா உங்கள் வாயாலே சொல்லுங்கோ" என்றாள் சேஷிப்பாட்டி.

சீதாலக்ஷ்மிக்கு வெட்கம் வந்து கப்பிக்கொண்டது. உள்ளே ஓடிவிட்டாள்.

கல்யாணராமன், "எல்லாம் வேண்டியபடி செய்யுங்கோ. தள்ளாத நாளில் அம்மாவுக்குப் பிடித்தமானவற்றை செய்வதில் எனக்கு ரொம்ப திருப்தி. அம்மாவும் உங்களுக்கு அவ்வப்போது வேண்டிய உபகாரங்களைச் செய்து வருவாள். பட்டணவாஸம் வேணுமென்று நான் ஆசைப்பட்டேன். அது நம்ம ராசிக்கு ஒத்து வரவில்லை. சரி...கிராம வாழ்க்கையில்தான் குடும்பத்தில் ஒற்றுமையும் அன்யோன்ய அன்பும் பரிவுங் காணமுடியுமானால் அப்படியே யாகட்டுமே என்றுதான் ஊருக்கே வந்துவிட்டேன்" என்றான். எல்லோருக்கும் அளவு கடந்த ஸந்தோஷமேற்பட்டது.

II

சேஷிப்பாட்டி

ஆம், கல்யாணராமன் பி. ஏ. பாஸ் செய்த ஒரு பட்டதாரிதான். அவன் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்த வருஷம் அதோடு படிப்பை நிறுத்திக் கொண்டு ஊரோடு வாழ்ந்திட திட்டமிட்டாள் சேஷிப்பாட்டி. சேஷிப் பாட்டியின் பெண் வயிற்றுப் பேரன் கல்யாணராமன். தாயும் தந்தையும் இல்லாத கல்யாணராமனை ஆறு வயதுக் குழந்தை முதல் பதினாறு வயசு வரையில் வளர்த்து ஏதோ உள்ளூர் பள்ளியிலேயே அதுவரையில் படிக்க வைத்ததே ஒரு பெரிய காரியத்தை ஸாதித்ததாகுமென்று எண்ணிய சேஷிப் பாட்டி விரைவில் பேரனுக்கு ஒரு கலியாணத்தையும் பண்ணி வைத்து, நாட்டுப் பெண் வந்ததும் பொறுப்பை அவள் வசம் ஒப்படைத்துவிட்டுத்தான் 'அக்கடா' என்று காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து விடலாமென்று மனக்கோட்டை கட்டினாள். வேறொரு திட்டமும் மனத்திலிருந்தது.

கல்யாணபுரம், காவேரிக் கரையில் கும்பகோணத்திற்கு இரண்டு மைல் கிழக்கேயுள்ள ஒரு சிறிய கிராமம். நித்ய மங்களா தேவி ஸமேதனாக இவ்வூரில் கல்யாணபுரேஸ்வரன் கோவில் கொண்டிருந்தார். தினம் ஆறுகாலபூஜையும், பஞ்சபர்வ உத்ஸவங்களும் பிரஹ்மோத்ஸவாதிகளும் ஒழுங்காகவும் பக்தி சிரத்தைகளுக்குக் குறைவில்லாமலும் நடந்து வந்தன இவ்வாலயத்தில். சுமார் 40 வீடுகள், அக்ரஹாரத்தில் ஒரு தெருவும், ஆயிரம் வீடுகள் - நான்கு தெருக்களாக கோவிலையும் அக்ரஹாரத்தையும் சுற்றிய வகையாயமைந்த "குடித்தனக்காரர்" என்னும் வன்னியகுல க்ஷத்திரியர்களின் வீடுகளுஞ் சேர்ந்து கல்யாணப்ரமென்னும் ஊராகும்.



பரம்பரையாக கல்யாணராமனுக்குக் கிடைத்தது அவ்வூரில் மூன்று வேலி நிலம். அக்ரஹாரத்தில் இரண்டு கட்டு தட்டோடு வீடு ஒன்றும் உண்டு. குத்தகைக்காரர் கொடுத்ததை வைத்துக்கொண்டு சேஷிப் பாட்டி எப்படியோ செட்டாகக் குடும்பத்தை நடத்திக் கல்யாணராமனை எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படிக்க வைத்தாள். ஏதோ கொஞ்சம் மிச்சப்பட்டது ரொக்கமாகக் கையிருப்பு உண்டு என்று ஊரில் ஒரு சிலர் இரகசியமாகப் பேசிக்கொண்டனர். வெளிப்படையாக யாரும் இதை தெரிவிக்கவில்லை. கல்யாணராமன் காலேஜில் படிக்க ஆசைப்பட்டபோது சேஷிப்பாட்டி முன் சொன்னதுபோல் தனது விருப்பக்குறைவைத் தெரிவித்தாள். ஆனாலும் பிடிவாதமாகக் கல்யாணம் சொல்லவே, கும்பகோணம் காலேஜில் சேர்ந்து வாசிக்கச் சம்மதித்தாள். ஒரு ஸைக்கில் வாங்கிக்கொண்டு ஊரிலிருந்தே தினந்தோறும் கும்பகோணம் காலேஜுக்குப்போய் வாசித்து வரலானான். கல்யாணம் இண்டர் பரீக்ஷையில் நல்ல மார்க்கு வாங்கித்தேறியவன். பி.ஏ. படிக்கச்சென்னைக்கு வந்து ப்ரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து படித்தான். விக்டோரியா ஹாஸ்டலில் தங்குவதற்கு இடங் கிடைத்தது. பிறந்த நாள் முதல் தன் வீடு, பள்ளிக்கூடம் இரண்டையுந் தவிர கல்யாணம் அறிந்த மூன்றுவது இடம் கல்யாணபுரேஸ்வரன் கோவில் ஒன்றுதான். இதே பழக்கந்தான் சென்னை வந்த பிறகும் கல்யாணத்திடம் நிலை பெற்று நின்றது. தினந்தோறும் பார்த்தஸாரதி ஸ்வாமி கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்துவருவான். ஆட்டங்கள் பாட்டங்கள் என்றோ, களிகள் கேளிக்கைகள் என்றோ—சங்கங்கள் மீட்டிங்குகள் சொற்பொழிவுகள், தீர்மானங்கள் என்றோ ஒருவகை விசேஷ அனு

1987

வலிலும் சம்பந்தப்படமாட்டான். கட்டுக்குடுமியும் அதற்கு வேலி போல ஒரு கன்னுக் குடுமியும்—கரை வேஷ்டியும்—அங்க வஸ்திரமும் ஒரு ஸில்க் ஜிப்பாவுமாக தஞ்சாவூர் மிராசுதார் என்று அறிமுகப்படுத்தும் தோற்றத்துடன் இருந்து வந்தான். படிப்பிலும் சொள்ளையல்ல. இவனுடைய அடக்கமும் பெருந்தன்மையும் ஒரு அரிய குணமென்று ஆசிரியர்கள் யாவராலும் பாராட்டப்பட்டிருந்தது. சேஷிப்பாட்டி எப்படியோ 'குழந்தை' கேட்கும் பணத்தைப் பக்கத்து வீட்டு பூவராகாசாரியார் உதவியால் மணியார்டர் மூலம் அனுப்பி வந்தாள்.

அய்யங்காரும், கல்யாணத்தின் கடிதத்தைப் படித்துச் சேஷிப் பாட்டிக்குச் சொல்லும் போதும், பிறகு மணியார்டர் எழுதி பணத்தை யனுப்பும் போதும், ஊரில் இப்படிப் பட்டணம் போய்ப் படிக்கும் பிள்ளைகளின் ஊதாரித்தனத்தைப் பற்றி ஏசியும் கல்யாணத்தின் செட்டைப் பற்றி புகழ்ந்தும் இரண்டு அத்தியாயங்களாவது சேஷிப் பாட்டியிடஞ் சொல்லத் தவறமாட்டார்.

"என்னமோ போங்கோ பெருமாளே, யாரோ வைத்து போன வானரியம். செட்டாவுஞ் சமத்தாவும் இருந்தால் தான் செய்யரவாளுக்குத் திருப்தி" என்பாள் சேஷிப் பாட்டி.

அய்யங்காரைக்கொண்டு இவ்வகை உபகாரங்களைப் பெற்றுக்கொண்டாலும் சேஷிப் பாட்டி அவ்வளவோடு நிற்பவளல்ல.

அந்தக் கடிதத்தைப் பின்னும் நாலு பேரிடங் காண்பித்து வாசிக்கச் சொல்லி அய்யங்கார் சொன்னவை சரிதானா வென்று பரிசோதித்தறிந்த பிறகு தான் பணத்தை அனுப்புவாள். அவ்வாறே மணியார்டரை எழுதியான பிறகும் நாலு பேரிடம் தனித்தனியாகக் காண்பித்து அது யாருக்கு அனுப்பப்படுகிறது, என்ன விலாசத்திற்கு எவ்வளவு தொகை என்று துருவித் துருவி விசாரித்துப் பரிசோதித்தறிந்த பிறகு தான் பணத்துடன் தபாலாபீசுக்குப் போவாள். பணம் சேர்ந்து பதில் வரும் நாளை எதிர்பார்த்திருந்து அவ்வாறே என்ன கிடைத்ததாக கல்யாணம் எழுதியிருக்கிறான் என்பதையும் பலர் வாயிலாகப்பரிசோதித்தறிவாள். சனி ஞாயிறுடன் ஒரு நாள் லீவு கூட வரினும் ஊருக்கு வந்து போகவேண்டுமென்று கல்யாணத்திற்கு நிரந்தரமான தாக்கீது பிறப்பித்திருந்தாள். விசேஷமான லீவு நாட்களைப் பற்றிச் சொல்ல வேண்டாமே!

லீவுக்கு வீட்டிற்கு வந்தால் போதும். ஓடி ஓடி வேலை செய்து பல வகை உபசாரங்களும் உண்டிகளும் பலகாரங்களும் கல்யாணத்திற்குச் சமைத்துப் படைப்பாள்.

"பொம்மனாட்டி கைச் சாப்பாடு—வீட்டுச்சாப்பாடு—இல்லாவிட்டால் உடம்பு என்னவாகும்? கிளப்புச் சாப்பாடு சாப்பிட்டால் நாக்கு செத்துப் போய் அன்னத் துவேஷம் ஏற்பட்டு உடம்பு வெளுத்து விடும். இரண்டு நாள்களோடு ஒருநாள் கூட லீவு இருந்தாலும் இங்கே வந்து ரெண்டுவேளை வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டுப் போனால் தான் உடம்போடு ஒட்டும்" என்பாள் சேஷிப் பாட்டி.

ஒவ்வொருதரம் பணம் அனுப்புவதையும் சேஷிப் பாட்டி கணக்கு வைத்துக் கொள்வது ஒரு தனி வகை. ஒரு புளியங்கொட்டை ஒரு ரூபாய், ஒரு மஞ்சள் துண்டு ஐந்து ரூபாய், ஒரு கொட்டைப் பாக்கு பத்து ரூபாய், ஒரு மகிழம் விதை நூறு ரூபாய் என்ற விதத்தில் ஏதோ ஸங்கேதங்கள் தனக்குள் வகுத்து வைத்திருந்தாள். ஒவ்வொரு தரம் பணம் அனுப்பும்போதும் தனது ஸங்கேதப்படி அதைக் குறிக்கும் பொருள்களை எடுத்து ஒரு சிறிய துணியில் முடிந்து அஞ்சறைப் பெட்டியில் ஒரு அறையில் போட்டு வைப்பாள். நாலுதரம் பணம் அனுப்பி இருந்தால் தனித்தனி நாலு முடிச்சுகள், அஞ்சறைப் பெட்டியில் நாலு அறைகளில் போடப்பட்டிருக்கும். தாளிதத்திற்குச் சாமான்களை கூட்டும் கிரமத்தில் இதைத் தீர்மானிப்பாள். கல்யாணம் ஊருக்கு வந்தால், வந்த தினம் பகல் போஜனமான பிறகு அஞ்சறைப் பெட்டியுடன் கூடத்திற்கு வந்து கல்யாணம் படுத்திருக்கும் ஊஞ்சலுக்கு அருகில் உட்கார்ந்துகொள்ளுவாள். பெட்டியைத் திறந்து ஒவ்வொன்றாக முடிச்சுகளை அவிழ்த்து அதன்படி பணம் அவனுக்குச் சேர்ந்ததா என்று கேட்டறிவாள். ஒரு முடிச்சை அவிழ்த்து அதிலிருக்கும் பொருள்களை ஒவ்வொன்றாக எடுத்து ஸங்கேதத் தொகையை சொல்லிக் கொண்டே வந்து மொத்தம் எவ்வளவென்று கூட்டி வரச் சொல்லி கணக்குப் பார்க்கும் சேஷிப்பாட்டியின் வழியே அலாதியானது.

"நீ சித்தரைமாஸம் ஊருக்குப் போனதிலேயிருந்து மூணுதரம் அனுப்பி இருக்கிறேன். மூணு மணியார்டர் வந்து சேர்ந்ததா கல்யாணம்?"

ஆமாம் (பாட்டியை, அம்மா வென்றுதான் கல்யாணம் சிறு வயது முதல் அழைப்பது வழக்கம்.)

"எத்தனை பணம் முதல்தரம் அனுப்பினேன் தெரியுமா?" நான் சொல்லிண்டே வறேன். நீ கூட்டிண்டே வா".

"சரி"

அஞ்சறைப் பெட்டியைத் திறந்து கடுகு வைக்கும் அறையிலிருந்து சிறிய கந்தையில் முடிந்திருக்கும் பொட்டலத்தை

எடுத்து அவிழ்த்து அதிலிருந்த பொருள்களை ஒவ்வொன்ருய் வைத்துக்கொண்டே சொல்லு வாள் சேஷிப்பாட்டி.

ஒரு மகிழ விதையை எடுத்து வைத்து "ஒரு நூறு" என் பாள்.

"உம்"...............

பிறகு ஒரு மஞ்சளை எடுத்து வைத்து, "ஒரு அஞ்சு... கூட்டிக்கோ"

"உம் ஒரு கொட்டைப் பாக்கை எடுத்துவைத்து ஒரு பத்து ரூபாய்...கூட்டிக்கோ".

"நூத்தி ஐந்தும் பத்தும்-நூத் திப் பதினைந்து." உம், பிறகு பத்து புளியங்கொட்டைகளை ஐந்து நிமிஷ நேரத்தில் எண்ணி இரண்டிரண்டாய்ப் பிரித்து ஒரு தரம் ஐந்தாக்கி—ஒருகை விரலுடன் ஒத்திட்டுப் பார்த்துக் கொண்டு" "ஒரு பத்து ரூபாய்......கூட்டிண்டியா"?

"உம்...நூத்தி இருபத் தைந்து, அப்புறம்"?

"அதுதான் முதல் மாஸம் அனுப்பின பணம், சரியா வந் துதோ ?" என்பாள்.

சேஷிப்பாட்டியின் மனத்தை யறிந்திருந்த கல்யாணம், பணம் வந்தது நன்ருய் நினை விருப்பினும் தன் கைக் கணக்கு புஸ்தகத்தைப் பார்ப்பதுபோல் நடித்து சற்று நேரம் தாள் களைப் புரட்டிக் கடைசியில் கண்டுபிடித்தது போல் ஆமாம். 125 ரூபாய் வந்தது. நீ அனுப்பி யது அப்படியே வந்தது. ஒரு நூறு ரூபாய், ஒரு ஐந்து ரூபாய் ஒரு பத்து ரூபாய்...அப்புறம் பத்து ஒத்தை ரூபாய்" என் பான்.

அவன் சொல்வதை தன் ஸங்கேதப்படி சரிதானவென்று ஒவ்வொரு தொகையைச் சொல்லும்போதும் அந்தந்த பொருளை எடுத்து வைத்துக் கொண்டு எல்லாப் பொருள் களும் சொல்லப்பட்டதால் திருப்தி பெற்று, 'சரி' என் பாள் சேஷிப்பாட்டி.

இவ்வாறு ஒவ்வொரு பொட் டலமாக அவிழ்த்து கணக்கு களைச் சரி பார்த்த பிறகு...எல் லாத் தொகையும் சரிவர சேர்ந்ததெனத் தெரிந்த பிறகு நிம்மதி பெறுவாள்.

இவ்வாறே, தான் ஒவ்வொரு தரமும் மணியார்டர் கமிஷன் கொடுத்த தொகைக்கும் ஒரு கணக்கு வைத்திருப்பாள். அதையும்மேற்சொன்ன விதமே கல்யாணத்திடந் தெரிவித்து அதிகத் தொகை கொடுக்கப்பட வில்லை என்பதை விவரமாக அறிந்து தேர்வாள். எழுதப் படிக்கத் தெரியாதுதான். ஆனல் சேஷிப்பாட்டியை ஏமாற்ற முடியாது. செட்டிலோ அவளை மிஞ்சவே முடியாது.

III

பழமையும் புதுமையும்

படிப்பு, படிப்பு, படிப்பு, படித்துவிட்டேன் என்று பெயர்

பெற்றவர்களுக்குத் தமது பொருளாதாரத்திற்குத் தக்கபடி சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தத் தெரியுமா? பெரும்பாலருக்குத் தெரியாது. நாகரிகம் என்றும் முன்னேற்றம் என்றும் வாய்வீச்சுக்களால் வாழ்க்கைக்கு இன்றியமையாத அவசியங்கள் யாவை...அப்படி வேண்டாத, தவிர்க்கக் கூடியன யாவை என்று நிச்சயிக்க மாட்டாத அவல நிலையை ஏற்றுக்கொண்டு, தன் தேவைகளை அதிகப்படுத்திக் கொண்டும். அவற்றை எவ்வாறு சம்பாதிப்பதென்ற வகையு மறியாது தமது வாழ்க்கையைத் துன்பம் மிக்கதாய்ச்செய்து கொள்வதோடு மற்றுள்ளோருக்கும் நரக வேதனையைக் கொடுக்கின்றனர். புதுமை—புதுமையின் ஒரு வழிவந்த விளைவு இது. எவ்வளவு பயங்கரமானது. வாய்விட்டு, மனம் விட்டுச் சிரிக்கக் கூடாது. அது அநாகரிகம், நாட்டுப்புறம், பட்டிக்காடு, கர்னாடகம்—பழமை சிரிக்க ஹேதுவில்லாத விடத்திலும் மிகுந்த சந்தோஷத்தை முகத்தில் வரவழைத்துக் கொண்டு—குறிப்பிட்ட அளவிற் கதிகமாகாமல் உதடுகளையசைத்து—குறிப்பிட்ட அளவோடு பற்களைச் சிறிதே காட்டியும்—ஆயினும் அளவு கடந்த ஆனந்தமெய்திருப்பதாய் தோள்களையும் தலையையும் மட்டும் உலுக்கி நகைப்பது போல் நடிப்பதும் நாகரிகம், புதுமை, ஐயோ! புதுமையே! பொய்மையின் உருவேயன்றோ, நீ நாலுபேருடன் சாப்பிட உட்கார்ந்தாலோ! பசி குடலை முறுக்கும். கிடைத்ததை தின்று வயிற்றை நிரப்ப உயிரே கெஞ்சும் ஆனால் அது இது என்று ஏதாவது அகடவிகடம் பேசி—இதைத் தள்ளி அதை ஒழிக்க, ஒன்றில் ஒரு புளியங்கொட்டையளவை ஸ்பூனின் ஒரு நுனியில் தொத்தவெடுத்துக் கொண்டு வாயினருகில் எடுத்துச் சென்று நாக்கினால் தடவி வாயிலெடுத்துக் கொண்டு—உடனே உடம்பை எல்லாம், வர்ணிக்க முடியாத ஒருவகையில் ஒடுக்கியும் நடுக்கியும் வர்ணிக்க முடியாத ஒரு அனுபவத்தைச் சகிப்பதாகவும் நடிக்கவேண்டும். அது தான் நாகரிகம், புதுமை, ஐயோ புதுமையே! உலகையே மாயையென்றும்—அறிவை மயக்கும் மோஹினி என்றுஞ் சொல்வார்கள். அதெல்லாம் அற்ப விஷயங்கள். புதுமையே நீ—பொய்மையில் உலகத்தையே சிக்க வைத்து—சிக்கியவருக்கு ஒருவகைச் சுகமற்றதும் கஷ்டம் மிக்கதுமான வாழ்க்

கையை அளிக்கிறாய். ஆயினும் இந்தப் பரிதாப நிலையில் பெறற்கரிய ஆனந்தத்தைப் பெற்றவரே போல் அவர்களை நடிக்கவுஞ் செய்கிறாய். உன்னுடைய மோகன சக்தியின் முன் மகா மாயை தான் என்னசெய்யமுடியும்?

இவ்வகைப் பரிபவங்கள் ஒன்றுமே இல்லாத பழமையில் தெய்வீகம் மிக்க உண்மை நிறைந்துகிடக்கிறது. பகட்டு, டாம்பீகம் முதலியவை மருந்துக்கும் இல்லை. நல்லதை வெறுத்து, அஃதல்லாததை விரும்பி ஏற்கும் இயல்பையன்றோ "புதுமை" என்னும் பெயரால் கலி விளைவிக்கிறது! பழமையின் நல்ல அம்சங்களெல்லாம் ஒன்று சேர்ந்து மானிட உருவெடுத்து வந்தது தான் சேஷிப்பாட்டி. புதுமைப் பேயின் வலையில் விழாமற் தப்பியவன் கல்யாணராமன்.

மூன்று பேர் சகோதரர்களிருந்தனராம். பிதிரார்ஜித சொத்துக்களைப் பங்கிட்டுக்கொள்ள எற்பாடு செய்தனராம். இருவருக்கும் கலியாணமாகியிருந்தது. மூன்றாவது சகோதரனுக்குக் கலியாணமாகவில்லை. அவனுக்கும் கலியாணமாகும் வரையிலாவது ஏக குடும்பமாக இருக்கவேண்டுமென்று இவர்களுடைய தாயார் வெகுவாக மன்றாடினளாம். புதுமை மிக்க இரு நாட்டுப் பெண்கள் ஒத்து வராததால், பாகம்செய்து கொண்டு தனித்தனி வாழ ஏற்பாடு செய்யப்பட்டது. வீட்டிலிருந்த பாத்திரம்—தட்டுமுட்டு சாமான்கள் புஸ்தகங்கள் ரொக்கம் நகை நட்டுகள் முதலிய ஜங்கமப் பொருள்களை ஒரு மகன் எடுத்துக் கொண்டானாம். நிலம், தோப்பு, தொறவு, வீடு முதலிய அசையாப் பொருள்களை மற்றொரு மகன் எடுத்துக் கொண்டானாம். புதுமை மிக்க மனைவிகளின் அறிவின் விளைவாய்ச் சமைத்த ஆலோசனைப்படி இவ்வேற்பாடு. 70 வயதான தாயாரும் எட்டு கன்றுகள் போட்ட ஒரு கிழப் பசுவுந்தான் ஒருவரும் வேண்டாமென்று விடப்பட்டவை. இவ்விரண்டுந்தான் மூன்றாவது மகனுக்குக் கிடைத்த பிதிரார்ஜித சொத்து. காலக்கிரமத்தில் புதுமையின் விளைவாக முதலிருவரும் வீணன, டம்பமும் ஆடம்பரமும் மிக்க வாழ்வு வாழ்ந்து யாவற்றையும் இழந்து பரிதாப நிலைக்கு வந்தனர். பழமையின் உருவான தாயின் அறிவினல் மூன்றாவது சகோதரன் செட்டும் திட்டமும் மிக்க வாழ்க்கை நடத்தி மிக செல்வந்தனகி, அண்ணன்மாருக்கும் உதவி புரிந்தானம். இப்படியொரு கதை.

IV

வீட்டுக் கலவரம்

இந்தக் கதையை நமது கல்யாணராமன் அறிந்திருந்

தானே என்னவோ! சேஷிப் பாட்டியின் பழமையின் நற்பயன்களை ஏராளமாகப் பெற்றான்.

காலக்கிரமத்தில் பி. ஏ. பரீக்ஷையில் தேறினான். மதுரை வக்கீல் மீனாக்ஷிஸுந்தரமய்யர் தன் மகள் சீதாலக்ஷ்மியைக் கல்யாணராமனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். சீதாலக்ஷ்மியும் அவள் அண்ணன் ஸேதுராமனும் அவர் பெற்றோருக்கு ஆசைக்குற்ற ஒரு பெண்ணும் ஆஸ்திக்குற்ற ஒரு பிள்ளையுமா யிருந்தனர். ஸேதுராமன் டில்லியில் ஏதோ பெரிய உத்தியோகத்திலிருந்தான்.

கல்யாணராமனுக்கு அவளிடம் கொள்ளை ஆசை. சீதாலக்ஷ்மிக்கு கல்யாணராமனிடம் அளவற்ற பிரேமை.

சீதாலக்ஷ்மி செல்லப் பெண்ணாய் வாழ்ந்தவள். செல்வம் மிக்கக் குடும்பத்தில் பட்டண வாழ்க்கையைப் பிறவி முதல் அனுபவித்தவள். எஸ். எஸ். எல். ஸிக்கு இரண்டு வகுப்பு குறைவு வரையில் தான் படித்தவள்.

ஆகவே சீதாலக்ஷ்மிக்கு நகர வாழ்க்கை தான் மனதிற்குகந்ததாயிருக்குமென்றும் அவளுக்கும் தனக்கும் போதுமான பிணைப்பு ஏற்பட முதலில் நகர வாழ்க்கையை நிறுவுவதே உசிதமாகுமென்றும் கல்யாணராமன் எண்ணினான்.

பழமையிலும் கிராம வாழ்க்கையிலும் பற்றுதலும் பயிற்சியுமுள்ளவள் சீதாலக்ஷ்மி என்று கல்யாணராமன் சிறிதும் யூகிக்கவில்லை. அதனால் கலியாணமான பிறகு, சீக்கிரத்திலேயே சென்னையில் ஒரு வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்வதாயும் அதன் பிறகு அவ்விடத்திற்கு சீதாலக்ஷ்மியை கொண்டுவந்து விடும்படியும் மீனாக்ஷி ஸுந்தரராமய்யரிடஞ் சொல்லி சீதாலக்ஷ்மியை மதுரைக்கே அனுப்பிவைத்தான்.

அவ்வாறே வைகாசியிலேயே மயிலாப்பூரில் ஒரு வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்து பாட்டியையும் வரவழைத்துக் கொண்டான். அடுத்த சில தினங்களுக்குள் சீதாலக்ஷ்மியையும் கொண்டுவந்து விட்டார் மீனாக்ஷி ஸுந்தரமய்யர். பட்டணத்தில் ஏதாவது ஒரு உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொள்ள முயற்சிக்கலானான் கல்யாணராமன்.

முதலில் சீலா—சீலா என்று நிமிஷத்திற்கொருதரம் சீதாலக்ஷ்மியைக் கூப்பிட்டு அளவளாவுவான். சீலாவுக்கோ வீட்டு வேலைகளைத் தானே செய்ய வேண்டும். சேஷிப் பாட்டிக்கு பரிபூரண ஓய்வு கொடுக்க வேண்டுமென்று ஆசை. அதற்காகத் தன்னாலான வரையில் முழு மனத்துடன் முயற்சித்தாள். அடிக்கொருதரம் அனாவசியமாக வெல்லாம் கல்யாணராமன் தன்னைக் கூப்பிட்டுக் குலாவுவது ஒரு இடையூறாகப்

பட்டது அவளுக்கு. அவன் கூப்பிட்டால் போதும். "கல்யாணம் கூப்பிடுகிறான் போ!... போ..." என்று சேஷிப் பாட்டி விரட்டுவாள். அவளுக்கோ, "இளந் தம்பதிகள் இருக்கவேண்டியபடி இருப்பது தான் அழகு. இந்த வீட்டு வேலை என்றைக்கும் உள்ளதுதானே. முழுப் பொறுப்பும் 'சீலா'வின் சுமையாகத்தான் வரப்போகிறது. நானிருக்கிறவரையிலாவது இதை கொஞ்சம் ஒத்திப் போட்டு சிறிசுகளைச் சந்தோஷமாயிருக்கவிட்டு வைக்கவேண்டாமா? இந்த ஆயுசு முழுவதும் பட்ட கஷ்டத்திற்கு என்னதான் பலன்? சிறிசுகள் இருக்க வேண்டியபடி சந்தோஷமாக இருப்பதைப் பார்ப்பது ஒன்றுதானே! அவன் கூப்பிடும் வரையில் தான் 'சீலா'வுக்கு இங்கே என்ன கிடக்கிறது? அவனோடேயேதான் இருக்கட்டுமே. அவனுக்கு வேண்டியதை கூடவிருந்து கவனித்தால் போதாதோ?" என்பது சேஷிப் பாட்டியின் எண்ணம். இப்படியான விரும்பத்தக்க வகையில் தான் 'சீலா' பட்டணம் வந்த புதிதில் ஒரு வாரம் வரையில் குடித்தனம் நடந்தது. பிறகு ஒருநாள் திடீரென்று கல்யாணராமன் கடுகடுவென்று கோபிக்கலானான். அன்று ஸாயங்காலமே 'சீலா'வை யழைத்துக் கொண்டுபோய் மதுரையில் சேர்ப்பித்தான்.

"இப்போதுள்ள நிலையில் சீலாவுடன் அந்த வீட்டில் நான் வாழ முடியாது. சீக்கிரத்திலேயே வேறு வீடு ஏற்பாடு செய்துகொண்டு தெரியப்படுத்துகிறேன். சீலாவைக் கொண்டு வந்து விடுங்கள் என்று மீனாக்ஷி ஸுந்தரமய்யருடன் சொல்லிவிட்டு சென்னை வந்து சேர்ந்தான்.

வேறு வீடு ஏற்பாடு செய்து குடி மாறி 4 மாதங்களாயிற்று. பிறகு 'சீலா'வும் வந்து சேர்ந்தாள்.

ஆனால் என்ன சாபக்கேடோ......சென்னை வந்த ஒரு வாரத்திற்கெல்லாம் சீலா மதுரையில் தன் தகப்பனாருக்கு உடனே வந்து தன்னை அழைத்துப்போகும்படியும்.... அந்த வீட்டில் தன்னால் ஒரு நிமிஷங்கூட குடித்தனம் பண்ண முடியாதென்றும் கடிதம் எழுதினாள். இதைத் தொடர்ந்து 2, 3 கடிதங்கள் எழுதினாள். புக்ககம் போன புதிதில் அப்படித்தானிருக்கும். கொஞ்சம் போனால் எல்லாம் சரியாகிவிடுமென்று சீலாவின் தந்தை அசிரத்தையாயிருந்தார். ஒரு நாள் உடனே வரும்படி அவருக்குச் சீலாவிடமிருந்து தந்தியொன்று வந்தது. அவ்விதமே டெல்லிக்கும் ஒரு தந்தி போகவே ஸேதுராமன் ப்ளேனிலும், மீனாக்ஷி ஸுந்தரமய்யர் ரெயிலிலுமாய் சென்னை வந்தனர். காரணத்தைச் சொல்ல மறுத்த சீலா

வின் பிடிவாதத்திற்காக வருத்தப்பட்டுக்கொண்டே அவளை மதுரைக்கு அழைத்துப்போனார்கள்.

"அவளுக்காகத்தானே பட்டணத்திலேயே வீடு பார்த்து குடித்தனம் வைத்தேன், அவளுக்கிஷ்டமில்லாத வீட்டில் குடியிருப்பானேன். வீட்டை மாற்றிவிட்டால் போயிற்று" என்று சொல்லி கல்யாணராமன் சீலாவை இரண்டாம் முறையாக மதுரைக்கு அனுப்பி வைத்தான்.

பிறகு வேறொரு வீட்டிற்கு ஏற்பாடு செய்து குடிமாற மற்றுமொரு 4 மாதங்கள் பிடித்தது. புதிய வீட்டிற்கு வந்து ஒரு வாரமானபின் கல்யாணம் சீலாவை அழைத்துவர மதுரைக்குக் கடிதம் எழுதலாமாவென்று சேஷிப் பாட்டியைக் கேட்டான். இம்முறை சேஷிப் பாட்டியின் ஆக்ஷேபணை ஏற்பட்டது. "இந்த இடம் எனக்குப் பிடிக்கவே இல்லை. இங்கே சீலாவை வைத்துக்கொண்டு குடித்தனம் பண்ண என்னாலே முடியாதப்பா. நீ வேணுமானால் உன்னிஷ்டப்படி செய். ஆனால் இந்த வீட்டிற்கு அவள் வந்தாளோ மறு நிமிஷம் நான் புறப்பட்டு விடுவேன். ஊருக்கே போறேன்..........இல்லையோ என்னவோ செய்யரேன்" என்றுமுணுமுணுத்துக்கொள்ள ஆரம்பித்தாள் சேஷிப் பாட்டி. கல்யாணராமனுக்கு ஒரே கலவரம். பாட்டியின் பிடிவாதத்திற்குக் காரணமும் தெரியவில்லை. இதனிடையில் ஊரிலும் சில இடைஞ்சல்கள் ஏற்படலாயின. கல்யாணத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்தபடி பண்ணையின் பராமரிப்பு நடைபெறவில்லை. ஊதுவான் சென்னை வந்தான். "சின்ன எசமான் புண்ணியத்திலே பட்டணத்தையும் ஒரு தரம் பார்க்கும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது. ஊதுவான் ஊரிலிருந்த நிலவரங்களை விவரமாகத் தெரிவித்து கல்யாணராமன் உடனே ஊருக்கு வந்து சேருவதே நல்லதென்று தெரிவித்தான். தீர்க்கமாக யோசனைகள் செய்த பிறகு கல்யாணராமனும் சேஷிப் பாட்டியும் மறுபடியும் கல்யாணபுரத்திற்கே வந்து சேர்ந்தனர்.

V

முற்றுப்புள்ளி

ஊர் வந்த இரண்டு தினங்களுக்குள் ஒரு நாள் சீலாவும் தன் தந்தையுடன் அங்கு வந்து சேர்ந்தாள்.

"எனக்குப் பட்டணமும் பிடிக்கவில்லை. மதுரையும் பிடிக்கவில்லை. நம் ஊருக்கே போய் நிலைக்கும்படி 'இவருக்கு'த் தோணவேணுமே என்று மீனாக்ஷியைத் தினம் தினம் வேண்டி வந்தேன். அம்பிகைக்கும் மனமிரங்கியது. முந்தானாள் நீங்கள் இங்கு வரவிருக்கிறீர்கள் என்று கடிதம் வந்தது. அப்பாவை இவ்

விடத்திற்கு என்னை உடனே அழைத்துவந்து விடும்படி நச்சரித்தேன். நீங்களும், 'இவரும்' வரும் முன்பே நான் வந்து ஒரு வருஷமாகப் பூட்டிக்கிடந்த வீட்டை சீர்ப்படுத்தி வகையாக்கி வைத்துத் தங்களுக்கு முன்னேற்பாடு செய்து வைக்க வேணுமென்று எனக்கு ஆசை. ஆனால் நாள், நக்ஷத்ரம் என்று அப்பா தள்ளிப்போட்டு வந்தார். இங்கே வந்த பிறகு தான் எனக்கு மனசு நிம்மதியாச்சு'' என்று சொல்லி ஊரிலிருந்து வந்த சீலா சேஷிப் பாட்டிக்கு நமஸ்காரம் பண்ணினாள்.

"அடியெஞ் செல்லமே! நீ கொள்ளை சமத்து. ஆயிரங் காலத்துக்கு நீ நன்னாயிருக்கணும்'' என்று சீலாவை ஆசீர்வதித்த சேஷிப்பாட்டி தொடர்ந்து சொன்னாள்.

"இதோ பார் சீலா! எம் பேச்சைக் கேளு. கல்யாணமும் நீயும் சிரிச்சு விளையாடிண்டு ஸந்தோஷமாயிருங்கோ. அடிக்கடி சமையலறையில் வந்து புகுந்துண்டு அவனை சீலா— சீலான்னு கத்த வைக்காதே. வீட்டை நான் பாத்துக்கிறேன். நான் கூப்பிட்டா நீ வா...... இல்லையாகல்யாணத்தோடேயே இருக்கணும்.''

"அதெப்படி முடியுமம்மா? தள்ளாத வயசுலே நீங்கள் பெரியவர்கள் வேலை செய்யும் போது நான் சும்மா இருந்தால் நியாயமாகுமா?'' என்றாள் சீலா.

"நான் சொன்னால் சிறிசாலக்ஷணமா சரீம்பயா.........? நியாயமாமே நியாயம்! ரொம்பத்தான் நியாயத்தே கண்டுபிட்டே! மொதல்லே பெரியவா சொன்னத்தைக் கேளு'' என்று தீர்மானமாகத் தெரிவித்தாள் சேஷிப் பாட்டி.

தலை குனிந்தவளாய் வெட்கத்துடன் ஓரக்கண்ணால் கல்யாணராமனைப் பார்த்தாள் சீலா. கல்யாண ராமனோ...... அளவுகடந்த ஸந்தோஷத்துடன் "அப்படிப் போடுங்கோம்மா, நியாயத்தை வாதிக்க வந்து விட்டாள், நியாயவாதியின் மகள்' என்று சொல்லி அர்த்தபுஷ்டியுடன் ஒரு பார்வையை சீலாவின் மேல் வீசினான். சீலாவும் முகத்தைக்கோணி அவனுக்கு "வெவ் வெவ்'' என்று (சப்திக்காமல்) அழகு காண்பித்துத் தன் ஆமோதிப்பைத் தெரிவித்தாள்.

"பாரம்மா...நான் அழகில்லையாம்; சீலா அழகு காட்டுகிறதைப் பார்''...என்றான் கல்யாணராமன்.

சேஷிப்பாட்டியின் பொக்கை வாய் காது முதல் காது வரையில் நீண்டது. கண் இடுங்கி

ஒரு கோடுமட்டுமே என்ற வாறுயிற்று. 'கெக்கெக்கெக்கே' என்ற சிரிப்பினுல் தனது பூரிப்பைத் தெரிவித்தாள். சீலாவும் சிரித்துக்கொண்டே உள்ளே ஓடிவிட்டாள்.

சேஷிப் பாட்டியின் பழமை- இப் பழமையில் பூத்த புதுமை மையின் நறுமணம்—இப் பூவின் மனேகரமான அழகு இவற்றிற்கு நிகர் எதைச் சொல்வது !

அன்று மத்தியான போஜனத்திற்குப் பிறகு நடந்த சம்பவந்தான் ஆரம்பத்தில் விளக்கப்பட்டது.

பட்டண வாழ்க்கை புளித்துப் பட்டிக்காட்டு வாழ்க்கையையும் பழமையையும் விரும்பி கல்யாணராமனும் சீலாவும் ஊர் வந்து சேர்ந்தனர். ஊதுவான் முதலாக ஊரார் யாவருக்கும் இது ஸந்தோஷத்தையளித்தது. ஆனல் பட்டண வாழ்க்கையில் நேர்ந்த சம்பவங்களுக்குக் காரணம் என்ன ? ஸ்ரீமான் அய்யங்காருக்குத்தான் இதை அறிய வேணுமென்ற ஆவல் உந்தியது.

(தொடரும்)

பலிக்குப் பலி

பறவையினங்களுக்குச் சில மீன் ரகங்கள் உணவாவது போல் சில மீன் இனங்களுக்குச் சில பறவைகள் உணவாகின்றன. சிறிய பறவைகள் நீர் மட்டத்தைத் தொட்டுப் பறந்து செல்லும்போது அவற்றைப் பெரிய மீன்கள் பிடிக்க முயற்சிக்கின்றன. சில சமயம் சிறிய பறவைகள் மீன்கள் வாயில் அகப்பட்டுக்கொள்ளுகின்றன. ஆகாயத்தில் பறக்கும் சிறிய பறவைகள் மட்டுமல்ல, நீரிலேயே வசிக்கத் தகுதியுள்ள வாத்துகளுங்கூட பெரிய மீன்களுக் கிரையாகின்றன.

மீன்கள் இம்மாதிரி செய்பவை என்று தெரிந்த ஒரு செம்படவன் சிறு வாத்துக்குஞ்சு பொம்மைகளை ஏராளமாய் பஞ்சால் செய்து ஒரு குட்டையில் மிதக்கவிட்டான். இவற்றைப் பிடிக்க வந்த மீன்களெல்லாம் இவற்றுக்குள்ளிருந்த கொக்கிகளில் அகப்பட்டுக் கொண்டு செம்படவனுக்குப் பலியாயின.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை - 1.

SANFORIZED — PRESHRUNK

COTTON - CLOTHING

INDUSTRIAL
UNIFORM &
CIVILIAN

FITTWEL

THE BRAND THAT CARRIES A REPUTATION
FOR SUPERB WORKMANSHIP.
GARMENTS FABRICATED
IN THE

SANFORIZED — PRESHRUNK

Products of the world famous

BUCKINGHAM & CARNATIC MILLS

of

MADRAS.

**STYLES - DETAILS - AND FASHIONS
ADOPTED ACCORDING TO REQUIREMENTS**

QUICK DELIVERIES ASSURED
Keen C I F Quotations against specific enquiries

FITTWEL

750, High Road

TRIPLICANE : : MADRAS - 5

சிப்பியிலே மட்டுமல்ல நல்லமுத்து தோன்றுவது, சில மர இனங்களிலேயும் தோன்றுவதுண்டு.

பொல்லாத ஸ்திரீ மரம்

விருக்ஷ இனத்தில் அதிசயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதில் ஒன்றின் பெயர் "பொல்லாத ஸ்திரீ மரம்", என்பதாகும். இது மெக்ஸிகோ தேசத்தைச்சேர்ந்த பாலைவனப் பிரதேசங்களில் மட்டுமே தான் வளருகிறது. இந்த விருக்ஷத்தின் அடி மரமும் கிளைகளும் முழுவதும் வளைந்தும் பின்னியும் இருக்கும். இந்த மரம் விஷம் நிறைந்தது. இதைத் தொடுபவர்கள் உடனே விஷ ஜுரம் பீடித்து மாண்டு போவார்கள். மெக்ஸிகோ தேசத்திலுள்ள மற்றொரு மரத்திற்கு "வெடி மருந்து மரம்" என்று பெயர். உலகத்திலேயே இந்த ரக மரம் ஒன்று தான் இருக்கிறது. இந்த மரத்தில் ஆரஞ்சு அளவுக்கு சதையேயில்லாத காய்கள் உண்டாகின்றன. இக் காய்கள் நன்ருக முற்றிய பிறகு 'டமார்' என்ற சத்தத்துடன் வெடித்து இருபதல்லது முப்பதடி தூரத்திற்கு துண்டுகள் சிதறுகின்றன. இச்சமயத்தில் விருக்ஷத்தினருகே எவரேனும் அகப்பட்டுக்கொண்டு இந்த காய்த்துண்டுகள் மேலே பட்டால் பலத்த காயங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

மர இனங்களிலேயே மிக வேகமாக வளர்ச்சி பெறும் மரத்தின் பெயர். "பால்சா" என்பதாகும். ஆறு மாதத்தில் பத்துப் பதினைந்து அடியுள்ள பெரிய மாமாக வளர்ந்து விடுகிறது இது. ஒவ்வொரு மரத்திலும் நாலடி நீளமும் மூன்றரை அடி அகலமுள்ள பன்னிரண்டு இலைகளிருக்கும். சென்ற மகாயுத்த காலத்தில் ஆகாய விமானங்கள் செய்வதற்கு இந்த மரத்தைத் தான் உபயோகித்தார்கள். ரத்தினங்களைத் தரும் மரங்களும் இயற்கையிலிருக்கின்றன. தென்னை, பனை, கமுகு போன்ற மரஜாதிகளுக்குச் சுண்ணும்பை உரமாகப் போடுவதுண்டு. இந்த உரத்தை இந்த மரங்கள் சற்று அதிகமாய்க் கொண்டுவிட்டால் இவற்றின் காய்களில் முத்துக்கள் தோன்றுவதுண்டு. சில தேங்காய்களில் முத்துக்கள் கிடைத்திருப்பதாகவும் கூறுகிருர்கள். மூங்கில் இனத்தில் ஒரு வழ வழப்பான பொருள் இருக்கிறது. இது சாதாரணமாக வெளியில் தோன்றுவதில்லை. சில சமயங்களில் கணுக்களில் தோன்றி ஒட்டிக் கொண்டு நன்ருக கெட்டியாகி நீலக்கல் போன்று விளங்கும்.

இயற்கையின் சிருஷ்டியில் தோன்றும் அதிசயங்களுக்கு எல்லையேயில்லை!

மனிதன் இரத்தத்தை உறிஞ்சும் வௌவால்

வௌவால் இனத்தில் மிக அதிசயமான ரகம் இரத்தத்தை உறிஞ்சும் வௌவால்களாகும். இந்த வௌவால்கள் மத்திய அமெரிக்க வனாந்தரங்களில் வசிக்கின்றன. நடு நிசியில் மனிதர்கள் நித்திரையிலிருக்கும் போது இவை அறைகளில் புகுந்து அவர்களின் இரத்தத்தை உறிஞ்சிவிட்டுப் போய்விடும்.

இந்த வௌவால் சாதாரண சிறு வௌவால் அளவுக்குத் தானிருக்கும். வாயிலுள்ள இரு பற்கள் மிகவும் கூர்மையானவை. நித்திரை செய்பவரைக் கடிக்கும் போது மனிதருக்குத் தெரியவே தெரியாது.

நடு நிசிக்குப் பிறகு மனிதர்கள் நன்கு நித்திரையில் ஆழ்ந்த பின்னர் தான் இந்த ரக வௌவால்கள் தங்களிருப்பிடங்களிலிருந்து வெளிக் கிளம்பும். சிறிதும் சப்தமின்றியே பறக்கும். இதனால் இவை பேய் பிசாசுகள் இனத்தைச் சேர்ந்தவை யென்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

இந்த வௌவால்கள் வியாபித்துள்ள பிரதேசங்களில் வசிப்பவர்கள் இரவில் ஜன்னல்களை யெல்லாம் நன்றாக அடைத்து விட்டுத்தான் தூங்குவார்கள்.

மனிதர் இரத்தத்தை உறிஞ்சுவதில் அசாதாரணமான திறமை வாய்ந்தது இந்த வௌவால். திறந்திருக்கும் ஜன்னலுக்குள் புகுந்ததும் நேரடியாக நித்திரையிலிருக்கும் மனிதன் மீது உட்காருவதில்லை. அறைக்குள் புகுந்ததும் நித்திரை செய்யும் மனிதனுக்கு மேல் சப்தமின்றி பறந்து வட்டமிடும். பிறகு அவனருகே வந்து உட்காரும். சற்று நேரம் அவன் தூங்குவதைக் கவனித்து, அவன் சுவாசத்திலிருந்து நித்திரையிலாழ்ந்திருக்கிறானென்று திட நம்பிக்கை வந்த பின்னர் நித்திரை செய்யும் மனிதனைமெள்ள மெள்ள நெருங்கி வரும். அளவற்ற முன் ஜாக்கிரதையுடன் தான் இது தன் வேலையைச் செய்கிறது. மனிதன் முகத்தின் மீது உட்கார்ந்துகொண்டு இரத்தத்தை உறிஞ்சும்.

மூக்கின் முனையிலும், காதிலும் தான் மனிதனின் இரத்த ஓட்டம் அதிவேகமாயிருக்கிறது. அதனால் மூக்கையோ,

காதையோ தான் இந்த வௌவால் கடித்து இரத்தத்தை உறிஞ்சும். மூக்கின்மேலோ காது மீதோ உட்கார்ந்த பிறகு மனிதனை சோதிப்பதற்காக மெல்லக் கடித்துப் பார்க்கும். இந்தச் சோதனைக்கடியை ஏற்றவுடன் மனிதன் கண் விழித்தால் வௌவால் பறந்து போய்விடும். மனிதன் அயர்ந்து நித்திரை செய்துகொண்டே யிருந்தால் அவனை நன்ருகக் கடித்து இரத்தத்தை உறிஞ்சுவிடும்.

மனிதன் வலியை சற்றுமே உணராமல் கடிப்பதற்குரிய, ஒரு டாக்டரின் சஸ்திர சிகிச்சைத் திறமையும் ஒரு மனே சாஸ்திர நிபுணருக்கிருக்கும் மனித சுபாவத்தைப் பற்றிய ஞானமும் படைத்த பிராணியாகும் இந்த இரத்தத்தை உறிஞ்சும் வௌவால்.

காட்டுமிராண்டிகளான வனவாசிகள் மட்டுமல்ல, மேல்நாடுகளிலுள்ள நாகரிக மக்களும் இந்த வௌவால் இனத்தை இயற்கைக்கு மீறின சக்தி படைத்த ஒரு சிருஷ்டியாகக் கருதுகிருர்கள்.

விசித்திர விஷமங்கள்

பாலில் மாவும், வெண்ணெயில் கொழுப்பும், வெல்லத்தில் களிமண்ணும், அரிசியில் கல்லும் சேர்த்து விற்பனை செய்து பொதுமக்களை ஏமாற்றும் வியாபாரியின் மோசடியினுலும் மக்களுக்கு நன்மை வரலாம். தற்கொலை செய்துகொள்வதற்காக ஒரு மனிதன் கடையில் வாங்கின பாஷாணத்திற்கு ஒரு வியாபாரி செய்த கலப்படத்தால் அதற்கு விஷ சக்தியே யற்றுப்போயிருந்தது. அதனல் இதைச் சாப்பிட்டும் இந்த மனிதன் மாளவில்லையாம்.

கலப்படத்தால் 'விஷத்தின் பல்லைப் பிடுங்கி' மனிதன் உயிரைப் பிழைக்க வைக்கும் வியாபாரிகள் ஆகாராதிகளில் கலக்கும் கலப்படங்கள் மூலம் மனிதனின் உயிரைப் போக்கி விடுகின்றனர்.

வங்காளிகள் ஏராளமாக உபயோகிக்கும் கடுகு எண்ணெயில் சேர்ந்த கலப்படங்களினல் சில வருஷங்களுக்கு முன் கல்கத்தாவில் அநேகர் பலியானர்கள். இன்னும் வனஸ்பதி முதலிய பொருள்களில் சேரும் கலப்படம் மூலம் எவ்வளவு பேர்களுக்குத் தீங்கு நேரிட்டுக்கொண்டிருக்கிறதென்று கூற முடியாதென லோக் சபாவில் அநேக அங்கத்தினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆளைக்கடத்தும் கொள்ளைக்காரர்கள்

மேல் நாடுகளில் நாகரிகம் வெகுவாகப் பரவி மக்களுக்கு ஒரு பக்கம் ஏராளமான நன்மையும் மற்றொரு பக்கம் பலவிதமான தீங்குகளையும் புரிகின்றது. உதாரணமாக மக்களின் வாழ்க்கை எவ்வளவோ குதூகலமாகவுள்ள அமெரிக்காவில் அநேகருடைய வாழ்க்கைக்கு நாசத்தை விளைவிக்கும் சில அம்சங்களும் அபரிமிதமாக வளர்ந்துள்ளன. இதில் ஒரு அம்சத்தைப் பற்றித்தான் இந்தக் கட்டுரை, சுதந்திர இந்தியாவில் சில வருஷங்களுக்கு முன் மத்திய சர்க்காரில் நிதி மந்திரியாயிருந்த ஒருவருடைய மகள் அமெரிக்காவில் ஒரு சர்வகலாசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்தாள். ஒரு நாள் காலையில் தன் ஹாஸ்டலிலிருந்து வெளியே சென்றபின் அவளைப் பற்றித் தகவலே யில்லை. எங்கு சென்றாள், அவளுக்கு என்ன நேரிட்டது, எப்படி மாண்டுபோனாள் யாரால் இவளுக்குத் தீங்கு ஏற்பட்டதென்பது பற்றிய தகவலும் ஒன்றுமே தெரியவில்லை. அமெரிக்க போலீஸ் அதிகாரிகள் எவ்வளவு தீவிரமாக துப்பு விசாரித்தும் ஒன்றுமே புலப்படவில்லை.

முதல் முதலாக ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் விமானத்தில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து சென்றவர் லின்பர்க் என்ற அமெரிக்கர். இவர் இது மூலம் உலகப்பிரசித்தியடைந்துஏராளமாகப்பொருளையும் சம்பாதித்த பின்னர் இவர் குழந்தை காணமற் போய்விட்டது. குழந்தையைத் தேடாத இடமில்லை; உழைப்பிலும் பொருளிலும் சிக்கனமே பார்க்காது குழந்தையை எங்கெல்லாமோ தேடினார்கள். முடிவில் குழந்தையின் உடல் அகப்பட்டது.

இம்மாதிரிகுழந்தைகளும்வாலிபர்களும் அடையாளமேயில்லாமல் மறைந்துபோய் விடுவதற்குக் காரணங்களுண்டு. அநேக விதமான திருட்டுக் கொலைகள், கொள்ளைகள் மலிந்துள்ள அமெரிக்காவில் வசதியுள்ளவர்களிடமிருந்து பொருள்களைப் பிடுங்குவதற்காக ஏற்பட்டிருக்கும் ஒரு வழியாகும் இது. ஆட்களைப் பிடித்துக்கொண்டு போய் மறைத்து வைத்து பணம்

கொடுத்தால் அவர்களை உறவினர்களிடம் சேர்ப்பிப்போமென்று பயமுறுத்திப் பணம் சம்பாதிக்கும் பகல் கொள்ளைக்காரர்களும் ஏராளமாக அமெரிக்காவில் உண்டு.

ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு ஒன்பது வயதுள்ள ஒரு வாலிபனைப் பெண்கள் பள்ளிக்கூடத்தருகில் இரண்டு பேர்கள் ஒரு மோட்டார் வண்டியில் பலாத்காரமாய் ஏற்றிக் கொண்டு போய்விட்டனர். வாலிபனின் பெற்றோர்கள் மிகுந்த செல்வந்தர்கள். பையனைக் காணாமற்போன தினத்தன்று போலீஸுக்குத் தகவல் கொடுத்தார்கள். அடுத்த தினம் மாலை ஆறு மணிக்கு இந்தப் பையனின் பெற்றோர்களுக்கு ஒரு கடிதம் வந்தது.

அக் கடிதம் கீழ் வருமாறு :—

"எட்டு லக்ஷம் ரூபாய் ரொக்கமாய்க் கொடுக்கவேண்டும். போலீசார்களுக்கோ மற்றெவர்களுக்கோ பையனைக் காணாமற்போனது பற்றியும் இந்தக் கடிதத்தைப் பற்றியும் தெரிவிக்கக்கூடாது. மிக ஜாக்கிரதை, பணம் தயாராகிவிட்டதும் நாங்கள் தயார் என்று............பத்திரிகையில் விளம்பரஞ் செய்ய வேண்டும்" "மிக ஜாக்கிரதை" யென்ற இக் கடிதத்தின் வாக்கியங்களின் அர்த்தம். அமெரிக்காவில் எல்லோருக்கும் தெரிந்ததே. கடித மெழுதியவர் மிரட்டலுக்கு எதிராக நடந்தால் பையன் உயிருக்கு ஆபத்து தான் என்று அதன் அர்த்தம்.

பணம் தயார்செய்தவுடன் காணாமற்போன பையனின் பெற்றோர்கள் குறிப்பிட்ட பத்திரிகையில் நாங்கள் தயார் என்று விளம்பரஞ் செய்தார்கள். அடுத்த தினம் பணத்தை எந்த இடத்தில் கொண்டுவரவேண்டுமென்றும், எந்த ஆளிடம் சேர்ப்பிக்கவேண்டுமென்றும் விவரங்கொண்ட ஒரு கடிதம் அவர்களுக்குக் கிடைத்தது. பெற்றோர்கள் இக் கடிதப்படி பணத்தை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தனர். இரண்டு தினங்கள் கழித்து ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி வீட்டில் இந்தப் பையனை எவரோ மோட்டார் வண்டியில் கொண்டு போய் விட்டு விட்டார்கள். அந்த விவசாயி இதை போலீசாருக்கு தெரிவிக்க; பின் போலீசார் பெற்றோர்களுக்கு அறிவித்தார்கள். பெற்றோர்கள் விவசாயி வீட்டிலிருந்து பையனை அழைத்து வந்தனர். இது அமெரிக்காவில் அநேக வருஷ காலமாக நடக்கும் மிகச் சாதாரண சம்பவமாகும்.

அமெரிக்காவில் இம்மாதிரி மனிதரை தூக்கிக்கொண்டு போகும் கூட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. பணக்காரர்களும் புகழ்பெற்றவர்களும் தான் இவர்களுக்குப் பலியாகிறார்கள். ஹாலிவுட் சினிமா நடிகர்களுக்கெல்லாம் இவர்களைப்பற்றி மிகப் பயம். அமெரிக்க மாகாண சர்க்கார்

களும் மத்திய சர்க்காரும் இந்த அக்கிரம கூட்டங்களை யொழிக்க எவ்வளவோ முயற்சி செய்தனர்; ஒன்றும் பலிக்க வில்லை. அரசியல் கட்சிகளில், சில கட்சிகள் கூட இம்மாதிரிக் கூட்டங்களுக்குத் துணை புரி கின்றனவாம். அதனால் இம்மா திரிக் கூட்டங்களை அறவே யொழிப்பதென்பது இயலாத காரியம். ஆட்களைக் கடத்தும் கூட்டங்கள் சாதாரணத் திரு டர்கள் அல்ல. பெரும்பாலும் இவர்கள் கல்வி கற்றவர்களும் வாழ்க்கை வசதிகள் சுமாராக அமைந்தவர்களும்தான். ஆனால் செல்வந்தர்களிடமிருந்து ஏராளமாகப் பணம் பிடுங்கு வதற்கு அவர்கள் குடும்பத்தின ரைத் திருட்டுத் தனமாய்க் கடத்துவது ஒரு சுலபமான வழியானதால், இம்மாதிரி ஒழுங்கற்ற வேலைகளில் இவர் கள் ஈடுபடுகிறார்கள். கடத்திச் சென்றவர்களின் உறவினரிட மிருந்து பணம் வராது என்று தெரிந்துவிட்டால் கடத்திச் செல் லப்பட்ட ஆளைக் கொல்லுவதே இவர்கள் வழக்கம். நல்ல காரி யங்களுக்கு உதவியாயிருக்கும் மோட்டார் வண்டிகளும் ஆகாய விமானங்களும் பண வசதிகளும் இவர்களுடைய இத்தீய காரியங்களுக் கும் உதவியாயிருக்கின்றன. இது நாகரிகமே சிருஷ்டித்த சாபக்கேடல்லாமல் வேறென்ன ?

பாரிஸின் பெருமை !

பாரீஸ் நகரத்தில் பாதைகளில் ஸ்திரீகளை யாராவது தூக்கிக்கொண்டு சென்றால் போலீசார் உள்பட எவரும் தடுக்க வரமாட்டார்களாம். இது இப்படி நடப்பது வாஸ்தவந்தானா வென்பதை அறிய ஒரு பாரிஸ் பத்திராதிபர் சோதனை நடத் தினாராம். தனது நண்பர்களையும் அவர்களுக்கு நன்கு பரிச் சயமான ஒரு ஸ்திரீயையும் அழைத்துக்கொண்டு எல்லோரு மாக வீதியில் செல்லும் போது எதிரே வந்த சிலர் அந்த ஸ்திரீ யைப் பலாத்காரமாகப் பிடித்து ஒரு டாக்ஸியில் தூக்கி வைத் தார்கள். அவள் ஐயோ வென்று பலமுறைகள் கூச்ச லிட்டாள். வீதியிலிருக்கும்போதாவது டாக்ஸிக்குள் அவளை போட்ட பின்பாவது அவள் போட்ட கூச்சலை ஏக ஜனங் கள் ஏராளமாகக் கூடியிருந்த வீதியில் எவருமே பொருட் படுத்தவில்லை. இம்மாதிரிப் பொதுஜன மனப்பான்மை இருப் பதற்குக் காரணமென்ன வென்று பத்திரிகை நிருபர்கள் பொது ஜனங்களை விசாரித்தார்கள். அதற்குப் பொது வாக வந்த அசட்டையான பதில் "இதைப்பற்றியெல்லாம் எங்களுக்கென்ன அக்கறை" என்பது தான்.

மரணத்தை வெல்லும் மார்க்கம்

ஜீவன வித்யை

மகரிஷி வாஜச்ரவஸின் புத்திரன் உத்தாலகருடைய ஆசிரமம் யாகப் புகையினால் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. வான மண்டலம் வேத மந்திரங்களினால் எதிரொலித்தது. மரணத்தை வென்று உலகக் கஷ்டங்களிலிருந்து விடுதலையடையும் பொருட்டு செய்யப்படும் சர்வ மேத யாகத்தின் தீயினால் அவர் முகம் பளபளத்தது. மங்கள கீதங்களும் வாத்தியங்களும் முழங்கின. உத்தாலகர் கடைசி ஆஹுதியாகத் தேங்காயை யக்ஞ குண்டத்தில் ஸமர்ப்பித்தார். ரிஷிகளின் ஜய கோஷம் வானைப் பிளந்தது.

பண்டிதர்களுக்கும் மற்றும் யாகத்திற்கு வந்திருக்கும் மகாத்மாக்களுக்கும் தக்ஷிணை கொடுக்கவேண்டிய நேரம் வந்தது. உத்தாலகரிடம் பசுக்களைத் தவிர வேறு பொருள்கள் கிடையாது. அதனால் ஒரு பசுவைத் தானம் செய்தார். ஸர்வமேத யக்ஞத்தில் எல்லாவற்றையும் தியாகம் செய்யவேண்டும் என்ற கடினமான நியமத்தால் அவர் பவித்ரமான ஆத்மா நடுங்கியது. எல்லாப் பசுக்களையும் தானம் செய்து விட்டால் வாழ்க்கை எப்படி நடைபெறும் என்ற கவலை அவரை அசர வைத்தது. ஆனால் மறு நிமிஷம் சமாளித்துக் கொண்டார். தக்ஷிணை வாங்குகிறவர்களின் எண்ணிக்கை பசுக்களின் எண்ணிக்கையை விடக் குறைவாயிருந்தது. உத்தாலகருடைய உள்ளத்தில் கபடம் புகுந்து கொண்டது. அவர் எழுந்தார். நல்ல பசுக்களை எல்லாம் விட்டு விட்டு கிழப் பசுக்களை எல்லாம் ஓட்டிக்கொண்டு வந்தார். பண்டிதர்களின் கையில் தானம் செய்தார்.

அவருடைய ஒரே மைந்தன் நசிகேதனின் இளம் உள்ளம் இந்தப் பாபச் செயலைக் கண்டு நடுங்கியது. "இது சர்வ மேத யக்ஞமா? இல்லை, இது பாப மேத யக்ஞம். கபடமேத யாகம். கடவுளையே ஏமாற்றி தனக்கு எவ்விதம் நன்மைதேடிக் கொள்ளப் போகிறார் இவர். எனக்கும் தான் எப்படி நாளைத் தேடி வைக்கப்போகிறார். மாதக் கணக்காக இடைவிடாமல் மந்திரங்களைச் சொல்லிக் களைத்த அந்தணர்கள் இந்தக் கிழப் பசுக்களைத் தானமாகப் பெற்றால் என்ன ஆசீர்வாதம் செய்யப் போகின்றார்கள்."

இவ்விதமான சிந்தனைப் பெருக்கில் மிதந்து கொண்டிருந்தான் நசிகேதன். தந்தையிடம் பணிவுடன் கேட்டான். "இது சர்வ மேத யக்ஞம் தானே?" எல்லாவற்றையும் தியாகம் செய்த பெருமை உத்

தாலகருடைய முகத்தில் தீப ஒளிபோல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. நசிகேதனுடைய வார்த்தையைக் கேட்டதும் அந்த பிரகாசம் குன்ற ஆரம்பித்தது. அவருடைய எல்லாப் புண்ணியங்களும் குறைந்து விட்டதாக அவருக்குத் தோன்றியது. தன்னைச் சமாளித்துக் கொண்டு பதில் கூறினர்.

"ஆமாம் குழந்தாய்!"

தந்தைக்கு அவர் செய்யும் தவறை எடுத்துக்காட்ட அந்த வார்த்தைப் போதுமென்று நினைத்தான் நசிகேதன். ஆனல் அவர் முன்போலவே கிழப்பசுக்களையே தானம் செய்துகொண்டிருந்தார். இதனல் வருத்தமடைந்த நசிகேதன் "தந்தையே என்னை யாருக்குத் தானம் செய்யப்போகிறீர்கள்" என்று கேட்டான், தைரியமாகவே. தனயனின் வார்த்தையைக் கேட்ட தந்தை சீறி எழுந்தார். ஆனல் வாய் திறவாமல் முன்போலவே கிழப் பசுக்களையே தானம் செய்துகொண்டிருந்தார் பண்டிதர்களுக்கும், புரோகிதர்களுக்கும். நசிகேதன் தன் வார்த்தையை மறுமுறை சொன்னன்.

"தந்தையே! என்னைப் பெறப்போகும் அந்தணரைக் காண்பியுங்கள். நானும் தங்களுடையவன் தானே? இது சர்வமேத யாகம் அல்லவா?"

நசிதேனின் தொந்தரவினல் உத்தாலகரின் சினத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. கையிலிருந்த தர்பை, அக்ஷதை, தீர்த்தம் எல்லாவற்றையும் கீழே உதறினர்.

"பாபாத்மாவே! உன்னை நான் யமனுக்கு தானம் செய்கிறேன்". இந்த வார்த்தை அவர் உள்ளத் தீ உமிழ்ந்த கனல் பந்தைப் போல் விழுந்து எழுந்தது.

நசிகேதன் யோசித்தான். "நான் யமலோகம் சென்று கொண்டிருக்கிறேன். என்னைப் பின்பற்றி மற்றவர்களும் அங்கு வருவார்கள். எனக்கு முன்னலும் பலர் அங்கு சென்றிருக்கிருர்கள். இறந்த மனிதன் பழுத்து நிலத்தில் விழுந்து மறுபடியும் முளைக்கும் தானியத்திற்குச் சமானமானவன்."

நசிகேதன் தந்தை சொற்படி யமலோகம் சென்று வெளியில் சென்றிருக்கும் யமதர்ம ராஜனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். மூன்று இரவுகள் கழிந்த பின் யமதர்ம ராஜன் திரும்பி வந்தார். சிறிதும் அச்சமின்றி பரம தேஜஸுடன் நிற்கும் பாலனைப் பார்த்து புன் சிரிப்புச் சிரித்தார் தர்ம ராஜர்.

'குமாரா! நீ யார் எந்த எண்ணத்துடன் இந்த உலகிற்கு வந்திருக்கிருய்' என்று கேட்டார்.

நசிகேதன் பேசுவதற்கு முன்னலேயே இரண்டு துவாரபாலகர்களும் கைகூப்பி வணங்கிச் சொன்னர்கள். "மகாராஜ்.

இந்த ரிஷி குமாரன் மூன்று இரவு பகலாக இங்கேயே உட்கார்ந்திருக்கிறான் அன்னபானமின்றி.'

யமதர்ம ராஜர் தன் நாட்டில் மூன்று நாட்கள் வரை ஓர் அதிதி கவனிக்கப்படாமல் அன்ன ஆகாரமின்றி இருந்ததற்காக மன்னிப்புக் கேட்கும் குரலில் கூறினர்.

"ஏ! அந்தண அதிதியே! என் உலகில் மூன்று நாள்வரை அதிதி ஸத்காரமில்லாமல் இருந்திருக்கிறாய். இதனால் என் அதிதி தர்மத்திற்கு பெரிய ஹானி ஏற்பட்டிருக்கிறது. அதனால் என்னிடமிருந்து மூன்று வரங்கள் கேள். நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன்' என்றார்.

நசிகேதன் பதில் கூறினன். "நான் என் தந்தையின் அருமைப் பிள்ளையாக இருந்தேன். அவருக்கு உதவி செய்ய வீட்டில் வேறு யாரும் இல்லை. நான் இங்கு வந்ததனால் அவர் மிகவும் வருந்துவார். அதனால் முதலாவதாக என் தந்தைக்கு என்னைப் பற்றிய வருத்தம் நீங்கி பூரண சௌக்கியத்துடன் இருக்கும்படி செய்யவேண்டும், என் மீதுள்ள கோபம் அவருக்குத் தணிய வேண்டும், என்ற வரத்தை யளியுங்கள்' என்றான். "என் ஆசீர்வாதத்தினால் உன் தந்தையின் எல்லாக் கவலைகளும் தீர்ந்துவிடும். அவர் கோபத்திலிருந்து விடுதலை பெறும்போது யமன் உலகிலிருந்து திரும்பி வந்த மகனை உன் முகத்தைப் பார்த்து மகிழ்ச்சி யடைவார். இப்பொழுது இரண்டாவது வரத்தைக் கேள்" என்றார் தர்மராஜர்.

"தேவனே! ஸ்வர்க்கத்தில் சுக சாம்ராஜ்யம் உள்ளது. இங்கு மரணபயமில்லை. மூப்பின் நடுக்கம் கிடையாது. பசியும், தாகமும் துன்புறுத்துவதில்லை. தாங்கள் இந்த உலகத்தின் முக்கிய அதிகாரி. ஸ்வர்க்க லோகத்தில் வசிப்பவர்கள் அமரத் தன்மையை அடைகிறார்கள். அதனால் அது எனக்கும் கிட்டட்டும். இதுவே என் இரண்டாவது ஆசை" என்றான்.

யம தர்மராஜனுக்கு இன்று முதன் முதலாக ஸ்வர்க்க சுகத்தைப் போதிக்கத் தகுந்த சிஷ்யன் கிடைத்தான். அதனால் அவர் உள்ளம் மகிழ்ச்சியில் பொங்கி வழிந்தது, தழதழத்த குரலில் கூறினர்.

"நசிகேதா. உனக்கு ஸ்வர்க்க வித்யை தானாகவே கிட்டும் மூன்றாவது வரத்தைக் கேள்" என்றார் தர்மர்.

"தேவா! தாங்கள் ஜீவன வித்யையின் ஆசாரியர், நான் அந்த வித்யையின் ரகஸ்யத்தை அறிய விரும்புகிறேன். இதைத் தவிர எனக்கு வேறு வரம் வேண்டாம்" என்றான் நசிகேதன்.

"குழந்தாய்! ஜீவன வித்யை தேவதைகளுக்கும் அறியமுடி

யாத ஒரு ரகஸ்யம். அதை அறிவது எளிதல்ல. நான் மரணத்தின் தலைவன். வேறு வரன்'' கேள்,'' என்றார் தர்மராஜர்.

''பகவானே! அந்த வித்யை தேவர்களுக்கும் கிடைக்கக் கூடாதது என்றால் எல்லாவித மான கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு அதை அடைய விரும்புகிறேன். தாங்கள் மரணத்தின் தலைவன் என்று கூறுகிறீர்கள். மரணத்தில் தலைவராயிருப்பதால் உங்களுக்கு வாழ்க்கையின் தத்துவமும் நன்கு தெரிந்திருக்கவேண்டும். இருளை அறிகிறவன் ஒளியையும் நன்கு அறிவான். தங்களைப் போல் வாழ்க்கைக் கலையை உபதேசிக்கும் பரமாசாரியார் எனக்குக் கிடைக்கமாட்டார். இதைத் தவிர வேறு வரம் எனக்கு வேண்டாம்'' என்று சிறுவனான நசிகேதன் உறுதியாய்க் கூறினான்.

''குமாரா, உலகத்தின் எல்லா ஐஸ்வர்யங்களையும் உனக்கு அளிக்கிறேன். வேண்டுமானால் மனிதனின் பூரண ஆயுளான நூறு வயதையும் உனக்கு அளிக்கிறேன். உலகிலுள்ள எல்லா ராஜ்யங்களையும், நீ விரும்பும் யானைகள், குதிரைகள், ரதங்கள் முதலியவற்றைக் கொடுக்கலாம். பணியாட்கள், அரண்மனைகள், போக போக்கியங்கள், அழகான பெண்கள், புத்திர பௌத்திரர்கள் முதலியவற்றை அளிக்கின்றேன். ஆனால் ஜீவன வித்யைமட்டும் கேட்காதே'' என்றார் தர்மராஜர்.

'' மரண தேவனே! இந்த எல்லாப் பொருள்களும் அழியக்கூடியவை. மரணத்திற்குப் பிறகு இவை எல்லாம் யாருடன் வருகிறது. நீண்ட ஆயுளும் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் முடிவடைகிறது. நான் ஜீவனின் ரகசியத்தைத் தான் அறிய விரும்புகிறேன். அதன் ரகசியத்தைப் புரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். மற்ற எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள்.''

'' முனி குமாரா! நீ கொடுத்து வைத்தவன். பாக்கியசாலி. உலகில் பிறக்கும் மனிதர்களின் முன்னிலையில் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று 'ச்ரேய' என்பது. அதாவது உண்மையான சுகமும், உண்மையான மங்களமும், மற்றொன்று 'ப்ரேய' என்பது. அதுதான் போகவிலாசம். ஐஸ்வரியங்களால் நிரம்பியது. ஆனால் இவை கோரமான துக்கத்திலும், கஷ்டங்களிலும் முடிவடைகின்றன. இந்தஇரண்டில் முதலாவது தான் 'உன்னயனம்'-முன்னேறுவதற்கு, மனித நிலைமையிலிருந்து தேவதைகளாக ஆவதற்கான மார்க்கம். இரண்டாவதான 'பதனம்' என்பது மனித நிலையிலிருந்து ராக்ஷஸத் தன்மையை அடையும் வழி. ச்ரேயோ மார்க்கம் மிகக் கடினமானது. ப்ரேயோ மார்க்கம் மிக எளிமையானது. பலவித ஏமாற்றங்களால் நிரம்பியது.

மனிதர்கள் இதை அறிந்து கொள்வதில் மிகவும் ஏமாற்ற மடைகின்றனர். குழந்தாய்! உன்னைப் போன்ற மிகவும் குறைவான விவேகியும் பாக்கிய சாலியுமான மனிதரில் சிலரே ச்ரேயோ மார்க்கத்தின் மகத்து வத்தை அறிந்துகொள்ளுகிறார் கள். நான் உனக்குப் பலவித ஆசைகளைக் காட்டியும், உன் கொள்கையில் பிடிவாதமா யிருக்கிறாய். பெரிய பெரிய தேவதைகளும் ரிஷிகளும் முனி புங்கவர்களும் இந்த ஆசைப் பொருள்களில் சஞ்சலமடை கின்றனர். நீ ஜீவன வித்யையை அறிந்து கொள்ளக்கூடிய உண்மையான அதிகாரி. ஆத லால் உனக்கு நிச்சயம் இந்த வித்யையை அளிக்கிறேன்''.

மாயைத்திரையினால் குருடரா யிருப்பவர்களுக்குத் திரைக்குப் பின்னால் ஒன்றும் தெரிவ தில்லை. அவர்கள் தங்கள் முன் னால் இருப்பவற்றையே உலக மாகவும் உலகத்தின் எல்லை யாகவும் அறிகிறார்கள். ஆகை யினால் அடிக்கடி மரண துக் கத்தை அனுபவிக்கிறார்கள். சேதனமான ஆத்மா பிறப்பற் றது. அமரத்தன்மை யுடை யது, அதற்கு ஒரு பொழுதும் அழிவு கிடையாது. உடலுக்கு அழிவு ஏற்படுகிறது. ஆத்மா அணுவிற்கு அணுவாகவும் பிரம்மாண்டமாகவும் ஜீவனா கிய குடத்தில் மறைந்து நிற் கிறது. எவர் ஆசாபாசங் களுக்கு அப்பாற்பட்டு உலக பந்தங்களிலிருந்து விடுபட்டிருக் கிறார்களோ அவர்களால் தெய் வத்தின் கருணையினால் ஆத்மா வின் நித்ய சௌந்தர்யத்தை கண்டு களிக்க முடியும்.

சரீரமாகிய ரதத்தில் இந்த ஆத்மா அமர்ந்திருக்கிறது. அறி வாகிய தேர்ப்பாகன் ரதத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறான், மனமாகிய கடிவாளம் தேர்ப் பாகன் கையில் உள்ளது. இந் திரியங்கள் அந்த ரதத்தை இழுத் துச் செல்லும் குதிரைகள். எதிரே உள்ள விஷயங்களின் கவர்ச்சி ரதம் செல்லும் பாதை. சரீரம், இந்திரியங்கள் மனம் இம் மூன்றும் ஆத்மாவுடன் முழு உடன்பாடு ஏற்படும் பொழுது நிரந்தர ஆனந்தத்தை அனுபவிக்கின்றவனாக ஆகின் றான்.

ஆனால் சாரதியான அறிவு சஞ்சல மடைந்ததும் அதன் கையிலுள்ள கடிவாளமாகிய மனம் துவளுகிறது. குதிரைக ளாகிய இந்திரியங்கள் தங்கள் இஷ்டப்படிச் செல்கின்றன. சாரதி உறுதியுடன் இருக்கும் பொழுது கடிவாளமாகிய மனத்தை துவள விடாமல் இறுக்கிப் பிடித்திருக்கிறது. கடிவாளத்தைச் சரியாகப் பிடித் திருப்பதால் இந்திரியங்களாகிய குதிரைகள் சரியான பாதையில் சென்று ச்ரேயோ மார்க்கத் தைப் பின்பற்றுகின்றன.

''அறிவில்லாதவன், கவனமற் றவன், பரிசுத்தமற்றவன் எப் பொழுதும் தன் லக்ஷியத்தி

லிருந்து நழுவி பிறப்பு இறப்பு என்ற தளையில் கட்டுண்டிருக்கிருன். ஆனல் அறிவுள்ளவன், கவனமுள்ளவன், பரிசுத்தமுள்ளவன் திரும்பாத நிலையை அடைகிருன். எவன் தன் மனமாகிய சாரதியை தளர்வடையச் செய்யாமலிருக்கின்ருனே அவன் வாழ்க்கை யாத்திரையின் இறுதி லக்ஷியமான விஷ்ணுலோகம் வரை அடைகின்ருன். நம் உடலில் வசிக்கும் பிரம்மம் உடலிலிருந்து பிரியும் பொழுது என்ன மிச்சமிருக்கின்றது ? மனித வாழ்விற்கு ஆதாரம் உச்வாச நிச்வாசமல்ல. அது வேறு ஒரு சக்தி. அந்தச் சக்தியைத் தான் உச்வாச நிச்வாசங்கள் ஆச்ரயித் திருக்கின்றன.

"நான் மரணத்திற்குப் பின் ஆத்மாவின் நிலை என்ன என்பதை உனக்கு உணர்த்துகிறேன். ஜீவன் புது உருவத்தை அடையும் பொருட்டு கர்ப்பத்தில் பிரவேசிக்கிறது. பஞ்ச தத்வங்கள் சிதறி ஆகாயம் ஆகாயத்துடனும், காற்று, காற்றுடனும், நெருப்பு நெருப்புடனும் நீர் நீருடனும் மண்ணுடனும் மறைந்து விடுகின்றன. எப்படி ஒரே காற்று அல்லது நெருப்பு பல பொருள்களில் நுழைந்து பல உருவங்களாக மாறுகின்றதோ அதே போல ஒரே ஆத்மா பல உருவங்களில் வெளிப்பட்டு பலவாருக மாறுகின்றது. எப்படி உலகத்திற்கு கண்ணுன சூரியனின் ஸ்பரிசம் பல அசுத்தப் பொருள்கள் மீது பட்டாலும் எப்படி அசுத்தமடைவதில்லையோ அதைப்போல எல்லாவற்றிலும் பரந்து நிற்கும் ஒரே ஆத்மா உலக சுகதுக்கங்களிலிருந்து விலகி நிற்கிறது. ஏனென்ருல் எல்லாவற்றிலும் பரவி இருந்தாலும் எல்லாவற்றிலிருந்தும் விலகி நிற்கின்றது. எல்லாவற்றிலும் வியாபித்துள்ள ஆத்மா ஒன்றுதான் எல்லாவற்றையும் அடக்கி ஆளக்கூடியது. எந்த அறிவாளி அதைத்தன் ஆத்மாவில் அறிகின்ருனே அவன் நிரந்தர ஆனந்தத்திற்கு உரியவன். ஆழ்ந்த சிந்தனையாளன்தான் எல்லாவற்றையும் பூர்த்தி செய்கிருன். அவன்தான் சாந்தி லோகத்தை அடைகின்ருன். அந்த சாந்திலோகத்தில் சூரியன் தன் ஒளியைப் பரப்புவதில்லை. சந்திரனும் தாரகைகளும் மின்னல்களும் தம் வேலையை அங்கு செய்வதில்லை. நெருப்பைப் பற்றி கேட்பானேன். ஆத்மா பிரகாசிக்கும் போது, உலகம் பூராவும் பிரகாசிக்கிறது. இதை அறிபவன் அமரத் தன்மையை அடைகிருன். அவனைக் காணும் பயத்தால் மரணம் ஓட்டமெடுக்கிறது. மரணத்திற்கு முன்பு இந்தத் தத்துவத்தை அறியாதவன் உலகில் அடிக்கடி பிறக்கிருன். ஆத்மா கண்களுக்குப் புலப்படுவது அல்ல. அதை அறிவினல் தான் அறியமுடியும்".

"குழந்தாய்! ஜீவன வித்யையின் மூலதத்துவம் இதுதான். எப்பொழுது மனிதனின் எல்லா விருப்பங்களும் பூர்த்தியடைகின்றதோ, எப்பொழுது மனம் எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபடுகின்றதோ, அந்தக் கரணத்தில் கருமையின் ரேகை கூடக் கிடையாதோ அப்பொழுது மரிக்கும் தன்மையுள்ள மனிதன் அமரனாகி அதே வாழ்க்கையில் பிரும்மத்தை அடைந்து பிரும்மத்தில் லயிக்கிறான். அவன் மரணத்தை அன்றே வெல்கிறான். நீ இப்பொழுது வீடு சென்று உன் தந்தையைத் திருப்திப்படுத்து" என்று யமதர்மராஜர் நசிகேதனுக்கு உயர்ந்ததான ஜீவன வித்யையை உபதேசித்து விடை கொடுத்து அனுப்பினார்.

—"பைங்காநாடு"

ஏட்டிக்குப் போட்டி

சுவிட்சர்லாந்து தேசம் நான்கு பக்கங்களும் மலையாலும் மற்ற தேசங்களாலும் சூழப்பட்டும் சமுத்திரமே இல்லாததுமான ஒரு சிறு ராஜ்யம்.

அந்த தேசத்தில் நடந்த ஒரு வைபவத்தில் ருஷ்ய தேசத்து ஸ்தானிகர் ஒரு சுவிட்சர்லாந்து சர்க்கார் அதிகாரியிடம் பேசிக் கொண்டிருந்தார். ருஷ்ய ஸ்தானிகர் சுவிட்சர்லாந்து தேச அதிகாரியிடம் "உங்களுக்கு என்ன வேலை" என்று கேட்டார்.

"நான் தான் சுவிட்சர்லாந்து தேச கப்பற் படை மந்திரி" என்றார் அதிகாரி. இதைக் கேட்ட ருஷ்ய ஸ்தானிகர் தாங்கமுடியாமல் சிரித்தார்.

"சமுத்திரமும் கப்பலுமில்லாத சுவிட்சர்லாந்து தேசத்திற்கு கப்பற் படை மந்திரி எப்படியிருக்க முடியும்" என்று கேட்டார். இதற்கு சுவிட்சர்லாந்து அதிகாரி "நீதியே யில்லாத ருஷ்யாவில் நீதி மந்திரி எவ்வாறிருக்கிறாரோ, அவ்வாறு தான்" என்று பதில் கூறினார்.

வாசஸ்தலத்திலே நீதிஸ்தலம்

●

ஜில்லாக்களில் நீதியும் நியாயமும் வழங்குவதற்கு ஜில்லா நீதிபதிகளை சர்க்கார் நியமித்துள்ளார்கள். எல்லா ஜில்லாக்களிலும் நீதிபதிகளை நியமித்திருந்தாலும் இந்த ஜில்லாக்களுடைய விஸ்தீரணத்தின் அளவினுல் பொதுமக்களுக்கு ஜில்லாக் கோர்ட்டுகளில் நியாயம் பெறுவதற்குச் சிரமமும் ஏராளமான பணச் செலவுமாகிறது.

இங்கிலாந்தில் கிரிமினல் வழக்குகளின் தீர்ப்புக்களுக்காகச் செய்துள்ள ஏற்பாடு, பொதுமக்களுக்கு இந்த விஷயத்தில் செலவையும் சிரமத்தையும் குறைப்பதற்கு ஒரு வழி காட்டியாயிருக்கிறது.

கோர்ட்டுகளும் நீதிபதிகளுமிருக்குமிடத்திற்குப் பொதுமக்கள் சிரமத்தோடும் பணச் செலவோடும் செல்வதற்குப் பதிலாக நீதிபதிகள் சர்க்காரின் செலவிலேயே எல்லா நகரங்களுக்கும் சென்று கிரிமினல் வழக்குகளில் தீர்ப்பளிக்கிருர்கள். வருஷத்தில் ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவைகளோ அந்தந்த நகரங்களின் தேவைக்கேற்றவாறு நீதிபதிகள் அந்தந்த நகரங்களுக்குச் சென்று கிரிமினல் வழக்குகளில் தீர்ப்பளிக்கிருர்கள். இந்த ஏற்பாடு இங்கிலாந்தில் சென்ற எண்ணூறு ஆண்டுகளாய் இருந்துவருகிறது. நீதிபதி ஒரு நகரத்துக்கு வரும் வழியில் அந்த நகரத்து எல்லையிலே நகர அதிகாரிகள் அவரை ஆடம்பரமாக வரவேற்பார்கள். அந்த நகரத்தில் வழக்குகளில் தீர்ப்பு அளிக்கும் வேலை தீரும் வரை அவருக்கு ஜாகை வசதிகள் செய்து கொடுப்பார்கள். தினந்தோறும் அந்த ஊர் நகரசபை ஆபீஸில் வழக்குகளின் விசாரணை நடக்கும். நீதிபதி முதல் தடவை வந்திருந்த பின்னர் ஏற்பட்ட வழக்குகளுக் கெல்லாம் தீர்ப்பளித்து திரும்பிவிடுவார். சில்லறை வழக்குகள்

பெரிய வழக்குகள், எல்லாவற்றிற்கும் தீர்ப்பளிப்பார். கொலைக் குற்றம் புரிந்த குற்றவாளிகளுக்கு மரண தண்டனையும் விதிப்பார்.

நீதிபதியை வரவேற்பது வழக்குகள் நடக்கும் போது அனுசரிக்க வேண்டிய மரியாதைகள் முதலிய யாவும் கடந்த எண்ணூறு வருஷங்களாய் அனுஷ்டானத்திலுள்ளவை. அம்மாதிரி பழமையான அனுஷ்டானங்களை எள்ளளவு கூட மாற்றுவதற்கு பிரிட்டிஷார் விரும்புவதில்லை.

தினந்தோறும் நீதிபதியை அவர் வாசஸ்தலத்திலிருந்து கோர்ட்டுக்கு ஆடம்பரத்தோடு அழைத்துச் செல்வார்கள். மாலையில் கோர்ட்டு வேலை முடிந்தபின்னர் திரும்பி ஆடம்பரத்தோடு அவர் வாசஸ்தலத்திற்கு கொண்டுவந்து விடுவார்கள்.

இம்மாதிரி ஏற்பாட்டினால் கிராமங்களிலுள்ள மக்களுக்குச் சிரமமும் செலவும் எவ்வளவு குறைவென்று கூறவேண்டியதில்லை !

NANJUNDAN & CO.,

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams : "BOOCHI" Phone { Res : 603 / Office At 657

Agents For :

Complete Range of Textool Textile Spinning Machinery

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE.

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

சென்னை-600 008

(18751)

Edited, printed and published by E. Balasubramaniam at the K. M. S. Press, 1-C 17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor :- N. S. Mani.

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by :

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room:
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.